# கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகள் (LLRC)

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகள் (LLRC)

பதிப்பாசிரியர் :

**சட்டத்தரணி எஸ்.ஜீ.புஞ்சிஹேவா**

தமிழாக்கம் :

**திரு. எஸ். சிவகுருநாதன்**

CPA

Centre for Policy Alternatives

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்ற பாடங்களும் * நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகள் (LLRC)

ISBN : *978-955-1655-88-4*
முதற் பதிப்பு : *ஆகஸ்ட் 2012*
கணனி வடிவமைப்பு : *கமலாதேவி சசிசந்திரன்*
அச்சுப் பதிப்பு : *க்ளோப் பிரின்டிங் வேர்க்ஸ் தொ.பே: 011-2689259*
வெளியீடு : *மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்*

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையமென்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் அதனுடன் இணைந்த பிரச்சினைகள் மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும், 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்கள் மீதான கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல் மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

விலாசம் : *24/2, 28வது ஒழுங்கை,*
*ப்ஃளவர் வீதி, கொழும்பு - 07*
தொலைபேசி : ***+94(11) 2565304/5/6***
ஃபக்ஸ் : ***+94(11) 4714460***
இணையதளம் : ***www.cpalanka.org***
மின் அஞ்சல் : ***info@cpalanka.org***

* *Lessons Learnt என்பது கற்ற பாடங்கள் என்றே மேற்படி ஆணைக்குழு அதன் ஆரம்பம் முதல் பயன்படுத்தியதால் நாமும் அப்பிரயோகத்தைப் பயன்படுத்தியுள்ளோம் ஆனால் தமிழில் இப்பதப் பிரயோகம் படிப்பினை தரும் செய்திகள் என்றே அமைய வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

2009 ஆம் ஆண்டில் யுத்தம் நிறைவுபெற்ற பின்னர் வெளியிடப்பட்ட ஆணைக்குழு அறிக்கைகளில் "கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு அறிக்கை" (**LLRC**) மிக முக்கியமான அறிக்கையாகும். அதே சமயம், இவ்வறிக்கை 1990களில் இளைஞர் விவகார ஆணைக்குழு அறிக்கையோடு ஒப்பிடுகையில், சுதந்திரத்தின் பின்னர், இன்றைய இலங்கையைப் பற்றி வெளியிடப்பட்ட மிக முக்கிய அறிக்கை இதுவென ஒருவர் கூறலாம். ஆனால், துரதிர்ஷ்டவசமாக இவ்வறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு 7 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும், இலங்கையின் அரச கரும மொழிகளான சிங்களத்திலோ அல்லது தமிழிலோ முழுமையாக வெளியிடப்படவில்லை. மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் (**CPA**) இவ்வறிக்கையின் பரிந்துரைகளை உள்ளடக்கிய ஒன்பதாவது அத்தியாயத்தை ஏற்கனவே சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்த்து வெளியிட்டது. தற்போது LLRC பரிந்துரைகளைப் பற்றிய ஆய்வுரையோடு, வாசிப்பதற்கு வசதியான இலகு மொழியில் இதனை வெளியிட்டு வைக்கின்றோம். LLRC அறிக்கையின் உள்ளடக்கத்தை அறியும் உரிமை இந்நாட்டுப் பிரஜைகளுக்கு உண்டு என்ற நம்பிக்கையுடனேயே இதனை இலகு மொழியில் வெளியிடுகிறோம். அதே சமயம், இலங்கையைப் போலவே வெளிநாடுகளிலும் வாழும் தமது ஆதரவாளர்களையும் விமர்சகர்களையும் நோக்கி மனித உரிமைகள் அறிக்கையும், அவற்றின் மீறல்களும் குறைபாடுகளும் பற்றி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, அரசுக்குரிய அர்ப்பணிப்புப் பற்றிய சகல சந்தேகங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் விமர்சனங்களுக்கும் **LLRC** அறிக்கை மூலம் விடை கிடைப்பதாக இலங்கை அரசாங்கம் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலுமுள்ள தமது ஆதரவாளர்களுக்கும் உதவியாளர்களுக்கும் விமர்சகர்களுக்கும் உறுதியாகக் கூறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தின் மனித உரிமைகள் அறிக்கையும் அதன் குறைபாடுகள், மீறல்கள் என்பவற்றிற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு LLRC அறிக்கை விடையளிக்கின்றது.

LLRC அறிக்கையையும் அதன் பரிந்துரைகளையும் அமுல்படுத்துவது மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து நாடு பூராவும் ஓர் கலந்துரையாடலை ஏற்படுத்துவது நல்லிணக்கச் செயற்பாட்டிற்கும். நாட்டின் ஐக்கியத்திற்கும் பெரிதும் உதவும். சிருஷ்டிகரமானதும் அறிவுபூர்வமானதுமான ஓர் கலந்துரையாடலை நாடு பூராவும் உருவாக்குவதாயின், அறிக்கையையும் அதன் பரிந்துரைகளைப் பற்றியும் நாட்டின் பிரஜைகளுக்கு அறிவூட்ட வேண்டும்.

**LLRC** அறிக்கையின் ஒன்பதாவது அத்தியாயத்தை மிகச் சரளமான மொழியில் சிங்களத்தில் சட்டத்தரணி எஸ்.ஜீ புஞ்சிஹேவா மொழிபெயர்த்ததோடு, அது தமிழ் மொழியில் எஸ். சிவகுருநாதனால் தமிழாக்கம் செய்யப்பட்டது. அத்தோடு இந்நூலின் வரைவுப் பிரதியை வாசித்து தமது கருத்துக்களை வழங்கிய அனைவருக்கும் நாம் நன்றியுடையோம்.

LLRC பரிந்துரைகளை சரளமாகப் புரிந்துகொள்வதற்கு இவ்வெளியீடு உதவும் என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் எதிர்பார்க்கின்றது.

**கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து**
நிறைவேற்றுப் பணிப்பாளர்
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்

**ஆணைக்குழு பற்றிய தகவல்கள்** 1

**அத்தியாயம் 01**

கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு அறிக்கை மற்றும் அதன் உள்ளடக்கம் தொடர்பான குறிப்புகள் 5

**கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் (LLRC) பரிந்துரைகளும் அவதானிப்புகளும்** 15

முக்கிய அவதானிப்புகளினதும் பரிந்துரைகளினதும் சாராம்சம் 15

**அத்தியாயம் 02**

யுத்த நிறுத்தம் மீதான அவதானிப்புகள் 15

**அத்தியாயம் 03**

நடந்தேறிய நிகழ்ச்சிகளின் விபரம் 16

**அத்தியாயம் 04**

மோதல்களின் இறுதிக் கட்டம் தொடர்பாக சர்வதேச மனிதாபிமான சட்டப் பிரச்சனைகளின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள். 16

படைப்பகுதி நீக்கம் பெற்ற வரம்பெல்லை (No Fire Zones) 17

பொதுமக்களின் உயிர் இழப்புகள் அல்லது காயங்கள் ஏற்பட்ட விசேட சந்தர்ப்பங்கள் 18

வைத்தியசாலைகள்/தற்காலிக வைத்திய சாலைகள் 19

மோதல் பகுதிகளில் பொதுமக்களுக்கு உணவு மற்றும் மருந்துகள் உட்பட மனிதாபிமான நிவாரணங்களின் விநியோகம் 20

மருத்துவ சேவை வழங்கல்கள் 22

சரணடைதல் / கைதாதல் என்பவற்றின் பின்னர் காணாமல் போனதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் 23

எல்.ரீ.ரீ.ஈ. இனரின் நடத்தை 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு மோதல்களுக்கு சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் பிரயோகங்கள் மீதான அவதானிப்பு **26**

பாதிக்கப்பட்டவர்கள் மீதான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் **27**

சனல் 4 வீடியோ காட்சி மீதான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் **30**

அத்தியாயம் 5

மனித உரிமைகள் மீதான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் **32**

காணமற் போதல் மற்றும் ஆட்கடத்தல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் **33**

தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்கான கவனிப்பு **39**

சட்ட விரோத ஆயுதக் குழுக்கள் **42**

சிறுவர்களின் கட்டாய ஆட்சேர்ப்பு **43**

அபாய வாய்ப்பு நிலைகொண்ட குழுவினர் (பொதுவானவை) **45**

பெண்கள் **46**

சிறுவர்கள் **49**

முதியோர்கள் **50**

உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் **51**

வடக்கு மற்றும் கிழக்கில் முஸ்லிம் சமூகம் தொடர்பான கரிசணைகள் **54**

பேச்சுச் சுதந்திரம் மற்றும் தகவல்களுக்கான உரிமை **55**

மத வழிபாட்டுச் சுதந்திரம், ஒன்று கூடும் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம் **57**

கடந்த கால விசாரணை ஆணைக்குழு அறிக்கைகள் தொடர்பான பிற்தொடர்ச்சி நடவடிக்கைகள் **58**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 06

காணிப்பிரச்சினைகள் மீதான அவதானிப்புகள். தமது காணிகளுக்கு மீளத் திரும்புதலும் மீள் குடியேற்றமும் 58

அத்தியாயம் - 07

மீள் அளிப்பு இழப்பீட்டு நிவாரணங்கள் மீதான அவதானிப்புகளும் பரிந்துரைகளும் 70

அத்தியாயம் -08

நல்லிணக்கம் பிரிவு -I போருக்குப் பின்னரான நல்லிணக்கம் மீது தாக்கங்களை ஏற்படுத்தும் விடயங்கள் மீதான அவதானிப்புகள் 75

அத்தியாயம் - 08

நல்லிணக்கம் பிரிவு II நல்லிணக்கம் மீதான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் 79

தமிழ் சமூகத்தின் மனக்குறைகள் 83

இலங்கையின் பெரும்பான்மை / சிறுபான்மை இனங்களுக்கிடையிலான உறவுகள் தொடர்பான வரலாற்றுப் பின்னணி 83

முஸ்லிம் சமூகத்தின் மனக்குறைகள் 85

போர் நடந்த பிரதேசங்களுக்கு அண்மையில் அமைந்த கிராமங்களில் வாழ்ந்த சிங்கள மக்களின் மனக் குறைகள் 86

இந்திய வம்சாவழித் தமிழர்களின் மனக் குறைகள் 87.

மனக்குறைகள் மீது கவனம் செலுத்துதல் மற்றும் நல்லிணக்கத்தினை முன்னேற்றுதல் தொடர்பான பிரச்சினைகள் - சட்டத்தின் ஆட்சியை நடைமுறைப்படுத்தாமை 88

ஆட்சி தொடர்பான பிரச்சினைகள் 94

பிரஜைகளின் மனக்குறைகளை கையாள்வதற்கான ஒரு விசேட நிறுவனம் 94

ஏனைய நடைமுறைகள் 96



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரப்பகிர்விற்கான தேவை 98

மொழிக்கொள்கை 103

கல்வி க்கான சமவாய்ப்புக்கள் 106

சமாதானக் கல்வி 108

புலம்பெயர்ந்தவர்கள் 109

சர்வமத நடவடிக்கைகளும் நல்லிணக்கத்திற்கான மதங்களின் பங்களிப்பும் 112

கலையும் கலாசாரமும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கான கருவிகளாக மொழிகளுக்கும் கலாசாரங்களுக்குமிடையிலான உறவு நிலை. 114

தேசிய இனங்களுக்கிடையே பரஸ்பர உறவுகள் 117

அரசியல் இணக்கப்பாட்டின் அவசியம் 119

**LLRC பரிந்துரைகளின் அண்மித்த வரலாறு 123**

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழு - தருஸ்மான் அறிக்கையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பின்வருமாறு: 125

தேசப்பற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பும் 127

ஐரோப்பிய ஆணைக்குழுவின் பரிந்துரைகள் (GSP+) 129

ஜெனீவாப் பிரேரணைகள் 132

அதிகாரத்தை குவிமையப்படுத்தும் அரசியல் 134

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (LLRC) வெளியிட்ட அறிக்கை 138



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: Frontline India

ஆணைக்குழு அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தல்...

## ஆணைக்குழு பற்றிய தகவல்கள்

**பெயர்** : கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு

**(Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation – LLRC)**

**சட்டம்** : விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் உறுப்புரை 2

**நியமனத் திகதி** : 2010 மே 15ம் திகதி மேதகு ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்டது.

**இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட திகதி** : 2010 நவம்பர் 11

**ஆணைக்குழு இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட திகதி** : 2011 நவம்பர் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட திகதி** : 2011 டிசம்பர் 17

**கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் சாட்சிகள் :**

1. கிடைத்த பிரதிநிதித்துவங்களின் எண்ணிக்கை - 266 (பிற்சேர்க்கை 1.2)

2. வாய்மொழி மூல சாட்சிகளுக்காக அழைக்கப்பட்டோரின் எண்ணிக்கை - 49 (பிற்சேர்க்கை 1.3)

3. எழுத்து மூல கோரிக்கை விடுக்கப்பட்டு பொழும்பில் வாய்மொழி மூல சாட்சி வழங்கியோர் எண்ணிக்கை 138 (பிற்சேர்க்கை 1.3)

4. ஆணைக்குழு கொழும்பிற்கு வெளியே நடத்திய கூட்டத்தொடர்களின் எண்ணிக்கை 47 (பிற்சேர்க்கை 1.4)

**விசாரணைக்கு உட்பட்ட கால எல்லை** : 2002 பெப்ரவரி 21 முதல் 2009 மே 19ம் திகதி வரையிலான சம்பவங்கள்

**ஒப்படைக்கப்பட்ட கடமைகள்** : 2002 -02-21 முதல் 2009-05-19ம் திகதி வரையிலான பின்வரும் விடயங்கள் பற்றிய விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பித்தல்.

**விடயங்கள் :**

I. 2002-02-21ம் திகதி அமுலாக்கப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் தோல்வி அடைந்தமைக்கான காரணிகளும் அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: Daily Mirror / Photo Courtesy of Sri Lanka Guardian Website

ஆணைக்குழு உறுப்பினர்கள்

பின்னர் 2009-05-19 வரை இடம்பெற்ற சம்பவங்களும்

II. மேற்படி சம்பவங்கள் தொடர்பாக ஒரு நபரோ அல்லது குழுமமோ மறைமுகமாக பொறுப்புக்கூற வேண்டுமா?

III. இச்சம்பவங்கள் மூலம் நாம் கற்க வேண்டிய பாடங்களும் இத்தகைய சம்பவங்கள் எதிர் காலத்தில் இடம்பெறாமலும் இருக்கத்தக்கதாக நாம் கண்டறிய வேண்டிய விடயங்கள்.

IV. மேற்படி சம்பவங்கள் காரணமாக பாதிப்புக்குள்ளான தனி நபர் அல்லது தங்கி வாழ்வோர் அல்லது உரித்தாளர் இயல்பு நிலைக்கு உட்படுத்த எடுக்க வேண்டிய வழி முறைகள்

V. இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாத வகையில் சகல சமூகங்களிடையே ஒற்றுமையையும் தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லிணக்கத்தையும் மேம்படுத்துவதற்கு இவ் ஆணைப்பத்திரத்தின் கீழ் விசாரணைக்கு உட்படுத்த வேண்டிய விடயங்கள் பற்றி மேற்கொள்ள வேண்டிய பரிந்துரைகளின் பொருட்டு மேற்கொள்ள வேண்டிய நிறுவன நிர்வாக சட்ட நடவடிக்கைகள் யாவை?

## ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்

1. திரு. சீ.ஆர்.டீ. சில்வா - ஜனாதிபதி சட்டத்தரணி, தவிசாளர்
2. கலாநிதி திரு. ஏ. ரொஹான் பெரேரா
3. பேராசிரியர் திரு. கருணாரத்ன ஹங்கவத்த
4. திரு. சீ. சண்முகம்
5. திரு. எச்.எம்.ஜீ. சிரிபால பல்லி'ஹக்கார
6. திருமதி. மனோஹரி இராமநாதன்
7. திரு. எம். பராக்கிரம பரணகம (செயலாளர்)
8. திரு. எச்.ரீ.எம். பஃபீக்

சிக்கலான தன்மை காரணமாக வேண்டுமென்றே சட்டங்கள் மீறப்படவில்லை" (9.27 முதல் 9.37 வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: Ceylon-Ananda Blog

LLRC *முன்னிலையில் சாட்சி கூறியதும் ஒரு சந்தர்ப்பம்*

அத்தியாயம் I

# கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு அறிக்கை மற்றும் அதன் உள்ளடக்கம் தொடர்பான குறிப்புகள்

## அறிமுகமும் முறைமையும்

- ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகள் (பிறிதோர் இடத்தில் விபரிக்கப்பட்டுள்ளது)
- எழுத்து மூலமும் வாய்மொழி மூலமும் சாட்சிகளை பெற்றுக்கொள்வது பற்றிய முறையை நடைமுறைப்படுத்துவது பற்றி
- தாம் விரும்பிய மொழியில் சாட்சி கூற முடியும். ஆனால் இறுதி அறிக்கை ஆங்கிலத்தில் வெளியிடப்படும் நிபுணத்துவ அறிவுடையவர்கள் ஆணைக்குழு முன்னே அழைக்கப்படுவர்.
- விசேட அறிவுடைய நபர்கள் ஆணைக்குழு முன் சாட்சி கூற அழைக்கப்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டாரநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கையை கைச்சாத்திட்ட பின்னர்....

Photo source: Lanka Standard website / Courtesy of The Hindu

## அத்தியாயம் II

## போர் நிறுத்த ஒப்பந்தம்

- 2002-02-21 முதல் 2009-05-19 வரையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தின் தாக்கம்

- போர் ஏற்படுவதற்கான காரணங்கள் சாட்சிகள் மூலம் சமர்ப்பிக்கப்பட்டமை

i. பொருளாதார சீர்குலைவு காரணமாக ஏற்பட்ட அதிருப்தி

ii. பாரபட்சமான கவனிப்பு

அ). கல்வித் துறையிலும் தொழில் வாய்ப்புக்களிலும் பாரபட்சம் ஏற்பட்டமை

ஆ). மொழிக்கொள்கை செயற்படுத்தப்படாமை

இ). அதிகாரத்தைப் பகிர்கின்ற போது வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு போதிய அளவு அதிகாரங்கள் வழங்கப்படாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Photo source: Associated Press Photo by Gurinder Osan

இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்ட முஸ்லீம் மக்கள்

ஈ). 1950 களிலிருந்து தீர்வு காண்பதற்கு மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்காமை.

உ). ஒப்பந்தம் அமுலாக்கும் போது அரசியல் ரீதியாகவும் யுத்த ரீதியாகவும் பலவீனமான ஓர் ஆட்சி நிலவியமை

ஊ). முஸ்லிம் மக்கள் பற்றிக் கவனம் செலுத்தப்படாமை

எ). வசதி செய்பவரின் (Facilitator) நடவடிக்கைகள் தோல்வி காணுதல்

ஏ). அரசியற் கட்சிகளிடையே காணப்பட்ட ஒற்றுமையீனம்

ஐ) எல்ரீரீஈ இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Photo source: Ministry of Defence

*எல்.ரீ.ரீ.ஈ. போராளிகளாக பிள்ளைகளை இணைத்தல்*

## அத்தியாயம் III

## பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகள் பற்றிய ஆய்வு

- போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்பு அரசியல் தீர்விற்கு இருந்த சந்தர்ப்பம் மட்டுப்படுத்தப் படல்

- கிழக்கு மாகாண இராணுவ நடவடிக்கைகள் மூலம் மாவில்-ஆறு மீண்டும் கைப்பற்றிக் கொள்ளல்

- 2007 பெப்ரவரியில் வன்னியில் போர் நடவடிக்கைகளின் ஆரம்பம்

- வவுனியா, மன்னார், பிரதேசங்களுக்குப் பின்னர் 2009-04-05 புதுக்குடியிருப்புப் பிரதேசம் விடுவிக்கப்படல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: Jananibarathy.wordpress.com

*மனித நேய சட்டங்கள் மீறப்படுதல்*

- 2006 முதல் 2009 வரை இராணுவத்திலிருந்து 5,556 பேரும் எல்ரீரீஈ தரப்பிலிருந்து 22,247 இறந்துள்ளமை.

## அத்தியாயம் IV

## மனித நேயச் சட்டம் பற்றிய பிரச்சினைகள்

- சர்வதேச மனிதநேய சட்டங்களின் கோட்பாடுகள்
- 1949இல் கைச்சாத்திடப்பட்ட 4 ஜெனீவா சமவாயங்கள். 1977 இல் கைச்சாத்திடப்பட்ட இரண்டு விசேட சமவாயங்கள், 2000ஆம் ஆண்டில் சிறுவர்களை படைகளில் இணைத்துக் கொள்ளல் பற்றிய சமவாயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: riyasewana.com

*வெள்ளை வேன் பயங்கரத்திற்கு முற்றுப்புள்ளி வைப்போமா?*

- உள்நாட்டு மோதல்கள் பற்றிய பொது உறுப்புரை-(03)
- சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழ் போராளிகளை பொது மக்களிடமிருந்து வேறாக அடையாளம் காணுதல் (2000 ஐ.நா தீர்மானம்)
- பொதுமக்கள் வாழும் இடங்களும் - இராணுவத்தினதும் குறிக்கோள்களை வெவ்வேறாக அடையாளம் காணுதல்.
- விகிதாசார கோட்பாடுகளை அனுசரித்தல் - அதாவது எதிர்பார்க்கக்கூடிய தாக்குதல்களை மீறி பொதுமக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஆயுதப் பிரயோகம் தடை செய்யப்பட்டுள்ளமை.
- யுத்த சூனிய பிராந்தியங்களை பிரகடனப்படுத்துதல்
- துப்பாக்கிப் பிரயோகங்களின் போது கொலை செய்யப்படுதல்
- வைத்தியசாலைகள்/தற்காலிக வைத்திய சாலைகள் என்பவற்றைத் தாக்குதல்.
- உணவு, மருந்து உட்பட மனித நேய உதவிகளை வழங்குதல்
- 2009 ஜனவரி முதல் நிலமை
- இடம்பெயர்ந்த மக்கள் பற்றிய எண்ணிக்கையும் தரவுகளும்
- வைத்திய வசதிகளை வழங்குதல்
- மனித நேயச் சட்டங்கள் மீறப்படல் பற்றிய ஆய்வு
- விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பொது மக்களும் போராளிகளும் வருகை தரும் போது பாதுகாப்புப் படைகளின் நடத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் V

## மனித உரிமைகள்

- இலங்கையின் அரசியல் அமைப்பு - நிறைவேற்று நிர்வாக ஏற்பாடுகள்
- 7 சர்வதேச சமவாயங்களின் கீழ் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் கடப்பாடு கொண்டுள்ளது.
- மோதல் காரணமாக ஏற்பட்ட மனித உரிமைப் பிரச்சினைகள் - கடத்தல்கள், காணாமற் போதல்கள், சரணடைந்தோர்
- வெள்ளை வேன் பிரச்சினை
- சட்டவிரோதமான ஆயுதக் குழுக்கள்
- பெண்கள், சிறுவர்கள் மற்றும் வயோதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்
- வலது குறைந்தோர், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் பற்றிய பிரச்சினைகள்
- வடக்கு கிழக்கு மாகாணங்களின் முஸ்லிம் மக்கள் தொடர்பான பிரச்சினைகள்
- கருத்துச் சுதந்திரம் மற்றும் தகவல்களைப் பெறும் சுதந்திரம்
- வழிபாட்டுச் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம்



Photo source: Centre for Human Rights



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: Website of the Ministry of Resettement

அத்தியாயம் VI

## காணிப் பிரச்சினைகள், மீள் வருகை, மீள் குடியேற்றம்

- மோதல் காரணமாக காணிகளை இழந்தோர்
- மனிதக் கேடயத்திற்கு இரையானோர், யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டோர்
- கிழக்கு மாகாணத்தின் காணிகளை பறிமுதல் செய்தமையால் தமது வசிப்பிடங்களை இழந்தோர்.
- கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்த சிங்கள மக்கள் தமது விவசாயக் காணிகளை இழத்தல்
- வடமாகாணத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம் மக்கள்
- மீள் வருகையும் மீள் குடியேற்றமும்
- அதி உயர் பாதுகாப்பு வளையங்களில் காணிகளை இழந்தோர்.
- காணி உரிமை தொடர்பான ஆவணங்களை இழந்தோர், போலி ஆவணங்கள் மூலம் காணிகளை உரித்தாக்கிக் கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Photo source: Courtesy of CPA

அத்தியாயம் VII

## இயல்பு நிலையை ஏற்படுத்துதலும் நஷ்ட ஈடு நிவாரணம் வழங்கலும்

- நிர்வாக ஏற்பாடுகள்

அத்தியாயம் VIII

## நல்லிணக்கம்

- யுத்தத்தின் பின்னர் அனுசரிக்க வேண்டிய அடிப்படைக் கோட்பாடுகள்
- மீள் குடியேற்றம், வீடமைப்பு வசதிகள், வாழ்வாதாரம்
- வடக்கு கிழக்கு மாகாணங்களின் கல்வித் தேவைகள்
- மீன்பிடி, விவசாய வசதிகள்
- வைத்திய வசதிகள்
- கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களை மீளக் குடியமர்த்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மிதி வெடிகளை அகற்றுதல்

- உயர் பாதுகாப்பு வலயங்களும் பாதுகாப்புப் படையினர் காரணமாக ஏற்படும் தடைகளை நீக்குதலும்
- மிதி வெடிகளை அகற்றுதல்
- யுத்தத்தின் பின்னர் புலம்பெயர் சமூகத்தின் (diaspora) பிரச்சினைகள்
- தமிழ் மக்களின் மனக்குறைகளைப் பற்றிய கூருணர்வு
- அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் அவசியம்
- மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்தல்.
- சம சந்தர்ப்பமும் சம கல்வியும்

## அத்தியாயம் IX

### 285 பரிந்துரைகள்

- மேற்கூறிய அத்தியாயங்களில் குறிப்பிடப்படும் விடயங்களுக்கு ஏற்புடைய பரிந்துரைகள் இவ்வத்தியாயத்தில் குறிப்பிடப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் (LLRC) பரிந்துரைகளும் அவதானிப்புகளும்

## முக்கியமான அவதானிப்புகளினதும் பரிந்துரைகளினதும் சாராம்சம்

(கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளும் பரிந்துரைகளும் இங்கு தரப்பட்டுள்ளன. இரண்டாம் அத்தியாயத்திலிருந்து எட்டாம் அத்தியாயம் வரையிலான அவதானிப்புகளினதும் பரிந்துரைகளினதும் மொத்த எண்ணிக்கை 285. அவை அனைத்தும் 9ஆம் அத்தியாயமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அவதானிப்பு களினதும் பரிந்துரைகளினதும் சாராம்சம் கீழே தரப்பட்டுள்ளன.

## அத்தியாயம் 02
## யுத்த நிறுத்தம் மீதான அவதானிப்புகள்

9.1 எவ்வளவு ஸ்திரமற்றதாகவும் பயனுறுதியற்றதாகவும் இருந்தபோதிலும், யுத்த நிறுத்த ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட தரப்புகள் அனைத்தும் பேச்சுவார்த்தை மூலமானதொரு தீர்வுக்கு இட்டுச் செல்லக்கூடியதொரு செயல்முறைக்கு ஓர் அத்திவாரம் இட்டது. ஆனால், அது வெற்றி அளிக்கவில்லை.

9.2 புரிந்துணர்வு மற்றும் செயற்பாடுகளின் குறைபாடு காரணமாகவும், சமாதான செயன்முறைகளின் அனுசரணையாளராகவும் கண்காணிப்புக் குழுவின் தலைமைத் துவத்தையும் பொறுப்பேற்று செயற்பட்ட நோர்வேயின் பலவீனமான இரட்டை

> “புரிந்துணர்வு மற்றும் செயற்பாடுகளின் குறைபாடு காரணமாகவும், சமாதான செயன்முறைகளின் அனுசரணையாளராகவும் கண்காணிப்புக் குழுவின் தலைமைத் துவத்தையும் பொறுப்பேற்று செயற்பட்ட நோர்வேயின் பலவீனமான இரட்டை நடைமுறை காரணமாக அரச மற்றும் அரச சார்பற்ற இரு தரப்பினரிடையே நிலைபேறான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு வெற்றிகரமான மாதிரியென அது நிரூபிக்கப்படவில்லை.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ரணில் விக்கிரமசிங்க அவர்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் கைசாத்திட்ட பின்னர்...

நடைமுறை காரணமாக அரச மற்றும் அரச சார்பற்ற இரு தரப்பினரிடையே நிலைபேறான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு வெற்றிகரமான மாதிரியென அது நிரூபிக்கப்படவில்லை.

9.3 யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் கருத்தியல் மற்றும் அதன் உறுப்புரைகளின் காரணமாக எல்.ரீ.ரீ.ஈ. அவற்றை நன்கு பயன்படுத்திக்கொண்டதுடன், சட்டவிரோத ஆயுதங்களை கையளிக்காமல் தொடர்ந்தும் ஆயுதங்களை வெளிநாடுகளில் இருந்து கொண்டு வந்தது. மனித உரிமைகள் கடப்பாடுகளை மீறியதோடு சிறுவர்களை தனது படைகளில் ஈடுபடுத்தியது.

## அத்தியாயம் 03
## நடந்தேறிய நிகழ்ச்சிகளின் விபரம்

## அத்தியாயம் 04
## மோதல்களின் இறுதிக் கட்டம் தொடர்பாக சர்வதேச மனிதாபிமான சட்டப் பிரச்சனைகளின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள்.

> “அவை அனைத்தும் 9ஆம் அத்தியாயமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அவதானிப்பு களினதும் பரிந்துரைகளினதும் சாராம்சம் கீழே தரப்பட்டுள்ளன.”

9.4 சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை ஆராய்கையில் ஆணைக்குழு திருப்தி அடைகிறது. பொதுமக்களின் பாதுகாப்புக்கு இராணுவம் உச்சகட்ட முன்னுரிமை அளித்துள்ளது. பொது மக்களின் பாதிப்பைத் தவிர்ப்பதற்கு அல்லது அவற்றைக் குறைப்பதற்கு இறுதிக் கட்டங்களில் பாதுகாப்புப் படைகளின் நகர்வுகள் திட்ட மிடப்பட்ட மந்த கதியைக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.5. இராணுவ நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கான கொள்கை ஒன்றின் உருவாக்கத்தில் பொதுமக்களின் உயிர் பாதுகாப்பு முக்கிய அம்சமாகும். அத்தியாயம் 4 இன் IIஆம் பிரிவின் 04.106 முதல் 4.111 வரையான சாட்சிகளின் மூலம் திட்டமிட்டே பொதுமக்கள் இலக்காகக் கொள்ளப்பட்டனர் என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

(4.106 முதல் 4.111 வரை பொதுமக்களின் சாட்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. கடற் படையினரின் தாக்குதல் மூலமும் வேறு படைப்பிரிவினரின் தாக்குதல்கள் மூலமும் ஒரு சிலர் இறந்ததாகக் கூறப்படுகிறது. இவ்விடங்களில் எல்.ரீ.ரீ.ஈ. உறுப்பினர்கள் இருந்ததாகவும் காயமடைந்தோருக்கும் அவர்களுக்கும் அரச படை கவனித்ததாகவும் மேற்படி சாட்சிகளில் குறிப்பிடப்பட்டிருந்தன)



எல்.ரீ.ரீ.ஈ தலைவர் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிறார்.

## படைப்பகுதி நீக்கம் பெற்ற வரம்பெல்லை (No Fire Zones)

9.6 மேற்படி விடயங்களுக்கும் சாட்சிகளுக்கும் அமைய, மோதல்களுக்கு இடைநடுவில் சிக்கிப் பொது மக்கள் உயிரிழந்துள்ளனர். ஆனால், பொதுமக்களை பாதுகாப்புப் படைகள் திட்டமிட்டு இலக்கு வைக்கவில்லை என்பது ஆணைக்குழுவின் முடிவாகும். மோதல் பகுதிகளிலிருந்து தப்பியோட முயற்சித்தபோது கொலை செய்யப்படுதல், மிதிவெடிகள், நந்திக்கடலைக் கடப்பதில் ஏற்பட்ட அபாயங்கள் என்பன கூட்டாகப் பொது மக்கள் பாதிப்புகளுக்குப் பங்களித்தன. எல்.ரீ.ரீ.ஈ. இன் ஆயுதங்கள் மீதான தாக்குதல்கள் யுத்தத்தின் விகிதாசாரக் கோட்பாடுகளுக்கு முரணானது அல்ல.

“மோதல்களுக்கு இடைநடுவில் சிக்கிப் பொது மக்கள் உயிரிழந்துள்ளனர்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> மேற்படி நடவடிக்கைகள் எத்தகைய சந்தர்ப்பங்களின் கீழ் நடை பெற்றிருக்கலாம் என்பதைக் கண்டறிவது அரச தரப்பினரின் கடமையாகும். எனவே குற்றம் புரிந்தவர்களுக்குத் தண்டனை வழங்குவதும், இழப்புகள் ஏற்பட்ட குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவது பற்றியும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

9.7 மேற்படி தீர்மானங்களை எட்டியபின் சூழ்நிலை விகிதாசார கோட்பாட்டை விஞ்சி இருந்ததா? எனக் கண்டறிவதும் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும், நிலைமையின் சிக்கலான தன்மையை கருத்திற்கொண்டு நடைமுறைச் சாத்தியமான சகல பாதுகாப்பு நடவடிக்கைகளையும் பாதுகாப்புப் படைகள் மேற்கொண்டுள்ளன. இதைவிட நடைமுறையில் ஒன்றையும் செய்திருக்க முடியாது என்றும் ஆணைக்குழு அபிப்பிராயப்படுகிறது.

9.8 சர்வதேச நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ள ஒரு விடயத்தை இங்கு ஞாபகமூட்ட விரும்புகின்றோம். இராணுவ நடவடிக்கைகளின் போது ஏற்படும் மரணங்கள், காயங்கள், சொத்தழிவுகள் என்பன ஏற்பட்ட முறையை நீதிமன்றம் முன்னே மீள் உருவகப்படுத்தல் அசாத்தியமாகும்" என விபரித்ததை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூர்தல் பொருத்தமானதாகும்.

## பொதுமக்களின் உயிர் இழப்புகள் அல்லது காயங்கள் ஏற்பட்ட விசேட சந்தர்ப்பங்கள்

9.9 மேலே குறிப்பிட்டவாறு 4.106 - 4.111 வரையிலான சாட்சிகளுக்கமைய பொது மக்களின உயிர் இழப்புக்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களை மீள் உருவகப்படுத்தலுக்கான சிரமங்களை ஆணைக்குழு எதிர்கொண்டது. பாதுகாப்புப் படைகள் திட்டமிட்டு பாதிப்பை ஏற்படுத்தாத போதும், *மேற்படி நடவடிக்கைகள் எத்தகைய சந்தர்ப்பங்களின் கீழ் நடை பெற்றிருக்கலாம் என்பதைக் கண்டறிவது அரச தரப்பினரின் கடமையாகும். எனவே குற்றம் புரிந்தவர்களுக்குத் தண்டனை வழங்குவதும், இழப்புகள் ஏற்பட்ட குடும்பங்களுக்கு நஷ்ட*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: inaccnet.com

எல்.ரீ.ரீ.ஈ கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வருகை தரும் பொது மக்கள்

*ஈடு வழங்குவது பற்றியும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.*

## வைத்தியசாலைகள் / தற்காலிக வைத்திய சாலைகள்

9.10 உயிர்களுக்கும் கட்டிடங்களுக்கும் சேதங்களை விளைவித்தவாறு ஷெல்வீச்சுக்கள் ஏற்பட்டுள்ளதை ஆணைக்குழு ஏற்றுக்கொள்கின்றது. ஆனால:, ஆணைக்குழுவின் முன் சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள், ஷெல் வீசப்பட்ட திசை, சரியான இடவமைவு என்பன பற்றி ஒரு குழப்பமான தோற்றத்தையே சுட்டிக்காட்டுகின்றன.

9.11 உறுதியான சாட்சியத்தின் அடிப்படையில் அதற்குப் பொறுப்பானவர்களைத் தீர்மானிப்பது ஆணைக்குழு எதிர்கொண்ட சவாலாகும்.

9.12 ஆணைக்குழு எதிர்நோக்கிய சிரமங்கள்: மோதலின் அமைவிடங்கள் மோதிலின் உக்கிரத் தன்மைக்கு ஏற்ப உடனடிப்புலன் விசாரணை இடம்பெறாமை மற்றும் முன்வைக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றுகளின்படி எந்தத் தரப்பிலிருந்து ஷெல் வீச்சு இடம்பெற்றது என்பதில் குழப்பமான நிலையே உள்ளது. இரு தரப்பினரும் ஷெல் வீச்சுக்களில் ஈடுபட்டமைக்கு சாட்சிகள் உண்டு.

9.13 உரிய முதல்நிலைச் சான்று இல்லாததினால் பொறுப்பான தரப்பு பற்றி தீர்மானிக்க முடியாதுள்ளது,

9.14 *எனினும், ஷெல் வீச்சுக் காரணமாக ஏற்பட்ட உயிர் இழப்புக்கள், உடைமை இழப்புக்கள் சார்பில் மனிதாபிமான சமிக்ஞையாகவும் நல்லிணக்க நடவடிக்கையாகவும் பொருத்தமான நஷ்ட ஈடு வழங்க வேண்டும்.*

> *அரசாங்கம், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் சர்வதேச நிறுவனங்கள் தொண்டர் நிறுவனங்கள் என்பன ஆற்றிய சேவைகள் பாராட்டுக்குரியவை*

## மோதல் பகுதிகளில் பொதுமக்களுக்கு உணவு மற்றும் மருந்துகள் உட்பட மனிதாபிமான நிவாரணங்களின் விநியோகம்

9.15 எல்.ரீ.ரீ.ஈ இன் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழ்ந்த பொது மக்களுக்கு 2009 ஜனவரி வரையிலான உணவு விநியோகம் தரை மார்க்கமாக வழங்கப்பட்டது. மோதல்கள் தீவிரமடைய கடல் மார்க்கம் பயன் படுத்தப்பட்டது. எனினும், 2009 பெப்ரவரி முதல் மே மாத நடுப்பகுதி வரை விநியோகம் குறைந்தது, மனிதாபிமான விநியோகங்கள் பாரிய சிரமங்களுக்கு மத்தியில் இடம்பெற்றமை ஆணைக்குழுவிற்குப் புலனாகியது.

9.16 மோதல் தீவிரமடைந்த நிலைமைகளின் கீழ் வழங்க வேண்டிய உணவுத் தொகை கடல்மார்க்கமாகவே அனுப்பப்பட்டது. இதற்காக அரசாங்க அதிபர்கள், பாதுகாப்புப் படையினர் செஞ்சிலுவைச் சங்கம், உலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: REUTERS

போரின் இறுதிக் கட்டத்தில் ஒரு சந்தர்ப்பம்

உணவுத் திட்டம் மற்றும் தொண்டர் நிறுவனங்கள் தமது உயிரைப் பணயம் வைத்து பணியாற்றியதை ஆணைக்குழு ஏற்றுக் கொள்கின்றது.

9.17 மோதலின் தீவிரத் தன்மை காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட வழங்கல்களைக் கூட நியாயமான முறையில் விநியோகிப்பதற்கு எல்.ரீ.ரீ.ஈ. இடமிருந்து ஏற்பட்ட தடைகளையும் பொருட்படுத்தாமல் மேற்படி இறுதிக் கட்டத்தில், *அரசாங்கம், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் சர்வதேச நிறுவனங்கள் தொண்டர் நிறுவனங்கள் என்பன ஆற்றிய சேவைகள் பாராட்டுக்குரியவை*

9.18 இத்தகைய கடுமையான முயற்சிகள் இடையேயும் பொதுமக்கள் போதுமான உணவைப் பெற முடியாமையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ஆட்கள் இராணுவப் பாதுகாப்பிற்காக சரணடைவதை நேரடியாகக் கண்டதாக கூறப்பட்ட சாட்சிகளுக்கு அமைய அவர்கள் காணாமற் போகச் செய்யப்பட்டுள்ளாராயின், மேற்படி நடவடிக்கைகள் தண்டனை பெறக்கூடிய ஒரு குற்றமாகும். இது சம்பந்தமாக புலன் விசாரணை செய்து குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என ஆணைக்குழு வலியுறுத்துகிறது.

9.19 சிக்குண்டு இருந்த பொதுமக்களுக்கு, உணவு, மருந்து வகைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்கு சர்வதேச சமூகமும் பல்வேறு நிறுவனங்களும் சாத்தியமான நடவடிக்கைகளை எடுத்தது என ஆணைக்குழு கருதுகின்றது.

9.20 படைப்பகுதி நீக்கம் பெற்ற வரம்பெல்லையில் எல்.ரீ.ரீ.ஈ இனரால் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த பொது மக்களின் எண்ணிக்கை தொடர்பாக திட்டவட்டமான சாட்சிகள் பெற முடியவில்லை. எவ்வாறாயினும் ஓர் யுத்த தந்திரமாக பொதுமக்களை பட்டினிபோடும் நோக்கத்திற்காக பொதுமக்களின் தொகையை குறைத்துக் காண்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது என்பதை ஆணைக்குழு ஏற்றுக்கொள்ள முடியாது.

## மருத்துவ சேவை வழங்கல்கள்

9.21 அத்தியாயம் 4 பிரிவு II இல் விபரிக்கப்பட்டவாறு மருந்துகளும் வைத்திய சேவைகளும் போதியளவு வழங்கப்படவில்லை என தோன்றுகிறது. எனினும் மோதலின் தீவிரத் தன்மை காரணமாகவும் மோதல் இடம்பெற்ற அமைவிடத்திற்கு அண்மையில் வைத்திய சாலைகள் அமைந்திருந்ததையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

9.22 பொதுமக்களுக்கு வைத்திய வசதிகளை வழங்குவது தொடர்பாக ஆணைக்குழு முன் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் போதுமானதாக அமையவில்லை. எனினும் அவை மனிதநேய காரணிகளால் மேலும் விசாரணை செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: UN Photo/Eskinder Debebe

*பொது மக்களுக்கு வைத்திய வசதிகள் வழங்கியமை தொடர்பாக ஆணைக்குழு முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் போதாது*

வேண்டிய ஒரு விடயமாக அமைந்துள்ளது. அத்தகைய சந்தர்ப்பத்தில் காயமடைந்த பொதுமக்களின் எண்ணிக்கை காயங்களின் இயல்பு, சிகிச்சை அளிப்பதற்கான ஆற்றல். சிகிச்சை பெற்ற எல்.ரீ.ரீ.ஈ. உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆகியவற்றை கவனத்திற் கொள்ள வேண்டும்.

## சரணடைதல் / கைதாதல் என்பவற்றின் பின்னர் காணாமல் போனதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள்

9.23 அத்தியாயம் 4 பிரிவு II இன் 4.242 முதல் 4.258 வரை குறிப்பிட்டவாறு குறிப்பிட்ட ஆட்கள் இராணுவப் பாதுகாப்பிற்காக சரணடைவதை நேரடியாகக் கண்டதாக கூறப்பட்ட சாட்சிகளுக்கு அமைய அவர்கள் காணாமற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“

*சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை தீவிரமாக மீறிய எல்.ரீ.ரீ.ஈ. உறுப்பினர்களுக்கு எதிராக உரிய முறையில் குற்றங்களைச் சாட்டுவதற்கு அவசியமான அறிக்கைகளைப் பெற வேண்டும்.*

”

போகச் செய்யப்பட்டுள்ளனராயின், மேற்படி நடவடிக்கைகள் தண்டனை பெறக்கூடிய ஒரு குற்றமாகும். இது சம்பந்தமாக புலன் விசாரணை செய்து குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என ஆணைக்குழு வலியுறுத்துகிறது. சரணடையும் நடவடிக்கைகளின் போது இராணுவம் பெற்றுள்ள நற்பெயருக்கு ஒரு சிலரின் நடவடிக்கைகள் காரணமாக கலங்கம் விளைவிக்க இடமளிக்க முடியாது.

## எல்.ரீ.ரீ.ஈ. இனரின் நடத்தை

9.24 எல்.ரீ.ரீ.ஈ இனரால் மேற்கொள்ளப்பட்ட பாரிய மனித உரிமை மீறல்கள் மனித உரிமைகள் அத்தியாயத்திலும் விபரமாக குறிப்பிடப் பட்டுள்ளன.

9.25 எல்.ரீ.ரீ.ஈ. சர்வதேச மனிதாபினமானச் சட்டங்களின் மூலக்கோட்பாடுகளின் பாரிய மீறல்கள் அத்தியாயம் 4இன் பிரிவு II இல் விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இறுதி அவதானிப்புகளில் ஒரு சில பின்வருமாறு:

அ. பொதுமக்களை மனிதக் கேடயங்களாக உபயோகித்தமை

ஆ. பொதுமக்கள் மத்திய நிலையங்களில் இராணுவ உபகரணங்களை அமைத்தல்

இ. பாதுகாப்பான பகுதிகளுக்கு தப்பிச் செல்வதற்கு எத்தனித்த பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடாத்தியமை

ஈ. மோதல்களின் இறுதிக்கட்டங்களிலும் இளம் சிறுவர்களை கட்டாயமாக தமது படையணிகளில் சேர்த்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: Daily News File Photo

*வயோதிபப் பெண் ஒருவரை தூக்கிக்கொண்டு வரும் இராணுவ வீரர்...*

உ. மோதல் வலயங்களுக்கு வெளியேயும் மிதி வெடிகள் மற்றும் திடீரென வெடிக்கும் பொருட்களை புதைத்தமை.

ஊ. மோதலில் பொதுமக்களை பலவந்தமாக உபயோகித்தமை அதன் மூலம் பொதுமக்கள் மற்றும் போராளிகள் என்பவற்றுக்கிடையில் வேறுபடுத்தி அடையாளப்படுத்துவதை சாத்தியமற்ற தாக்கியமை.

எ. தற்கொலைத் தாக்குதல்கள் மேற்கொள்வதை தொடர்ந்து உபயோகித்து அப்பாவிப் பொதுமக்களின் உயிர்களுக்கு இழப்பு ஏற்படுத்தியமை.

*9.26 சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை தீவிரமாக மீறிய எல்.ரீ.ரீ.ஈ. உறுப்பினர்களுக்கு எதிராக உரிய முறையில் குற்றங்களைச் சாட்டுவதற்கு அவசியமான அறிக்கைகளைப் பெற வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நாடுகளுக்கு இடையிலான மோதல்களைக் கட்டுப்படுத்தும் சர்வதேசச் சட்டத்தின் ஏற்பாடுகளில் உள்ளவாறு ஏற்கனவே அரச தரப்பல்லாத ஆயுதக் குழுக்களுக்கும் ஏற்புடையதாகும்.

## உள்நாட்டு மோதல்களுக்கு சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் பிரயோகங்கள் மீதான அவதானிப்பு

9.27 உள்நாட்டு மோதல்களின் போது அரச தரப்பு அல்லாத ஆயுதக் குழுக்கள் தொடர்பான சட்டங்களில் உரிய முறையில் வரைவிலக்கணம் செய்யப்படாத காரணத்தினால், மேற்படி ஆயுதக் குழுக்கள் பொதுமக்களின் பாதுகாப்பைப் பொருட்படுத்தாமல் செயற் படுகின்றனர். பாதுகாப்பு வலயங்களை மோதல்களுக்குப் பயன்படுத்துதல், பொதுமக்களை மனிதக்கேடயங்களாக உபயோகிக்கின்றமையால், எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்கையில் பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படுவதை தவிர்ப்பது கஷ்டமாகும்.

9.28 முன்னரெப்போதும் இல்லாத வகையில் பொதுமக்களின் பாதுகாப்பு மேற்படி வலயங்களை ஒதுக்குவதற்கு குறிப்பிட்ட ஆயுதக் குழுக்கள் உடன்படமாட்டா. அத்தகைய சூழ்நிலையில் ஒருதலைப் பட்சமாக பிரகடனப்படுத்துமிடத்து அவர்களை போராட்டங்களுக்காக ஈடுபடுத்துவதும் மனிதக் கேடயங்களாக உருவாக்கியமை காரணமாக இராணுவம் இங்கு பொதுமக்களைப் பாதுகாப்பதற்கும் எதிரியைத் தாக்குவதுமாகிய இக்கட்டான நிலையை எதிர்நோக்குகின்றனர்.

9.29 ஒருதலைப்பட்சமான ஒரு யுத்த சூன்ய வலயப் பிரகடனத்தின் மூலம், பொதுமக்கள் சூழ்ந்துள்ள பகுதியின் மத்தியில் எல்.ரீ.ரீ.ஈ. இனர் வருவதற்கு சந்தர்ப்பம் வழங்கினரா என்ற சந்தேகம் ஏற்படுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: Guardian.co.uk

*எல்.ரீ.ரீ.ஈ. போராளிகள் சிறுவர்களுடன்....*

9.30 யுத்த சூன்ய வலயங்கள் பற்றிய மனித நேயச் சட்டங்களை பாதுகாக்கும் போது ஆயுதக் குழுக்களினுடைய செயற்பாடுகள் பற்றி கண்டறிவதும், உள்நாட்டு மோதல்களின் போது மேற்படி சட்டங்கள் எதிர்நோக்கும் சவால்களுக்கு தீர்வு காண்பதற்கும் பொருத்தமான தர நியமங்கள் மற்றும் நடைமுறைகளின் உருவாக்கம் மேம்படுத்தப் பட வேண்டும்.

9.31 *நாடுகளுக்கிடையிலான மோதல்களைக் கட்டுப்படுத்தும் சர்வதேசச் சட்டத்தின் பொதுக்கோட்பாடுகளில் உள்ளவாறு ஏற்கனவே அரச தரப்பல்லாத ஆயுதக் குழுக்களுக்கும் ஏற்புடையதாகும்.* ஆனால், மேற்படிக் குழுக்கள் மனிதாபிமானச் சட்டத்திற்கு கூடுதல் இணக்கப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கான பதிலை வழங்கக் கூடும். ஆனால் இக்குழுக்கள் மனிதாபிமானச் சட்டத்திற்கு கூடுதல் இணக்கப்பாட்டைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதற்கும் மேற்படி சட்டங்களை மேம்படுத்துவதற்கும் ஐக்கிய நாடுகள் உட்பட ஏனைய நிறுவனங்கள் மேலும் கவனம் செலுத்த வேண்டும்.

9.32 மோதல்களினால் பாதிக்கப்பட்டவர்களையிட்டு சர்வதேச சமூகத்திடம் ஒப்படைக்கப்படும் திட்டவட்டமான பொறுப்பு, மேற்படி சட்ட வரம்பை உருவாக்குவதாகும். இதன் பொருட்டு இலங்கையில் முப்பது ஆண்டு காலம் அப்பாவி மக்களின் உயிரிழப்புக்கள் ஒரு சிறந்த படிப்பினையாகும்.

> *இறந்தவர்களை அல்லது காயமடைந்தவர்களைப் பற்றி உண்மையான புள்ளி விபரங்களோ தரவுகளோ அல்லது எந்தவொரு உத்தியோக பூர்வ அறிக்கையிலும் இல்லாமை கவலைக்குரியது.*

## பாதிக்கப்பட்டவர்கள் மீதான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள்

9.33 *ஆணைக்குழு பெற்ற நேரடியானதும் நம்பகத் தன்மை வாய்ந்ததுமான தகவல்களுக்கு அமைய இராணுவ பாதுகாப்பை மீறி யுத்த படைப்பகுதி நீக்கம் பெற்ற வரம்பெல்லைகளுக்கு மேல் துப்பாக்கிச் சமர்கள் ஏற்பட்டமையினால் பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். அல்லது காயமடைந்துள்ளனர் என்பது தெளிவு.*

9.34 ஒரு மனிதக் கேடயத்தின் பின்னால் பாதுகாப்பைத் தேடும் தற்கொலைக் கலாசார அடிப்படையைக் கொண்ட ஆயுதத் தரப்பினருக்கு எதிராக பாதுகாப்புப் படையினர் ஓர் சிக்கலான பல சவால்களை எதிர்நோக்கினர். அதே சமயம் பிரேதங்களைக் கணக்கெடுப்பதை விட உயிர்களைப் காப்பாற்றுவதே பாதுகாப்புப் படையினரின் கொள்கையாக இருந்தமையை நாம் பாராட்டுகின்றோம். ஆனால் மோதலில் *இறந்தவர்களை அல்லது காயமடைந்த வர்களைப்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பற்றி உண்மையான புள்ளி விபரங்களோ தரவுகளோ அல்லது எந்தவொரு உத்தியோக பூர்வ அறிக்கையிலும் இல்லாமை கவலைக்குரியது.* பல்வேறு நிறுவனங்கள் பல்வேறு புள்ளி விபரங்களை வழங்கியுள்ளன.



Photo source: Associated Press

*பொது மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளைப் பற்றி உரிய விசாரணைகளை மேற்கொள்ளப்பட வேண்டும்.*

9.35 பாதிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை பற்றிய தவறுகளை திருத்துவதற்கான நடைமுறை இல்லாமையால் இதுபற்றி உறுதிப்படுத்தப்படாத ஊகங்களே உள்ளன.

9.36 நேரில் கண்ட சாட்சியங்களுக்கு அமைய, மோதலின் இறுதிக்கட்டத்தில், சாதாரண மக்களில். குறிப்பிட்ட எண்ணிக்கையினருக்கு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளமையை ஆணைக்குழு ஏற்றுக்கொள்கிறது. எல்.ரீ.ரீ.ஈ. பொதுமக்களைப் பற்றிக் கவலைப்படாது மோதலில் ஈடுபட்டதாலும் துப்பாக்கிப் பிரயோகங்கள் காரணமாகவும் இப்பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

9.37 இதுபற்றிய ஆணைக்குழு பின்வரும் பரிந்துரைகளை செய்கிறது.

அ. பொதுமக்களை வேண்டுமென்றே தாக்கியமை பற்றிப் புலன் விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்க வேண்டும்.

ஆ. பொதுமக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் காயங்கள் சொத்தக்களின் சேதம் என்பவை பற்றி தொழில்சார் முறையில் ஆய்வொன்றை நடாத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சனல் 4 அலைவரிசையில் ஒளிபரப்பப்பட்ட விவரணத் திரைப்படத்தின் ஒரு காட்சி

Photo source: Web Capture from "Killing Fields" documentary

## சனல் 4 வீடியோ காட்சி மீதான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள்

9.38 அ.) உண்மையானவை அல்லது அரங்கேற்றப் பட்டவை என எவ்வகையிலானவையாக இருப்பினும் வீடியோவில் காண்பிக்கப்பட்ட சம்பவங்கள் கொடூரமானவை அதிர்ச்சியளிப்பவை.

ஆ. இது செயற்கையாக உருவாக்கப் பட்டது என அரசாங்கம் கூறுகிறது. ஆனால் ஐக்கிய நாடுகளின் தொழில்நுட்ப நிபுணர்கள் இவ்வீடியோக் காட்சியானது கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்கள் படுகொலை செய்யப் பட்டமையையும். பாலியல் இம்சைகளுக்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பாகவும் சான்றுகள் உண்டு எனக் கூறுகின்றனர். இவ்வீடியோக் காட்சியில் தொழில்நுட்பப் பிரச்சினைகள் உண்டென இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

இ. தொழில்நுட்ப நிபுணர்கள் இதன் உண்மைத் தன்மை பற்றி பல சந்தேகங்களை எழுப்பியுள்ளனர்.

ஈ. இவ்வீடியோவில் தொழில்நுட்ப மற்றும் சட்ட வைத்திய பிரச்சினைகள் இருப்பதாக ஆணைக்குழு ஏற்றுக்கொள்கின்றது. ஆனால் யாரோ ஒருவர் தயாரித்து ஒப்படைத்துள்ளனர் என்றும் ஏற்றுக்கொள்ளவில்லை.


உ. விரிவான தகவல்களை வழங்குவதற்கு ஒளிபரப்பாளர் சாதகமான முறையில் பதிலளிக்கவில்லை.

9.39 இருக்கின்ற சான்றுகளின் அடிப்படையில் உண்மையை நிலைநாட்டுவதற்கு அரசாங்கம் ஒரு சுயாதீன புலன் விசாரணையை முன்னெடுப்பதற்கும் ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.40 இரண்டு காரணங்களுக்காக இந்த நடவடிக்கை அவசியமானது




சௌல் 4 "இலங்கையின் கொலைக் களங்கள் என்ற விவரணத் திரைப்படத்தின் நெறியாளர் கெலம் மக்ரி

அ. குறிப்பாக நிபுணர்களின் கருத்துப்படி கைது செய்யப்பட்டவர்கள் படுகொலை செய்யப்படுவதற்கும் பெண்கள் மீது பாலியல் பலாத்காரம் மேற்கொள்வதற்கும் சாத்தியம் உண்டு என்பதை சுட்டிக்காட்டுகிறது. அவ்வாறாயின் புலன் விசாரணைகளை மேற்கொண்டு குற்றம் இழைத்தோருக்கு தண்டனை வழங்க வேண்டும். படையினரின் தொழில்சார் நற்பெயரைப் பாதுகாப்பதும் ஆயிரக்கணக்கில் தமது உயிர்களை அர்ப்பணித்த படையினரின் கௌரவத்தைப் பேணுவதும் அவசியம். எனவே இது அரசாங்கத்தின் வகைப்பொறுப்பாகும்.

ஆ. வேறு நிபுணர்களுக்கு அமைய இக்காட்சிகள் செயற்கையாக உருவாக்கப்பட்டிருந்தால் வேண்டுமென்றே பாரதூரமான பொய்ப் பிரசாரங்களை செய்தவர்களை ஒளிபரப்பியவர்கள் வகைப்பொறுப்பிற்கு உட்படுத்த வேண்டும். இது இலங்கை மக்கள் மீதும் இராணுவம் மீதும் மேற்கொள்ளப்பட்ட பாரதூரமான அநீதியாகும். கருத்துச் சுதந்திரத்தின் தோல்விக்கும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு பெரும் தடையானதுமாகும்.

9.41 ஆகையால் உண்மையை நிலைநாட்டும் நோக்கில் அல்லது குற்றங்களுக்கு ஏற்ப சட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் சுயாதீனமான விசாரணையை மேற்கொள்ள வேண்டும். தகவல்களை வழங்குவோரின் பாதுகாப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரவாதப்படுத்த வேண்டும். மேலும் ஒத்துழைப்பு வழங்குமாறும் ஒளிபரப்புச் செய்த ஸ்தாபனத்தை ஆணைக்குழு வலியுறுத்தி வேண்டிக்கொள்கிறது.

"*இடம்பெயர்ந்தோரின் உரிமைகள், இலகுவாக அபாய வாய்ப்புக்கு உள்ளாகக் கூடிய பெண்கள், பிள்ளைகள், வலது குறைந்தவர்கள் பற்றியும் தகவல்கள் முன்வைக்கப்பட்டன.*"

### அத்தியாயம் 5

## மனித உரிமைகள் மீதான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள்

### பொதுவானவை

9.42 மோதல்கள் காரணமாக பொது மக்களின் அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் மீறப்பட்டுள்ளன என பெருந் தொகையான முறையீடுகள் ஆணைக்குழுவின் முன் சமர்ப்பிக்கப்பட்டன. கடத்தல்கள் அல்லது தன்னிச்சையில்லாத காணாமற் போதல்கள் எதேச்சாதிகாரமாக தடுத்து வைத்தல்கள், சிறுவர்கள் படை நடவடிக்கைகளில் இணைத்துக் கொள்ளுதல், சட்டத்திற்கு முரணான வகையில் மரண தண்டனை விதித்தல், பேச்சுச் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம், வழிபாட்டுச் சுதந்திரம், ஊடகச் சுதந்திரம் மீறப்பட்டுள்ளமை, குறித்து நிறைய முறைப்பாடுகள் ஆணைக்குழுவுக்கு முன் வைக்கப்பட்டுள்ளன. *இடம்பெயர்ந்தோரின் உரிமைகள், இலகுவாக அபாய வாய்ப்புக்கு உள்ளாகக் கூடிய பெண்கள், பிள்ளைகள், வலது குறைந்தவர்கள் பற்றியும் தகவல்கள் முன்வைக்கப்பட்டன.* எனவே மனித உரிமைகள் தொடர்பான இப்பரிந்துரைகள் நல்லிணக்க நடவடிக்கைகளுக்கு மிகவும் ஏற்புடையவை என ஆணைக்குழு கருதுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Photo source: Sri Lankan Guardian website

## காணமற் போதல் மற்றும் ஆட்கடத்தல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள்

9.43 அடிப்படை உரிமைகள் சுதந்திரங்கள் என்பவற்றின் மீறல்களை குற்றஞ்சாட்டி அதிக அளவு எண்ணிக்கையிலான முறையீடுகளால் ஆணைக்குழு அதிர்ச்சியடைந்தது. ஆனால் எல்.ரீ.ரீ.ஈ. மேற்கொண்ட காணாமற் போதல்களும் கடத்தல்களும் மிக அதிகம். சில சமயங்களில் பல்லாண்டுகளாக இவ்வாறு காணாமற் போவது பற்றி முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

9.44 இத்தகைய குற்றங்களை தடுப்பது நல்லிணக்கத்திற்கான அவசியம் என பலர் எடுத்துக்கூறினர். இதன் மூலம் பாடங்களைக் கற்றதை உறுதிப்படுத்துதல் அவசியமென ஆணைக்குழு வலியுறுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“
*ஆட்சி அதிகாரத்திற்கு வந்த எந்தவொரு அரசாங்கமும் அவற்றை செயற்படுத்தாத காரணத்தினால் அரசாங்கம் நியமிக்கும் ஆணைக்குழுக்கள் விமர்சனங்களுக்கும் சந்தேகத்திற்கும் ஆளாகியுள்ளன. கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவும் இச்சந்தேகத்திலிருந்து மீள முடியாது.*
”

9.45 பொதுமக்களின் சாட்சிகள் மூலம் ஒன்று தெளிவாகியது. அரசியல் தலையீடுகள் காரணமாக குற்றப் புலனாய்வுகள் சட்டம் செயற்படுத்தப்படுதல் பொலிஸ் நிர்வாகம் என்பன பலவீனமடைந்துள்ளன. அப்போது குற்றங்கள் நீதி என்பன பற்றிய நம்பிக்கை உடைந்தெரிகிறது.

9.46 காணாமற் போகச் செய்தல் கடத்தல் தடுத்து வைத்தல் என்பன பற்றி பொலிஸாருக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் அறிவித்துள்ளமை பற்றி பல சான்றாதாரங்கள் உண்டு. ஏற்கனவே விசாரணை ஆணைக்குழுவுக்கு செய்யப்பட்ட முறைப்பாடுகள் மீளக் கூறப்பட்டன. ஆனால் மேற்படி ஆற்றல் இன்றும் கண்டுபிடிக்கப் படவில்லை.

9.47 இம்முறைப்பாடுகளைப் பற்றி புலன்விசாரணை செய்து குற்றம் இழைத்தவர்களுக்கு தண்டனை வழங்க அரசு கடப்பாடுடையது. சரணடைதல் அல்லது கைது மூலம் அரசாங்க அதிகாரிகளால் கட்டுக்காவலுக்கு எடுக்கப்பட்ட நபர் ஒருவரின் பாதுகாப்பு மற்றும் பத்திரமான தன்மை. அரசின் வகைப்பொறுப்பு என ஆலோசணைக்குழு வலியுறுத்துகிறது.

9.48 காணாமற்போன ஆட்களின் பிரச்சினை எந்தவொரு நல்லிணக்க நடவடிக்கையின் போதும் பாரதூரமான தடையாகும். இத்தகைய சம்பவங்கள் பற்றி முன்னைய ஆணைக் குழுக்கள் பல தீர்வுகளை முன்வைத்த போதிலும் *ஆட்சி அதிகாரத்திற்கு வந்த எந்தவொரு அரசாங்கமும் அவற்றை செயற்படுத்தாத காரணத்தினால் அரசாங்கம்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Photo source: Agence France Presse

பொது மக்களுக்கு உதவும் செஞ்சிலுவைச் சங்கம்

*நியமிக்கும் ஆணைக்குழுக்கள் விமர்சனங்களுக்கும் சந்தேகத்திற்கும் ஆளாகியுள்ளன. கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவும் இச்சந்தேகத்திலிருந்து மீள முடியாது.*

9.49 படையினரின் அல்லது எல்.ரீ.ரீ.ஈ. இனரின் நடவடிக்கைகளுக்கு இரையான, கண்டுபிடிக்க முடியாத ஆட்களைப் பற்றிய தகவல்களை அவரவர்களின் குடும்பங்களுக்கு வழங்குவதும் நஷ்டஈடு பெறுவதும் ஒரு சட்ட ரீதியான உரிமையாக அமைகிறது.

9.50 விசேடமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் சட்ட நிறுனங்கள் சகல முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். இந்த விடயம் தொடர்பில் ஏற்படும் முன்னேற்றங்கள் குறித்து மேற்படி குடும்பங்களுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> *சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகள் ஆட்களை அவர்களது கட்டுக்காவலுக்கு எடுக்கும் பொழுது கைது தொடர்பான ஒரு உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டை வழங்குதல் வேண்டும். தடுத்து வைக்கப்படும் இடத்தின் விபரங்களையும் வழங்குதல் வேண்டும்.*

9.51 காணாமற் போதல் என்ற பிரச்சினை மிகவும் சிக்கலானது எனினும் அது பற்றி புலன் விசாரணை செய்து சட்டமா அதிபருக்கு தேவையான தகவல்களை வழங்குவதற்கு புலன்விசாரணை மற்றும் வழக்க நடவடிக்கைகள் பற்றி அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும். பல்வேறு நிறுவனங்களில் ஏற்கனவே உள்ள தகவல்கள் ஓரிடத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

9.52 இறப்புச் சான்றிதழ்கள் நிதி ரீதியான இழப்பு என்பன பற்றி கவனம் செலுத்தப்பட வேண்டும். இறப்புக்களை பதிவு செய்யும் சட்டம் திருத்தப்பட்டு அது பற்றி பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

9.53 உத்தியோகபூர்வப் பதிவுகள் எதுவுமின்றி கைது செய்யப்படுவது பற்றிய பல முறைப்பாடுகளை ஆணைக்குழு பெற்றது. *சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகள் ஆட்களை அவர்களது கட்டுக்காவலுக்கு எடுக்கும் பொழுது கைது தொடர்பான ஒரு உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டை வழங்குதல் வேண்டும். தடுத்து வைக்கப்படும் இடத்தின் விபரங்களையும் வழங்குதல் வேண்டும்.*

9.54 மனித உரிமைகள் சட்டத்தின் கடப்பாட்டிற்கு அமைய

அ. கைது செய்யப்பட்ட ஒருவர் உடனடியாக ஒரு நீதவான் முன்னிலையில் தாமதமின்றி முன் நிறுத்தப்படல் வேண்டும்.

ஆ. தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடத்திலான ஏதேனும் மாற்றம் கைது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: Lanka Standard website

கைது செய்தலும் தாக்குதல் நடத்துவதும் வடக்கைப் போலவே தெற்கிலும் இடம்பெறுகிறது.....

செய்யப்பட்ட நபரின் உறவினர்களுக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் தாமதமின்றி அறிவிக்கப்பட வேண்டும்.

இ. தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு நீதவான் ஒவ்வொரு மாதமும் விஜயம் செய்தல் வேண்டும்.

ஈ. தடுத்து வைக்கப்பட்டிருத்தலில் இருந்து விடுதலைகள் நீதிமன்றத்தின் ஊடாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

9.55 பொலிஸாரினால் ஒரு கைது, தடுத்து வைத்தல் மற்றும் இடம்மாற்றுதல் என்பன அறிக்கையிடாமை, கடத்தல் பற்றிய முறைப்பாடுகளை பதிவுசெய்துகொள்ளாமை, புலன் விசாரணை மேற்கொள்ளாமை ஒரு தவறாகும். அத்தகைய தவறிழைப்பவர்களுக்கு எதிராக சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“

*பல்லாண்டுகளாக குடும்பத்தின் வருமானம் ஈட்டுபவரை இழந்தமைக்கான பெரும் கவலையை ஆற்றுவதற்கு மேற்படிக் குடும்பங்களுக்கு நிதி மூலமும், சட்ட மூலமும் உதவியளிக்க வேண்டும்.*

”

9.56 காரணமின்றி கைதுசெய்யப்படல் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்தல் என்பன பற்றி ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. சட்டத்தின் ஆட்சி, நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் என்பவற்றிற்கு அவசரகாலச் சட்டத்தை நீக்குதல் நல்லதோர் நடவடிக்கையாகும். இதன் நன்மைகளை மக்களுக்கு வழங்க வேண்டும். புதிய சட்டங்கள் மூலம். இந்நன்மைகளுக்கு தடை விதிக்கமாட்டார்கள் என ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது.

9.57 நீண்டகாலம் ஆட்கள் தடுத்து வைக்கின்றமையை எதிர்த்து பல முறைப்பாடுகள் உள்ளன. பயங்கரவாதச் தடைச்சட்டம், பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பிரகடனப் படுத்தப்படும் சட்டங்களுக்கு அமைய ஏற்படும் அவதானிப்புக்களுக்கு சுயாதீனமான ஆலோசணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும்.

9.58 *பல்லாண்டுகளாக குடும்பத்தின் வருமானம் ஈட்டுபவரை இழந்தமைக்கான பெரும் கவலையை ஆற்றுவதற்கு மேற்படிக் குடும்பங்களுக்கு நிதி மூலமும், சட்ட மூலமும் உதவியளிக்க வேண்டும்.*

9.59 இத்தகைய காணாமற் போதல்கள் மீண்டும் நிகழாத வகையில் ஏற்கனவே அமுலில் உள்ள சட்டங்கள் மீள திருத்தப்பட வேண்டும் என ஆணைக்குழு வலியுறுத்தி பரிந்துரை செய்கிறது.

9.60 கடந்த சம்பவங்களில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டமையை உறுதிப்படுத்துவது மிக அவசியமாகும். அவை மீள இடம்பெறாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் நாடு பூராவும் பாடசாலைப் பிள்ளைகள், பாதுகாப்புப் படைகள், பொலிஸார் ஆகியோருக்கு அறிவூட்டும் மனித உரிமைகள் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான தேவையையும் ஆணைக்குழு வலியுறுத்துகின்றது.



சட்டமும் நீதியும் மிகுந்த நீதியுடனே செயற்படுத்த வேண்டும்.

Photo source: Photobucket.com

## தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்கான கவனிப்பு

9.61 பல்வேறு புனர்வாழ்வு நிலையங்களில் நடத்தப்பட்ட நிகழ்சித்திட்டங்கள் மிகத் திருப்திகரமாக அமைந்தன. இதன் மூலம் ஏற்படும் மன உணர்வுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நல்லிணக்கத்திற்கு உதவும்.

9.62 பூஸ்ஸ தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களின் பிரகடனத்திற்கு அமைய அவர்கள் பலவந்தமாக எல்.ரீ.ரீ.ஈ யுடன் இணைத்துக்கொள்ளப்பட்டவர்கள் ஆவர். குற்றச்சாட்டுக்கள் எதுவுமின்றி சிலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவங்களை விசாரணை செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான விசேட வேலைத் திட்டத்தின் அவசியம் இடைக்கால பரிந்துரைகளிலும் முன் வைக்கப்பட்டுள்ளன.

9.63 தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் தகவல்களை அறியும் உரிமை அவர்களது குடும்ப உறவினர்களின் உரிமையாகும். அவர்களைப் பற்றிய தகவல்களை இலகுவில் பெறக்கூடிய முறைமை ஒன்று இருத்தல் வேண்டும்.

9.64 தடுத்து வைக்கப்பட்டவர்கள் தொடர்பான இடைக்காலப் பரிந்துரைகளின் முழுமையான அமுல்படுத்தலை உறுதிப்படுத்துமாறு அரசாங்கத்தை ஆணைக்குழு வலியுறுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> *தடுத்து வைக்கப்பட்டோரின் நலன்புரி சேவைகளுக்கு இத்தகைய சேவைகள் மிக அவசியமானது.*

9.65 தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை சந்திப்பதற்கான உரிமையை நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் கொண்டுள்ளனர். சில தகவல்கள் போதியதாக அமையாத சந்தர்ப்பங்கள் பல உண்டு. மிக நீண்ட தூரங்களில் இருந்து உறவுகள் வருகை தந்தபோதும் அவர்களை சந்திக்க முடியாத பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன. சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் தொண்டர் ஸ்தாபனங்கள் இக்குடும்பத்தினர் வருகை தருவதற்கான பயண வசதிகளை ஏற்படுத்துவது உசிதமானது

9.66 பூஸ்ஸ மற்றும் ஓமந்தை அதி உயர் பாதுகாப்பு வலயங்களில் தடுத்து வைக்கப் பட்டிருந்தோரை சந்திப்பதற்கு செஞ்சிலுவைச் சங்கம் வசதிகளை செய்து கொடுப்பதற்கு ஒத்துழைப்பு நல்கப்பட்டது. இத்தகைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு ஆணைக்குழு வலுவாகப் பரிந்துரைக்கின்றது. *தடுத்து வைக்கப்பட்டோரின் நலன்புரி சேவைகளுக்கு இத்தகைய சேவைகள் மிக அவசியமானது.*

9.67 தடுத்து வைத்திருக்கும் அனைத்து இடங்களும் முறையாக அனுமதிக்கப்பட்ட இடங்களாக இருத்தல் வேண்டும். கைது செய்து தடுப்புக் காவலில் வைக்கும்போது உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டும். தடுத்து வைக்கப்படும் இடத்தின் விபரங்களை வழங்குதல் போன்ற சட்டங்களை அனுசரித்தல் வேண்டும்.

9.68 தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளமையால் அவர்களுக்கான விசேட நிகழ்ச்சித்திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: Lankapuvath

எல்.ரீ.ரீ.ஈ. போராளிகளுக்கு புனர்வாழ்வு வழங்கப்படுகிறது.

அமுலாக்கப்பட வேண்டும். இத்தகைய இளைஞர்கள் தேசிய பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் பாராட்டுவதற்குரியது.

9.69 இளம் பிள்ளைகள், உடல் ஊனமுற்றோர், காயங்களிலிருந்து குணமடைவோர் ஆகியோருக்கு மருத்துவச் சிகிச்சைகள் தேவைப்படும் போது அவற்றை இனம் கண்டு பரிசீலனை செய்ய வேண்டும். சிலருக்கு உள ஆற்றுப்படுத்தல்சேவைகளும் அவசியமாகின்றன.

9.70 ஆணைக்குழுவின் இடைக்காலப் பரிந்துரைகளின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கணிசமானோர் தொடர்பில் வழக்குகளை துரிதப்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை ஆணைக்குழு பாராட்டுகிறது. அவ்வாறாயினும் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டோர் மீது குற்றச்சாட்டுக்கள் இருப்பின் வழக்குத் தொடர வேண்டும். அல்லது விடுவிக்கப்பட வேண்டும் என்பதை ஆணைக்குழு மீண்டும் வலியுறுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> *சகல சட்டவிரோத ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைய வேண்டும் என ஆணைக்குழு முன்வைத்த இடைக்கால பரிந்துரைகளை ஞாபகமூட்டுகின்றோம்.*

9.71 புனர்வாழ்வு அழிக்கப்பட்டவர்கள் தொடர்பில், அவர்கள் பொது வாழ்க்கையின் பிரதான நீரோட்டத்தில் ஒன்றிணைக்கப்பட்டதை உறுதிசெய்வதற்கு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல் வேண்டும். இந்த நோக்கத்திற்காக சிவில் சமூக அமைப்புக்களின் மூலம் பாரிய நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ள முடியும்.

## சட்ட விரோத ஆயுதக் குழுக்கள்

9.72 பரிசீலணைக்குட்பட்ட காலத்தின் போது சட்டவிரோத ஆயுதக் குழுக்களின் நடவடிக்கை காரணமாக பொது மக்கள் அச்சமடைந்திருந்தனர். குற்றத்திற்கு தண்டனை பெறாத ஒரு சூழமைவு இருந்தது. மேற்படிக் குழுக்கள் மேற்கொண்டுள்ள சட்ட விரோத நடவடிக்கைகள் அடிப்படை மனித உரிமைகளை மீறுவனவாகும்.

9.73 போதுமான சாட்சியங்கள் காணப்படுமிடத்து குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முறையான புலன் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

9.74 *சகல சட்டவிரோத ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைய வேண்டும் என ஆணைக்குழு முன்வைத்த இடைக்கால பரிந்துரைகளை ஞாபகமூட்டுகின்றோம்.* இது தொடர்பாக எதுவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாததையிட்டு ஆணைக்குழு கவலை தெரிவிக்கின்றது. அவ்வாறு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் உதயன் செய்திப் பத்திரிகை ஆசிரியர் மீதான அண்மைய தாக்குதல்கள் போன்ற மோசமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: Photo from BBC

சம்பவங்கள் தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்பது ஆணைக்குழுவின் கருத்தாகும். நல்லிணக்கத்திற்கு இந்த நடவடிக்கைகள் மிக அவசியமாகும்.

## சிறுவர்களின் கட்டாய ஆட்சேர்ப்பு

9.75 பெற்றோர்களின் கூற்றுப்படி பலவந்தமாக யுத்த நடவடிக்கைகளுக்கென சேர்க்கப்பட்ட பிள்ளைகளில் அநேகமானோரின் இருப்பிடங்கள் இதுவரை தெரியாதுள்ளது. மோதல் காலங்களின் போது எல்.ரீ.ரீ.ஈ. புரிந்த மிக மோசமான குற்றங்களில் இது ஒரு வகையாகும்.

9.76 எல்.ரீ.ரீ.ஈ. தவிர்ந்த ஏனைய குழுக்களால் வயது குறைந்த சிறுவர்களின் ஆட்சேர்ப்பு பற்றிய கரிசனை தெரிவிக்கப்பட்டது. ஆனால் T.M.V.P புனர்வாழ்வு ஆணையாளர் யுனிசெஃப் ஆகியோருக்கிடையே மேற்படி சிறுவர்களை விடுவிப்பதற்கான ஓர் ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது என்பதை ஆணைக் குழு குறிப்பிட விரும்புகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> *சிறுவர்களை கட்டாய ஆட்சேர்ப்புக்கு ஆளாக்கி போராளிகளாக இணைத்தமை பற்றி சான்றாதாரங்கள் இருக்குமிடத்து மேற்படி குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக சட்டம் செயற்படுத்தப்பட வேண்டும்.*

9.77 முன்னாள் சிறுவர் போராளிகளின் புனர்வாழ்வு யுத்தத்திற்குப் பின்னரான அரசாங்கத்தின் முன்னுரிமைக்குரிய நடவடிக்கையாக அமைதல் வேண்டும். அரசாங்கம் இந்நடவடிக்கையை திருப்திகரமாகச் செய்துள்ளது. இதைத் தொடர்வதற்கு பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்போடு சமூக மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்த வேண்டும்.

9.78 புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்கள் முடிவுற்றவுடன் இச்சிறுவர்கள் தமது குடும்பத்தினருடன் வாழ்வதற்கு வசதியளிக்க வேண்டும். அதே சமயம் ஒரு ஜீவனோபாய மார்க்கத்தை வழங்குவதற்கும் முறைசாராக் கல்வியைத் தொடர்வதற்கும் வசதிகள் செய்யப்பட வேண்டும்.

9.79 *சிறுவர்களை கட்டாய ஆட்சேர்ப்புக்கு ஆளாக்கி போராளிகளாக இணைத்தமை பற்றி சான்றாதாரங்கள் இருக்குமிடத்து மேற்படி குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக சட்டம் செயற்படுத்தப்பட வேண்டும்.* இத்தகைய நடைமுறைகள் எதிர்காலத்தில் ஏற்படா வண்ணம் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

9.80 முன்னாள் சிறுவர் போராளிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கத் தனியார் துறையின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும். தொழில் செய்யும் அதே நேரத்தில் கல்வி வசதிகளும் வழங்கப்படல் வேண்டும்.

9.81 ஆயுத மோதல்களில் ஈடுபட்ட சிறுவர்களை மீண்டும் அவர்களின் குடும்பங்களுடன் இணைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்குவதற்கு சர்வதேச நிறுவனங்களினதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: Global Peace Support Website

உள்நாட்டு நிறுவனங்களினதும் உதவிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

9.82 எல்.ரீ.ரீ.ஈ வயதில் குறைந்த சந்தேக நபர்கள் பற்றி தனித்தனியான பரிசீலனை செய்யப்பட்டு தாமதிக்காது சட்டத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அல்லது புனர்வாழ்வு அழித்து விடுவிக்கப்பட வேண்டும்.

## அபாய வாய்ப்பு நிலைகொண்ட குழுவினர் (பொதுவானவை)

9.83 பெண்கள் சிறுவர்கள் இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் ஊனமுற்றவர்கள் ஆகியோர் யுத்தம் காரணமாக பல்வேறு துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்துள்ளனர். யுத்தத்தின் பின்னர் இப்பிரிவினரின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு அவசியமான தீர்வுகளை மேற்கொள்வதற்கும் அரசாங்கம் முன்னுரிமை வழங்க வேண்டும். இதனைச் செய்யாது நிலைபேறான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> அவர்கள் தமது வயோதிபப் பெற்றோர்களையும் பராமரித்து வருகின்றனர். இவர்களின் பாதுகாப்பையும் மானுட கௌரவத்தையும் உறுதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

9.84 மோதலின் முழுத் தாக்கத்தையும் எதிர்கொண்டவர்கள் பெண்களும் சிறுவர்களும் முதியோரும் ஆவர். பெரும்பாலான பெண்கள் தமது கணவன்மாரை இழந்துள்ளனர். இத்தகைய கஷ்டங்களுக்கு மத்தியில் *அவர்கள் தமது வயோதிபப் பெற்றோர்களையும் பராமரித்து வருகின்றனர். இவர்களின் பாதுகாப்பையும் மானுட கௌரவத்தையும் உறுதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.*

9.85 தங்களது அன்புக்குரியவர்கள் ஒன்றில் உயிருடன் இருக்கிறார்களா அல்லது இறந்துவிட்டார்களா என்ற உறுதிப்பாட்டை பெற இவர்கள் விரும்புகின்றார்கள். இறந்துவிட்டாராயின் மத ரீதியான கிரியைகளை மேற்கொண்டு தங்கள் வாழ்க்கையை முன்னெடுக்க விரும்புகின்றனர். இதை நிறைவேற்றுவதன் மூலம் அர்த்தமுள்ள நல்லிணக்கத்திற்கு ஒரு காரணியாக அமையும்.

## பெண்கள்

9.86 அரசாங்கத்தகவல் மூலங்களின் படி 59,000 இற்கும் அதிகமான பெண்கள் குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இவர்களின் நல்வாழ்வினை உறுதிப்படுத்துவதும் நல்லிணக்கத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் மிக முக்கியமாகும்.

9.87 அநேகமான பெண்கள் தமது கணவன்மாரை இழந்துள்ளனர். அல்லது அவர்கள் இருக்கும் இடம் தெரியாதிருக்கின்றனர். சிலர் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இத்தகைய மன வேதனைகள் இருக்கத் தக்கதாக மேற்படி குடும்பங்களின் சிறுவர்களையும் முதியோர்களையும் பராமரிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: International Crisis Group website

வேண்டியது இப்பெண்களின் பொறுப்பாகும். எனவே அவர்களுக்கான ஒரு ஜீவனோபாய மார்க்கத்தையும் வருமானம் ஈட்டித் தரும் முறையையும் அமுல்படுத்த வேண்டும்.

9.88 இந்தப் பணியில் உதவியளிப்பதற்கு சர்வதேச சமூகங்களும் சர்வதேச ஸ்தாபனங்களும் சிவில் அமைப்புக்களும் தமது அறிவையும் வழங்கலையும் வழங்கும் வகையில் அரசாங்கம் முன்னின்று செயற்பட வேண்டும். உள்ளூராட்சி நிறுவனங்கள், அரசியல் தலைமைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் என்போர் பாதிக்கப்பட்டோரின் மனநலம் கருதி நடவடிக்கைகளையும் தீர்வுகளையும் மேற்கொள்வதற்கு அரசாங்கம் வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

9.89 மோதலின் நீடித்த யுத்தம் காரணமாகவும் குடும்பத்தின் ஆண்களை இழந்த காரணத்தினாலும் கல்வி தொடர முடியாது பல பெண்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு முறைசார் அல்லது முறைசாரா கல்வி வசதிகளை ஏற்படுத்தியும் தொழில்பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது வாழ்வாதார முறை என்பவற்றை தயாரிக்கவும் உதவ வேண்டும்.

9.90 *இப்பெண்கள் தமது பாதுகாப்பை உறுதி செய்யக்கூடிய வகையிலும் தமது மனித கௌரவம் பாதுகாக்கக் கூடிய வகையிலும் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.* நல்லிணக்கத்திற்கான முன் நிபந்தனையாக இத்தகைய சூழலை உருவாக்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என ஆணைக்குழு கருதுகிறது.

> *பெண்கள் தமது பாதுகாப்பை உறுதி செய்யக்கூடிய வகையிலும் தமது மனித கௌரவம் பாதுகாக்கக் கூடிய வகையிலும் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.*

9.91 காணாமற் போனவர்கள், கடத்தப்பட்டவர்கள், எதேச்சதிகாரமாக நீண்டகாலம் தடுத்து வைத்தல், காணாமற் போகச் செய்தல் என்பன பெண்களை நேரடியாகப் பாதிக்கும் விடயங்களாகும். மேற்படி பாதிப்புக்கு உள்ளானவர் தமது கணவராகவோ தந்தையாகவோ மகன்மாராகவோ சகோதரர்களாகவோ இருக்கலாம். தமது அன்புக்குரியவர்கள் இருக்கும் இடம் அறியாவிட்டால் உண்மையையும் சட்ட ரீதியான பாதுகாப்பையும் பெறும் உரிமை அவர்களது ஜனநாயக உரிமையாகும். நல்லிணக்க முயற்சிக்கு இது முன் நிபந்தனையாகும்.

9.92 இப்பிரச்சினைகளுக்கு நிலைபேறான தீர்வுகளைக் காண்பதாயின் நிறுவனங்களுக் கிடையிலான முயற்சிகளும் ஒருங்கிணைந்த முயற்சியினால் மட்டுமே அதை எதிர்கொள்ள முடியும் என ஆணைக்குழு கருதுகிறது. மேற்குறிப்பிட்ட பாதிப்புக்குள்ளான அனைவர் பற்றிய தீர்வுகளைக் காண்பதற்கும் தேவையான நிவாரணங்களை வழங்குவதற்கும் ஒரு செயலணி தாமதமின்றி ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Photo source: Photo by Campana.cz

## சிறுவர்கள்

9.93 சிறுவர்களுக்கு கல்வி வசதிகளை வழங்குவதை ஆணைக்குழு வலியுறுத்திப் பரிந்துரை செய்கிறது. பாடசாலைகள் ஆசிரியரின் சேவைகள் பாடசாலை உபகரணங்கள் நிதி வசதிகள் போன்றே புலமைப் பரிசில்களை ஏற்படுத்துவதும் மிக முக்கியமாகும். அனைத்து சிறுவர் இல்லங்களுக்கும் இவ்வசதிகளுடன் சுகாதார நிதியுதவியும் அத்தியாவசியமாகும்.

9.94 வன்முறை மோதல்களின் போது தனது தாயை அல்லது தந்தையை இழந்த சிறுவர்கள் பாரிய உள ரீதியான அதிர்ச்சியை எதிர்நோக்கியுள்ளனர். அவர்களின் கல்வியும் சீர்குலைந்துள்ளது. சிவில் சமூகங்களின் ஒத்துழைப்பைப் பெற்று மேற்படி சிறுவர்களை அடையாளம் காணவும் தீர்வுகளைக் காணவும் ஆர்வம் செலுத்த வேண்டும்.

9.95 பாடசாலைகளுக்கான சுகாதார சேவைகள் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் உட்பட சிறுவர்களுக்கு சாதகமான ஒரு சூழலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்குவதற்கு அரசாங்கத்திற்கும், உள்ளூராட்சி மன்றங்களுக்கும் சிவில் சமூகங்களுக்கும் பரிந்துரை செய்கிறோம்.

"அவர்களின் குடும்ப நிலைமைகளை மேம்படுத்தி வயோதிபர்களின் சுமையைக் குறைப்பதற்கும் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் கவனம் செலுத்த வேண்டும்."

## முதியோர்கள்

9.96 மோதல்களினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள வயோதிபர்கள் பெரிதும் துன்பப்படுகின்றனர். தமது பிள்ளைகளையும் பேரப் பிள்ளைகளையும் இழந்தமையால் எஞ்சியுள்ள குடும்ப அங்கத்தினர்களை பராமரிக்கும் பொறுப்பு அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. அவர்களது உடல் உள கஷ்டங்களை அடையாளம் காண வேண்டும். *அவர்களின் குடும்ப நிலைமைகளை மேம்படுத்தி வயோதிபர்களின் சுமையைக் குறைப்பதற்கும் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் கவனம் செலுத்த வேண்டும்.*

9.97 அவர்களின் மனக் காயங்களுக்கும் அதிர்ச்சிக்கும் தீர்வு காண்பதற்கு ஆத்மீக கலாசார நிகழ்ச்சித்திட்டங்களை பயன்படுத்த வேண்டும். இது தொடர்பாக சிவில் சமூக அமைப்புக்களுக்கும் மத நிறுவனங்களுக்கும் பாரிய பங்களிப்பைச் செய்ய முடியும். அரசாங்கம் இதற்கான வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

9.98 குடும்பங்களில் வருமானத்தை ஈட்டிய அநேகர் தற்போது ஊனமுற்றோர்களாக இருக்கின்றனர். அவர்களுக்கு உதவுவது உடனடி தேவையாகும். சர்வதேச நிறுவனங்களிலிருந்து இதற்கான ஒத்துழைப்பைப் பெற வேண்டும். இவர்களின் பொருளாதாரத் தேவைகள் மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கூடிய கவனத்தைச் செலுத்த வேண்டும். கலாசார ஆத்மீக தேவைகளையிட்டும் கவனம் செலுத்த வேண்டும்.

9.99 அவர்கள் சனசமூக குழுக்களாக ஒழுங்கமைத்துக் கொள்வதற்கு ஊக்கப்படுத்துதல் வேண்டும்.

9.100 ஊனமுற்றவர்களில் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகளின் சமவாயங்களுக்கு ஏற்ப தேசியச் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரை செய்கிறது.

## உள்ளக இடம்பெயர்ந்த மக்கள்

9.101 மோதலின் இறுதிக் கட்டத்தில் பெறும் எண்ணிக்கையிலானோர் இடம்பெயர்ந்தனர். அவர்களில் அனேகமானோர் மீளக் குடியேற்றப்பட்டதை அறிவதில் ஆணைக்குழு மகிழ்ச்சியடைகிறது. மீளக்குடியேற்றப் பட்டவர்களின் தேவைகள் தொடர்ந்தும் நிலவுகின்றன. அவர்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவது பற்றி கவனம் செலுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> “*போதிய வீதிகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் போன்ற உட்கட்டுமானத் தேவைகள் மேம்படுத்தப்பட வேண்டும். தொண்டர் அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் மற்றும் தொண்டர் நிறுவனங்கள் இது தொடர்பாக ஊக்குவிக்கப்பட வேண்டும்*”

9.102 இடம்பெயர்ந்த மக்களின் மீள் திரும்புதல் செயன்முறைகள் பெருமளவில் பூர்த்தி செய்யப்பட்டமைக்காக அரசாங்கம் மற்றும் அக்கறை கொண்ட அனைத்துச் செயற்பாட்டாளர்கள் பாராட்டப்படல் வேண்டும். எவ்வாறாயினும் மீளக் குடியமர்த்தப்பட்ட மக்களின் தொடர்ச்சியான தேவைகளுக்கு கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

9.103 மீள் திரும்பியவர்களில் பலரும் தற்காலிகக் கொட்டில்களிலேயே இன்னமும் வசிப்பதால் தங்கள் வீடுகளைத் திருத்துவதற்கு உதவிகள் அளிக்கப்படுதல் வேண்டும். இது தொடர்பில் 'சிரமதானம் போன்ற வேலைத் திட்டங்கள் ஊக்குவிக்கப்படல் வேண்டும். *போதிய வீதிகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் போன்ற உட்கட்டுமானத் தேவைகள் மேம்படுத்தப்பட வேண்டும். தொண்டர் அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் மற்றும் தொண்டர் நிறுவனங்கள் இது தொடர்பாக ஊக்குவிக்கப்பட வேண்டும்*

9.104 மீள் குடியமர்ந்தவர்களுக்கு சட்ட ரீதியான நில உரிமையை அளிப்பதற்கான ஒரு தேவை உள்ளது.

9.105 தங்களது வாழ்வை மீளக் கட்டியமைப்பதற்காக கீழ் மட்டத்திலிருந்து சமூக அபிவிருத்தி வேலைகள் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

9.106 தங்களின் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்துவதற்கு சர்வதேச கொள்கைகளுக்கேற்ப சுதந்திரமான நடமாட்டம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இது பற்றி அரசாங்கத்தின் கொள்கையை விளக்குவதன் மூலம் தவறான கொள்கைகளை நீக்கவும் முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: Opportunity for All website

போரின் பின்னர் புதிய பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

9.107 பாதுகாப்பு உட்பட பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதாயின் அச்சம் நம்பிக்கையீனம் இல்லாத ஒரு சூழமைவை ஏற்படுத்த வேண்டும். இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே உண்மையான நல்லிணக்கம் ஏற்படும்.

9.108 இந்தியாவில் இடம்பெயர்ந்து வாழ்வோர் தமது சொந்த விருப்பின் பேரில் இலங்கைக்குத் திரும்பி மீள் குடியேற சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கும் அவர்களுக்குமிடையே எதுவித பாரபட்சமும் இருக்கக் கூடாது. இலங்கைக்கு மீளத் திரும்புவதற்கு இந்தியாவுடன் இரு தரப்பு இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> இடம்பெயர்ந்தோர் பற்றிய பிரச்சினை மீளக் குடியமர்த்துவது பற்றிய நிலையான அரச கொள்கை மூலம் தீர்க்கப்பட வேண்டும்.

## வடக்கு மற்றும் கிழக்கில் முஸ்லிம் சமூகம் தொடர்பான கரிசணைகள்

9.109 எல்.ரீ.ரீ.ஈ அச்சுறுத்தல் காரணமாக 1990ம் ஆண்டு ஒக்டோபரில் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய 5 மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் சமூகத்தின் பல்வேறு பிரச்சினைகள் மிகுந்த சவால் மிகுந்ததாகும். அது நல்லிணக்கத்தின் மீதும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

9.110 இப்பிரச்சினை மீது கவனம் செலுத்தப் படாவிட்டால் அமைதியின்மைக்கும் இணக்கப்பாட்டின்மைக்குமான காரணியாக அது அமையலாம்.

9.111 நீடித்த யுத்தத்தின் பெறுபேறாக *இடம்பெயர்ந்தோர் பற்றிய பிரச்சினை மீளக்குடியமர்த்துவது பற்றிய நிலையான அரச கொள்கை மூலம் தீர்க்கப்பட வேண்டும்.* புகலிடம் அளித்த சமூகத்தில் அல்லது தமது சொந்த இடங்களில் அவர்கள் மீள் குடியேறுவதற்கு வசதியளித்தல் வேண்டும்.

9.112 அத்தகைய அரச கொள்கைகள் நிதி உதவிகள் பொருளுதவிகள் உட்பட்ட உதவிப் பொறிமுறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

9.113 உள்ளக இடம்பெயர்ந்த மக்களினதும் புகலிடம் வழங்கிய சமூகங்களினதும் விரிவான கலந்துரையாடலின் மூலம் செயற்படுவதற்கு ஒரு விசேடக்குழு நியமிக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: Eelanatham.info website

உதயன் பத்திரிகை ஆசிரியர் தாக்கப்பட்டமையை எதிர்த்து நடத்தப்படும் ஆர்ப்பாட்டம்

## பேச்சுச் சுதந்திரம் மற்றும் தகவல்களுக்கான உரிமை

9.114 பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்கள், கொலைகள், ஊடக நிறுவனங்களை அழித்தல் போன்ற சம்பவங்களை இட்டு புலன் விசாரணை செய்து குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும். இந்நிலைமை தொடர்வதையிட்டு ஆணைக்குழு ஆழ்ந்த கவலை அடைகிறது. ஆணைக்குழுவின் அமர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையிலேயே உதயன் பத்திரிகையின் பத்திரிகை ஆசிரியர் மீதான மோசமான தாக்குதலினால் ஆணைக் குழு அதிர்ச்சியடைவதோடு அதனை வன்மையாகக் கண்டிக்கிறது. இது பற்றி புலன்விசாரணை செய்து குற்றமிழைத்தவர் களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதன் மூலமே நல்லிணக்கத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் நிலைநாட்ட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> *ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.*

9.115 பேச்சுச் சுதந்திரம் எத்தகைய ஒரு நல்லிணக்கத்திற்கும் மிக அத்தியாவசியமாகும். அடிப்படை உரிமைகளுக்கான கடப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஊடகச் சுதந்திரத்தை மேம்படுத்த முடியும். இதற்கு மட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதன் மூலம் இனங்களுக்கிடையே நம்பிக்கையீனம் ஏற்படும். நல்லிணக்க செயன்முறைகளுக்கு தடை விதிக்கும் இச்செயற்பாடுகள் தற்போதும் இடம்பெற்று வருகின்றன. எனவே ஆணைக்குழு பின்வருவனவற்றை பரிந்துரைக்கின்றது.

அ. *ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.*

ஆ. குற்றவியல் நீதி முறைகளில் பொதுமக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்காக மேற்படி குற்றங்களைப் புரிவோருக்கும் எதிராக சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும்.

இ. தாமதமின்றி புலன்விசாரணைகளை நிறைவு செய்ய வேண்டும்.

ஈ. வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு ஊடகவியலாளர் சுதந்திரமாக நடமாடுவதை உறுதி செய்ய வேண்டும்

உ. தகவல்களுக்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்கு சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: Global Peace Support Website
Photo Courtesy of Steve Chao

மதச் சுதந்திரத்திற்கு இராணுவப் பாதுகாப்பு

## மத வழிபாட்டுச் சுதந்திரம், ஒன்று கூடும் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம்

9.116 நிலை பேறானதும் நம்பகரமானதுமான எந்த நல்லிணக்கச் செயல்முறைகளுக்கும் வழிபாட்டுச் சுதந்திரம், ஒன்று கூடும் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம் அவசியமாகும். எந்த ஒரு அரச நிறுவனமும் பாதுகாப்புப் படையினரும் பொலீஸாரும் இவற்றை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என ஆணைக்குழு வலியுறுத்துகிறது.

9.117 உயர் பாதுகாப்பு வலயம் உட்பட எல்லாப் பிரதேசங்களிலும் அமைந்துள்ள வணக்க ஸ்தலங்களுக்கான நடமாடும் சுதந்திரத்தை மிதிவெடி அகற்றும் நடவடிக்கைகளின் போது தவிர வணக்கஸ்தலங்களுக்கான கட்டுப்பாடுகளை விதிக்கக்கூடாது.

9.118 கட்டுப்பாடுகள் இன்றி விழாக்களையும் கூட்டங்களையும் ஏற்பாடு செய்வற்கு சுதந்திரம் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> இலங்கையின் எந்தவொரு பிரஜையும் நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைய காணிகளை உரித்தாக்கிக் கொள்ளவும் தாம் தனது விருப்பத்திற்குரிய எந்தவொரு பகுதியிலும் அழுத்தமின்றி வசிப்பதற்கும் உள்ள உரிமையை நீக்க முடியாது.

9.119 கட்டுப்பாடுகள் இன்றி மீளக்குடியேறிய பகுதிகளில் தமது உறவினர்களையும் நண்பர்களையும் சந்திப்பதற்கு அனுமதி அளிக்க வேண்டும்.

## கடந்த கால விசாரணை ஆணைக்குழு அறிக்கைகள் தொடர்பான பிற்தொடர்ச்சி நடவடிக்கைகள்

9.120 திருகோணமலையில் 2006 இல் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதே ஆண்டில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் 17 ஊழியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இச்சம்பவங்கள் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளுக்கு அமைய குற்றமிழைத் தோருக்கு எதிராக சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆணைக்குழு வலியுறுத்தி பரிந்துரை செய்கிறது. நல்லிணக்கத்திற்கு இச்செயற்பாடு ஊக்குவிப்பு வழங்கும்.

## அத்தியாயம் 06

## காணிப்பிரச்சினைகள் மீதான அவதானிப்புகள். தமது காணிகளுக்கு மீளத் திரும்புதலும் மீள் குடியேற்றமும்

9.121 நீண்டகால யுத்தத்தின் பின்பு நாட்டை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவது இலகுவான பணியல்ல. சட்டவிரோதமாக காணிகளை அபகரித்தல், சட்ட விரோத காணி மாற்றங்கள், அவற்றை நிறுவன மயமாக்கல் என்பவற்றை தடுப்பது முக்கியமாகும். இது தீர்க்கப்படாவிட்டால் மீண்டும் மோதல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Photo source: TamilNewsNetwork Website

உருவாக்கும் புள்ளிகளாக உருமாற்றம் அடையும்.

9.122 மோதலுக்குப் பின்னர் மீள்குடியேற்றம் அமுலாக்கப்படுகையில் காணிப் பிரச்சினைகள் முக்கிய இடத்தை எடுக்கும். மனிதர்கள் காணிகளுக்கு உரிமை கொண்டாடுவதும் அவற்றை சொந்தமாக்கிக் கொள்ள முயற்சித்தலும் ஒரு சிக்கலான பிரச்சினையாகும். எனவே மோதலுக்கு முன்னைய நிலையை உருவாக்குவது கடினமானது.

9.123 மேற்கூறிய நிலைமையை எதிர்நோக்கியுள்ளது. ஆணைக்குழுவின் பரிந்துரைகள் இந்நிலைமையின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

9.124 *இலங்கையின் எந்தவொரு பிரஜையும் நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைய காணிகளை உரித்தாக்கிக் கொள்ளவும் தாம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ஒரு குறிப்பிட்ட மாகாணத்தின் மக்கட் பரம்பல் மாதிரியை இயற்கைக்கு முரணான வகையில் மாற்றுவது அரசாங்கத்தின் காணிக்கொள்கையாக அமையக் கூடாது.

*தனது விருப்பத்திற்குரிய எந்தவொரு பகுதியிலும் அழுத்தமின்றி வசிப்பதற்கும் உள்ள உரிமையை நீக்க முடியாது. ஆனால் ஒரு குறிப்பிட்ட மாகாணத்தின் மக்கட் பரம்பல் மாதிரியை இயற்கைக்கு முரணான வகையில் மாற்றுவது அரசாங்கத்தின் காணிக்கொள்கையாக அமையக் கூடாது.* இலங்கையின் அரசியல் அமைப்பிற்கு ஏற்புடைய வகையிலேயே காணிப்பகிர்வு இடம்பெற வேண்டும்.

9.125 இடம்பெயர்ந்த மக்களின் மீள் திரும்புதல் மற்றும் மீள் குடியேற்றம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் அனுசரித்த காணிக்கொள்கையைப் பாராட்டுகிறோம். காணிகளை ஆவணப்படுத்திப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு உபயோகிக்கும் 2011 ஜுலை நிகழ்ச்சித்திட்டத்தையும் ஆணைக்குழு பாராட்டுகிறது. அலுவலக மற்றும் நீதிமன்ற கஷ்டங்களிலிருந்து விடுபட்ட ஒரு பொறிமுறையை ஈடுபடுத்தும் முயற்சிகளிலிருந்து விடுவிக்கப்பட்ட ஒரு பொறிமுறையைப் பயன்படுத்துவதும் உசிதமானது.

9.126 எவ்வாறாயினும் இந்நிகழ்ச்சித்திட்டம் காணி உறுதியில்லாத இடம்பெயர்ந்தவர்களுக்கானது என்பதையிட்டு மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும். இது ஏற்கனவே நடைமுறையிலுள்ள காணி உறுதியை ரத்து செய்யும் முறையாக அமையவும் கூடாது.

9.127 அமுல்படுத்தலை பயனுறுதித் தன்மையை மற்றும் பெறுபேறுகளை உறுதிப்படுத்துவதற்கு ஆணைக்குழு பின்வரும் பரிந்துரைகளைச் செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.128 திட்டமிடப்பட்டவாறு எந்த பிரச்சினையாக இருப்பினும் வெற்றிகரமான முறையிலும் தாமதிக்காத முறையிலும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு அரசியல் தலையீடு இல்லாத ஆனால் உறுதியான அரசியல் துணிவு இருத்தல் வேண்டும். அவசியமான மனித வளங்களையும் நிதி வளங்களையும் அரசாங்கம் வழங்க வேண்டும்.





Photo source: Courtesy of CPA

9.129 இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பாரபட்சமற்ற தன்மையையும் நியாயமான தன்மையையும் உறுதிப் படுத்துவதற்குப் பலம் வாய்ந்த நிர்வாக அர்ப்பணிப்பு அவசியம். எனவே, இதனைக் குறிப்பிட்ட அரசாங்க அதிபர்களினதும், அதன் தரங்களையும் குணாம்சங்களையும் அவதானித்து காணி பற்றிய ஆணையாளருக்கு ஒப்படைக்க வேண்டும்.

9.130 இப்பொறிமுறையை சந்தேகத்திற்கு இடமின்றி புரிந்துகொள்வதன் மூலமே நிகழ்ச்சி நிரலின் வெற்றி தங்கியுள்ளது. அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்கள், அரச அதிகாரிகள், சமூகத் தலைவர்கள் மற்றும் பயனாளிகள் அதன் குறிக்கோளையும் வழிமுறைகளையும் சந்தேகத்திற்கிடமின்றி புரிந்துகொள்ள முடியும். நல்ல நோக்கத்தோடு செய்த இதுவரை வெளியாகியுள்ள தகவல்களுக்கு அமைய குறிக்கோளும் வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையும் தெளிவாக்கப்பட வேண்டும். ஊடகமும் அரசியல்வாதிகளும் சரியான தகவல்களை வெளியிடாமையாலும், தற்போது அமுலாக்கப்படும் வேறு காணி நடவடிக்கைகள் காரணமாகவும் தவறான தகவல்கள்பிரபல்யமாக வெளியிடப்பட்டுள்ளன.

> அரசியல் நிலைப்பாடு எதுவும் இன்றி புதிய நிகழ்ச்சித் திட்டத்தைப் பற்றி சரியான கருத்தை வெளியிடுவதற்கு காணிகள் ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் ஓர் ஊடகக் கருத்தரங்கை நடத்துவது உசிதமானது

9.131 *அரசியல் நிலைப்பாடு எதுவும் இன்றி புதிய நிகழ்ச்சித்திட்டத்தைப் பற்றி சரியான கருத்தை வெளியிடுவதற்கு காணிகள் ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் ஓர் ஊடகக் கருத்தரங்கை நடத்துவது உசிதமானது.*

9.132 காணி ஆணையாளர் திணைக்களமும் அரசாங்க அதிபர்களும் கூட்டாக அரச உத்தியோகத்தர்களுக்கும் சமூகத் தலைவர்களுக்கும் திட்டமிடப்பட்ட பயிற்சியை வழங்க வேண்டும். பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் சம்பவக் கற்கைகள், பயிற்சி முறைகள் என்பன உள்ளடக்கிய கைநூல் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு பயிற்சி நூல் அமைய வேண்டும். இதற்கு நிபுணத்துவ நிறுவனங்களையும் பயன்படுத்த முடியும்.

9.133 ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் சேவைகளைப் பற்றி இடம் பெயர்ந்தவர்களுக்கு விளக்கமளிப்பதற்கு அவர்கள் எதனை எப்படிச் செய்ய வேண்டும் என்பதை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தொடர்பாடல் செய்யும் ஒரு வேலைத் திட்டத்தை உள்ளடக்கி இருத்தல் வேண்டும். அதன் மூலம் பெறுபேறுகளைப் பெறுவதற்கு இது அவர்களுக்கு உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாதுகாப்பும் படையினர் சிவில் நிர்வாக நடவடிக்கைகளிலிருந்து விலக வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரைக்கிறது.

9.134 பாதுகாப்புப் படையினர் சிவில் நிர்வாக நடவடிக்கைகளிலிருந்து விலக வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரைக்கிறது. சில காணிகள் பாதுகாப்புப் படையினரின் பயன்பாட்டிற்காகவும் பாதுகாப்புத் தேவைகளுக்கு அவசியமாக இருப்பினும், பொது மக்கள் குடியிருப்பதற்கு இடமளிக்கும் கொள்கையை முன்னெடுக்க வேண்டும். மேற்படி காணிகள் இயன்றளவு விடுவிப்பதைத் துரிதப்படுத்த வேண்டும்.

9.135 இந்நிகழ்ச்சித்திட்டங்களில் சமூக ஆலோசனையைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் இருப்பது பாராட்டுதற்குரியது. பிரதேசச் செயலாளர்கள் பிரதேசங்களில் ஆய்வுக் குழுக்களை உருவாக்குவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> *காணி ஆணையார் திணைக்களம் நிபுணத்துவமுடைய ஓய்வூதியம் பெறுவோரை பயன்படுத்த முடியும்.*

முன்னர் சமூக ஆலோசனை விசாரணைக் கூட்டங்களை நடத்த வேண்டும். மீள வருகை தந்து குடியேறிய மக்கள் தமது பிரச்சினைகளை முன்வைத்து புலன் விசாரணையை முன்னேற்ற முடியும். காணிப் பிரச்சினைகளை தீர்க்கும் முறையில், தமக்கு செவிமடுப்பது பற்றியும் நம்பிக்கை ஏற்படும். ஆலோசனை கோரும் கூட்டங்களில் கூட்டாக காணிக் கச்சேரி முறையைப் பயன்படுத்த முடியும்.

9.136 சமூகத்தின் யோசனைகளை கவனிப்பதற்கு ஒரு பொறிமுறையை அமைக்க வேண்டும்.

9.137 நிகழ்ச்சித் திட்டத்தை வினைத் திறனுடனும் பயனுறுதி வாய்ந்த முறையிலும் அமைவதற்கு *காணி ஆணையார் திணைக்களம் நிபுணத்துவமுடைய ஓய்வூதியம் பெறுவோரை பயன்படுத்த முடியும்.*

9.138 மேற்படி பரிந்துரைகளை அமுலாக்குவதற்கு மேலதிக நிதியும் காலமும் தேவை. ஆனால் அதன் மூலம் நிகழ்ச்சித்திட்டம் பலம் வாய்ந்ததாக அமைவதோடு மக்கள் நன்மைகளைப் பெறுகின்றனர்.

9.139 வடக்கு கிழக்கு மாகாணங்களில் உண்மையாகவே காணியற்ற குடும்பங்களுக்கு காணிகளை வழங்குவதற்கு இந்நிகழ்ச்சி எதிர்பார்க்கின்றது. இரண்டாவதாக ஏற்கனவே குடியிருப்போர் முன்னனுமதி பெற்றிருப்பின் மாத்திரம் காணியை வழங்குவது தவறு. ஆனால் மோசடியான முறையில் காணிகளைப் பெறுவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Photo source: Centre for Human Rights

*ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியளிக்கும் சந்தர்ப்பம் – திருகோணமலை*

இரண்டாவது வசிப்பிடத்தை பயன்படுவதைத் தடுப்பதற்கு விசாரணை ஆணைக்குழுவின் மூலம் உண்மையிலேயே அவர்களுக்கு காணிகள் இல்லையா என தேடிப் பார்க்க வேண்டும்.

9.140 நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படும் வரை, உள்ளக இடம்பெயர்வு ஒன்று, அரச தேவைகளைத் தவிர்த்து, அரச காணிகளை பிறரது உரிமையாக்குவது பற்றிக் கடுமையான கட்டுப்பாடுகள் அமைய வேண்டும். போலிக் காணி உறுதிகள் மூலம் காணிகள் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பான அரச உத்தியோகத்தர்கள், சட்டத்தரணிகள், நொத்தாரிஸ்மார் என்போருக்கு எதிராக சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

9.141 இந்நிகழ்ச்சித் திட்டத்தை அமுலாக்குவதற்கு சர்வதேச நிதி உதவியைப் பெறலாம். ஆனால் காணிப்பிரிவு மந்த கதியில் பணத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவிடுவதைத் தடுப்பதற்கு இந்நிகழ்ச்சித் திட்டத்தில் கொள்கைத் தீர்மானம் எடுத்தல் மற்றும் செயற்படுத்தல் அரசாங்கத்தின் கீழ் உள்ளமையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

9.142 பலாலி மற்றும் திருகோணமலை, சாம்பூர் ஆகிய பிரதேசங்களின் உயர் பாதுகாப்பு வலயங்கள் குறைக்கப்பட்டு சுமார் அரை வாசிப் பேர், தமது சொந்த கிராமங்களுக்கு அனுப்பப்பட்டனர். ஆனால் மேலும் ஒரு பகுதி தொடர்ந்தும் உயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்து வருகின்றன. *பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகப் பெறப்பட்ட தனியார் காணிகள், பாதுகாப்புத் தேவைகளையும் கருத்திற்கொண்டு, மிக விரைவில் விடுவிக்கப்பட வேண்டும். இதனால் காணி இழந்தவர்களுக்கு மாற்றுக் காணிகளை அல்லது திட்டவட்டமான காலகட்டத்திற்குள் நஷ்ட ஈடு வழங்குவதையும் பரிந்துரைக்கின்றோம்.*

*பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகப் பெறப்பட்ட தனியார் காணிகள், பாதுகாப்புத் தேவைகளையும் கருத்திற்கொண்டு, மிக விரைவில் விடுவிக்கப்பட வேண்டும். இதனால் காணி இழந்தவர்களுக்கு மாற்றுக் காணிகளை அல்லது திட்டவட்டமான காலகட்டத்திற்குள் நஷ்ட ஈடு வழங்குவதையும் பரிந்துரைக்கின்றோம்.*

9.143 'புதிதாக இடம்பெயர்ந்த குடும்பங்களுக்குத்" வாழ்வாதார உதவி வழங்குவதற்கான காலத்தை நீடிக்க வேண்டும். வட மாகாணத்தின் சில பிரதேசங்களில் இது நீடித்தமையையிட்டு பாராட்டுகிறோம். இதனை அபிவிருத்திப் பங்காளர்களின் உதவியோடு செய்ய முடியும். விவசாயிகளுக்கு சிறு கடன் வழங்குதல், விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ட்ரெக்ரர் வழங்குதல் உட்பட வாழ்வாதார உதவியை மேலும் விரிவாக்க வேண்டும். நீர்ப்பாசன நீர்த் திட்டம் தொடர்ச்சியாக பராமரிப்பதும் நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source:

*கிழக்கு மாகாணத்தின் விவசாயக் காணிகளில் இருந்து எல்.ரீ.ரீ.ஈ விரட்டியடித்த முஸ்லிம் குடும்பங்களுக்கு துரிதமாக நிவாரணம் வழங்க வேண்டும்.*

9.144 கிழக்கு மாகாணத்தின் விவசாயக் காணிகளில் இருந்து எல்.ரீ.ரீ.ஈ. விரட்டியடித்த முஸ்லிம் குடும்பங்களின் பிரச்சினையை துரிதமாகத் தீர்க்க வேண்டும். யுத்தம் முடிவுற்றிருந்தாலும், குறிப்பாக மட்டக்களப்புப் பிரதேசத்தின் முன்னேற்றம் வெற்றிகரமாக இல்லை.

9.145 யாழ் மாவட்டத்திலிருந்து விரட்டி அடிக்கப்பட்ட சிங்களக் குடும்பங்கள் பற்றிய தகவல்கள் முழுமையானதல்ல. இனத்துவ உணர்வுகளைத் தூண்டாத வகையில் முறைசார் ஆய்வை மேற்கொள்ள வேண்டும். *தமது சொந்தக் காணிகளுக்கு போக விரும்புபவர்கள் அதற்கு இடமளிக்க வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“

*தமது சொந்தக் காணிகளுக்கு போக விரும்புவர்கள் அதற்கு இடமளிக்க வேண்டும்.*

”

9.146 வடமாகாணத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம் மக்களின் மீள் வருகையும் மீள் குடியேற்றத்திலும் ஒரு முன்னேற்றம் உண்டு என யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு அரசாங்க அதிபர்கள் தகவல்களை வழங்கியுள்ளனர். எஞ்சியோரும் அங்கு செல்ல விரும்பினால் தாம் விரும்பிய கிராமங்களுக்குச் செல்ல வசதியளித்து அதனைத் துரிதப்படுத்த வேண்டும்.

9.147 எல்.ரீ.ரீ.ஈ தாக்குதல்கள் காரணமாக குடும்பத்தில் வருமானம் ஈட்டுபவர்கள் கொலையுண்ட குடும்பங்கள் மற்றும் குடும்பப் பாதுகாப்புக்காக 'இரவு வேளைகளில் இடம்பெயர்வதற்கு" கட்டாயப்படுத்தப்பட்ட சில குடும்பங்களின் காணிப் பிரச்சினைகள் மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் பெரிதும் மறுக்கப்பட்டோ அல்லது கவனம் செலுத்தப்படாதிருப்பதை ஆணைக்குழு கவனத்தில்கொள்கிறது. இவர்களில் கணிசமானோர் பெண்கள். இவர்களது இன்றைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு விசேட பொறிமுறை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரைக்கிறது.

9.148 வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள தனியார் காணிகளிலிருந்து குடிமக்கள் பலவந்தமாக விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். அதே சமயம் அவர்கள் குடியிருப்பதை சட்டபூர்வமாக்குவதைத் தடுப்பதற்கு ஆட்சி உரிமை தொடர்பான சட்டங்கள் திருத்தப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Photo source: Land Commissioners Dept Website

9.149 ஏப்ரல் 2008க்கு முன்னராக இடம் பெயர்ந்தவர்கள் பழைய இடம்பெயர்ந்த மக்கள் பற்றி ஆணைக்குழுவின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. அரசு அல்லது வேறு தரப்பினரின் செயற்படாமை காரணமாக அல்லது மந்தமாக செயற்படுதல் காரணமாக அவர்கள் பாரபட்சப்படுத்தப்பட்டதாக உணர்கின்றனர். இப்பிரச்சினைக்கு பின்வரும் பரிந்துரைகள் ஏற்புடையன. அவர்களுடைய பிரச்சினைகளை ஆய்வு செய்து மீள் குடியேற்றம் பற்றிய வேலைத்திட்டத்தை தயாரிப்பது நல்லிணக்கத்திற்கு பிரயோசனமாகும். அனைத்து இடம் பெயர்ந்தவர்களுக்கும் ஒரே உரிமையே இருக்கிறது.

9.150 தகுதியான தேசிய காணிக்கொள்கைக்கு வழிகாட்டும் முகமாக அரசாங்கம் துரிதமாக தேசிய காணி ஆணைக்குழு ஒன்றை அமைக்க வேண்டும். அரச காணிகளை நியாயமான முறையில் பகிர்ந்து கொடுப்பதற்காக இதன் மூலம் ஓரு கொள்கை தயாரிக்கப்பட வேண்டும். அரசியலமைப்பிற்கான 13ம் திருத்தத்தின் கீழ் இது ஓர் தேவையாகும். ஆனால் இதுவரை அது நடைமுறைப் படுத்தாமை கவலைக்குரியது.

9.151 வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு உரித்தான காணிப் பாவனை பற்றிய திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். நிகழ்கால எதிர்காலப் பரம்பரையின் வாழ்க்கையை குணாம்ச ரீதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றத்திற்காக சுற்றாடல், உயிரியல் பன்மைத்துவம், பொருளாதார அபிவிருத்தி, ஓய்வு பொழுது போக்கு, வணக்கத் தலங்கள் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்கள் என்பவற்றைப் பாதுகாப்பதற்கு நிபுணர்களின் பங்கேற்புடன் மேற்படித் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

> *மேற்படி பிரச்சினைகள் தேசிய பிரச்சினைகளாக அடையாளம் காணப்பட வேண்டும். அரசாங்கத்தினதும் எதிர்கட்சியினதும் குறுகிய அரசியல் நன்மைக்காக அவற்றை பயன்படுத்த வேண்டாம் எனவும் ஆணைக்குழு பரிந்துரைக்கிறது.*

9.152 *மேற்படி பிரச்சினைகள் தேசிய பிரச்சினைகளாக அடையாளம் காணப்பட வேண்டும். அரசாங்கத்தினதும் எதிர்கட்சியினதும் குறுகிய அரசியல் நன்மைக்காக அவற்றை பயன்படுத்த வேண்டாம் எனவும் ஆணைக்குழு பரிந்துரைக்கிறது.* தேசிய இன ஐக்கியத்திற்காக இத்தகைய பிரவேசத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

## அத்தியாயம் - 07

## மீள் அளிப்பு இழப்பீட்டு நிவாரணங்கள் மீதான அவதானிப்புகளும் பரிந்துரைகளும்

9.153 ஓர் சட்டரீதியிலான கோட்பாடாக மீள் அளிப்பு முதல் நிலையை அனுபவிக்கையில் இழப்பீடு மட்டும் நிதி ரீதியிலான நிவாரணம் போன்ற ஏனைய வடிவிலான நிவாரணங்கள் பொதுவாக நாடப்படுவது நன்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கொடுப்பனவுகளுக்கு தகுதியானவர்கள் ஒரு நியாயமான கால எல்லைக்குள் அவற்றை பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளைக் கொண்டிருப்பதை உறுதி செய்வதற்கு ஆணைக்குழுவின் பரிந்துரைகள் முயல்கின்றன.

9.154 ஆட்கள், சொத்துக்கள் மற்றும் கைத் தொழில்களின் புனருத்தாரண அதிகார சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Photo source: Centre for Human Rights

*கொடுப்பனவுகளைப் பெறத் தகுதியுள்ளோருக்கு நியாயமான கால வரம்பிற்குள் அவை வழங்கப்பட வேண்டும்.*

(REPPIA) என்பது பயங்கரவாதிகளின் வன்முறை மற்றும் அரசாங்கப் பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கை காரணமாக இழப்புகள் / சேதங்களால் பாதிக்கப்பட்ட ஆட்களுக்கான இழப்பீட்டு நிவாரணங்கள் மீது இலங்கை அரசாங்கத்தின் கொள்கை அமுல்படுத்தலுக்கு பொறுப்பான விசேட நிறுவனமாகும்.

9.155 நஷ்ட ஈட்டு நிவாரணங்கள் சம்பந்தப்பட்ட நெறிமுறைகளை ஆணைக்குழு கவனத்திற்கு எடுத்தது. மோதல்களின் பின்னர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ரேபியா (REPPIA) நிறுவனத்திற்கு உள்ள கடப்பாடும் ஆற்றலும் அரசினால் மீளாய்வு செய்ய வேண்டும்.

9.156 பாதிக்கப்பட்டவர்களுக்கு தகுதியான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நிதியின்மையே மிக முக்கிய பிரச்சினையாகும். நிர்வாக ரீதியிலான தடைகளை சமாளிக்க முடியும். ஆனால் நிதிப் பிரச்சினையைத் தீர்க்காமல் எந்தவொரு முன்னேற்றத்தையும் காண முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> உரிய நேரத்தில் முழுமையான கொடுப்பனவுகளை வழங்குவது அரசின் பொறுப்பாகும். தாமதங்கள் மற்றும் கொடுப்பனவின்மைக்கான நிதி இன்மையைத் தவிர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

9.157 *உரிய நேரத்தில் முழுமையான கொடுப்பனவுகளை வழங்குவது அரசின் பொறுப்பாகும். தாமதங்கள் மற்றும் கொடுப்பனவின்மைக்கான நிதி இன்மையைத் தவிர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.*

9.158 சகல உரிமைகளையும் வழங்குவதை உறுதி செய்யும் ரேபியா (REPPIA) ஒரு கால இலக்கை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும்.

9.159 இறுதி மோதல்களில் ஏற்பட்ட இழப்பீட்டுக்கான கொடுப்பனவுகளை பூர்த்தி செய்வதற்கான ஒரு கால எல்லை நிர்ணயிக்கப்பட வேண்டும். நிதிக்கான தேவை தீவிரமாக இருக்கையில் கொடுப்பனவுகளுக்கு உரித்தானவர்கள் அதை பெற்றுக்கொள்ள வேண்டும். ரேபியா (REPPIA) நிறுவனம் அதன் பொறுப்புக்களை முழுமையாக பூர்த்தி செய்ய வேண்டும்.

9.160 கால எல்லையை நிர்ணயிக்கும் போது விண்ணப்பங்களை மேற்கொள்வோருக்கு நியாயமான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். எல்.ரீ.ரீ.ஈ இன் ஆட்சிக்குட்பட்ட காலத்தில் இருந்து இடம்பெயர்ந்தோரை கவனத்தில் எடுக்க வேண்டும். அதற்கு போதிய பிரசாரங்களையும் செய்ய வேண்டும்.

9.161 இம்மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு கல்வி ஜீவனோபாய நிகழ்ச்சித்திட்டங்கள் தீர்க்கமானவை. ஆனால் நஷ்ட ஈடு, நிவாரணம் என்பன வழங்குவதே ரேபியா (REPPIA) நிறுவனத்தின் பொறுப்பாகும்.

9.162 பொதுமக்கள் மற்றும் அரச ஊழியர்களின் இறப்பு, காயம் மற்றும் வீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: World Bank website

மீளக் குடியேறும் இடம்பெயர்ந்தோருக்கு வீட்டு வசதிகள் பிரச்சினைக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும்.

உரித்துக்களுக்கான கொடுப்பனவுகளை ரேபியா (REPPIA) அவசரமாக முன்னுரிமைப்படுத்தல் வேண்டும். அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து அரச ஊழியர்கள் தகுதியற்றவர்களாக ஆக்கப்படுவது மீள் பரிசீலிக்கப்பட வேண்டும்.

9.163 இழப்பீட்டுத் தொகைகளை அதிகரிப்பதற்கான வேண்டுகோள்கள் ரேபியா (REPPIA) நிறுவனத்திடம் கோரப்பட்டுள்ளன. எனினும் தேக்கமடைந்துள்ள கொடுப்பனவுகள் மற்றும் நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள் என்பவற்றிற்கு அமைய அவற்றை தீர்த்து வைக்க முடியுமென ஆணைக்குழு கருதவில்லை. மீள் குடியேற்றம் மற்றும் மீள் கட்டியெழுப்புதல் என்பவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிப்படுத்துவதற்கு ஈடு செய்யும் திட்டங்களை வழங்க வேண்டும்.

9.164 எல்.ரீ.ரீ.ஈ அமைப்புடன் சம்பந்தப்பட்டவர்களின் இறப்பு மற்றும் காயம் என்பவற்றிற்கான இழப்பீட்டு நிவாரணம் பரந்த நல்லிணக்க கண்ணோட்டத்திலிருந்தே எடுக்கப்படல் வேண்டும். ரேபியா (REPPIA) நிறுவனம் பாதிப்புக்குள்ளான பொதுமக்களின் பிரச்சினைகளுக்கே முன்னுரிமை வழங்க வேண்டும்.

9.165 மீள வரும் உள்நாட்டு இடம்பெயர்ந்தவர்களின் வீட்டுப் பிரச்சினையும் நிவாரணங்களும் ரேபியா (REPPIA) நிறுவனத்தின் அதிகாரங்களுக்கு அப்பால் செல்லும் விடயங்கள் ஆகும். எனவே தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் அரசு வளங்களைத் தேட வேண்டும்.

9.166 இழப்பீட்டு நிவாரணங்களை ஏனைய நிவாரணங்களிலிருந்து வேறுபடுத்தி நோக்கக்கூடாது *மீளக்குடியேற்றம் அபிவிருத்தி நடவடிக்கைகள் அபிவிருத்தித் திட்டங்கள் என்பவற்றோடு சுகாதாரம், கல்வி, உணவு, நீர் மற்றும் விவசாயம், உட்கட்டமைப்பு வசதிகள் என்பன பற்றியும் கவனத்தில் கொள்ள வேண்டும்.*

*மீளக்குடியேற்றம் அபிவிருத்தி நடவடிக்கைகள் அபிவிருத்தித் திட்டங்கள் என்பவற்றோடு சுகாதாரம், கல்வி, உணவு, நீர் மற்றும் விவசாயம், உட்கட்டமைப்பு வசதிகள் என்பன பற்றியும் கவனத்தில் கொள்ள வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: Adaderana

அத்தியாயம் -08

## நல்லிணக்கம் பிரிவு -I போருக்குப் பின்னரான நல்லிணக்கம் மீது தாக்கங்களை ஏற்படுத்தும் விடயங்கள் மீதான அவதானிப்புகள்

9.167 மோதல்கள் காரணமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிக்கப்படாத ஆட்களின் சாட்சிகள் கொழும்பில் இடம்பெற்ற அமர்வுகளில் பதிவு செய்யப்பட்டன.

9.168 ஆணைக்குழு பின்வரும் அறிக்கைகளை கவனத்திற்கொண்டது. 2011 மீள் குடியேற்றம் (வடமாகாணம்) அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புப் பற்றி ஜனாதிபதி செயலணியின் அறிக்கை, மத்திய வங்கி அறிக்கை, பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அறிக்கை, மற்றும் மனிதநேய நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கான அலுவலகத்தின் அறிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> அவர்களது முழுமையான சக்தியை நாட்டு மக்களின் நன்மைக்காக பயன்படுத்துவதற்கு ஆக்க பூர்வமான இணக்கப்பாடுடைய நிகழ்ச்சித் திட்டம் அவசியம் என ஆணைக்குழு கருதுகிறது.

9.169 மீள் குடியேற்றம், ஜீவனோபாயம், கல்வி, வைத்திய, போக்குவரத்து மற்றும் நிரந்தர வீட்டுப் பிரச்சினைகள் (நிதி மற்றும் ஏனைய உதவிப் பொதிகளின் வழங்கல்கள்) தீர்வுக்கான கூட்டு முயற்சிகளில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. விவசாயம் மற்றும் மீன்பிடி உற்பத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் முன்னேற்றம் கண்டுள்ளன. எவ்வாறாயினும் இன்னமும் கவனிக்கப்படாத பல பிரச்சினைகள் உண்டு. சில மீன் பிடிக்கும் இடங்கள் அணுகப்பட முடியாதவையாகவும் கடற்படையின் அனுமதிப் பத்திரம் தேவைப்படும் பிரதேசங்களாகவும் இருக்கின்றன. நீர்ப்பாசனக் குளங்களின் புனருத்தாரணம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். சில இடங்களில் மீள் குடியேற்றத்திற்கான தீர்மானங்களை எடுக்க அவசியமான ஆவணங்களை வழங்குவது சிரமமாக உள்ளது. ஆசிரியர்களுக்கான விடுதிகளை வழங்குவதும் ஒரு பொதுப் பிரச்சினையாக உள்ளது.

- காணி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்
- நிரந்தரக் குடியிருப்புத் தேவைப்பாடுகள் ஒரு பாரிய பிரச்சினையாகும்.
- *அபாய வாய்ப்புக்கு உட்பட்ட மக்களின் தேவைகளையிட்டு விசேடமாக கவனிக்க வேண்டும்.*
- சிவில் நிர்வாகம் தொடர்ந்தும் மந்த கதியில் இயங்குகின்றன. தேவையான கிராம உத்தியோகத்தர்கள் நியமனம் பெறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: The Sunday Leader

*அபாய வாய்ப்புக்கு உட்பட்ட மக்களின் தேவைகளையிட்டு விசேடமாகக் கவனித்தல் வேண்டும்.*

9.170 30 வருட அழிவு யுத்தத்தின் பின்பு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு காலமும் நிதியும் வளங்களும் தேவை. வடக்கு கிழக்கு சம்பந்தப்பட்ட மேற்படி அர்ப்பணிப்புகளை உள்நாட்டு வெளிநாட்டு அபிவிருத்திப் பங்காளர்களின் ஒத்துழைப்புடன் அமுல் படுத்தியுள்ளது. *அவர்களது முழுமையான சக்தியை நாட்டு மக்களின் நன்மைக்காக பயன்படுத்துவதற்கு ஆக்க பூர்வமான இணக்கப்பாடுடைய நிகழ்ச்சித் திட்டம் அவசியம் என ஆணைக்குழு கருதுகிறது.*

9.171 மீள் கட்டியெழுப்புதல் மற்றும் அபிவிருத்திக்கான பங்களிப்பு இடம்பெறும் அதேவேளை பாதுகாப்புப் படைகள் சில வேளைகளில் சிறு வியாபார முயற்சிகளிலும் விவசாய முயற்சிகளிலும் ஈடுபடுகின்றன. சில இடங்களில் வீட்டு வசதிகளுக்கான பயனாளிகளைத் தெரிவு செய்வதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவம் தலையிடுகிறது. வடக்கு கிழக்கிலுள்ள சில அரச கட்டிடங்கள் தனியார் கட்டிடங்கள் என்பவற்றை இராணுவம் பயன்படுத்தி வருகிறது. படையினர் சிவில் நடவடிக்கைகளில் ஈடுபடுதல், தனியார் காணிகளை உபயோகித்தல் என்பவற்றிலிருந்து படையினர் விலக வேண்டுமென ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

"அபாய வாய்ப்புக்கு உட்பட்ட மக்களின் தேவைகளையிட்டு விசேடமாக கவனிக்க வேண்டும்."

9.172 சிவில் நிர்வாகிகள் தரவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது மேற்படி மாவட்டங்களின் முன்னேற்றத்தையும் பிரச்சினைகளை அறிக்கையிடுவதற்கு ஒரே மாதிரியான வெளிப்படைத் தன்மை கொண்ட முறைகளைப் பயன்படுத்த வேண்டும். குறைபாடுகளையும் முன்னேற்றங்களையும் ஒப்பு நோக்க வேண்டும். ஆனால் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளின் பன்முகத்தன்மையைக் கவனத்தில் கொள்ளும் போது இது ஒரு கடினமான பணியாக இருக்கலாம். ஆனாலும் அது இன்னமும் கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கியமான ஒரு விடயமாகும். இது பரந்த புரிந்துணர்வுக்கு உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: w3lanka.blogspot

சந்தோஷம், அச்சம், நம்பிக்கையீனம் வன்முறை ஆகிய கலாசாரங்களை நீக்க வேண்டும்.

அத்தியாயம் - 08

## நல்லிணக்கம் பிரிவு II நல்லிணக்கம் மீதான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள்

9.173 30 ஆண்டுகாலம் இரத்தம் சிந்தியமையால் பல்வேறு சமூகங்களுக்கிடையே ஒரு நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கியுள்ளது. எனவே நியாயமான கட்சி சார்பற்ற திறந்த பன்மைத்துவம் கொண்ட சமூக நோக்கம், இழப்புக்கள் துன்பங்கள், துயரங்கள் என்பவற்றை ஏற்று நஷ்ட ஈடும் சமூக நீதியையும் ஒத்துழைப்பையும் பிரகடனப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. பொதுக் குணாம்சங்களையும் மாற்றங்களையும் ஏற்க வேண்டும். நம்பிக்கையீனம் வேறுபாடுகளை ஏற்றுக்கொள்ளுதல் என்பன நல்லிணக்கத்திற்கு இன்றியமையாதது ஆகும்.

9.174 சந்தேகம், அச்சம், அவநம்பிக்கை மற்றும் வன்முறை என்பவற்றிற்கான கலாசாரத்தை நீக்குவதற்கு ஒருவரையொருவர் கேட்பதற்கும் கேட்கப்படுவதற்குமான வாய்ப்புக்களும் இடைவெளிகளும் திறக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> “
> *சகல அரசியல் கட்சிகளும் விரோத அரசியலைக் கைவிட்டு தேசிய பிரச்சினைகள் குறித்து கருத்தொருமித்த தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். இதற்கு இவர்கள் அனைவருக்கும் அரசியல் உறுதியும் துணிவும் இருக்க வேண்டும்.*
> ”

9.175 ஆணைக்குழுவின் முன் தோன்றி கருத்துக்களைப் பரிமாறிக்கொண்ட பலர் மிகத் தெளிவான இரண்டு வகைச் செய்திகளைத் தெரிவித்துள்ளனர்.

9.176 முதலாவதாக துன்பங்கள் நிறைந்த நீடித்த மோதலின் பின்பு சகல இனங்கள் மத்தியிலும் நிலைபேறான சமாதானம், பாதுகாப்பு, நட்புறவு, ஒற்றுமை என்பவற்றை பிரார்த்திக்கின்றனர். அரசியல் தலைமைத்துவத்திற்கு தீர்வு காண முடியாத, தீர்வு காண விரும்பாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு இப்புண்ணிய பூமியில் மீண்டும் இரத்த ஆறு ஓடாது இருக்க செய்யக்கூடிய சகலவற்றையும் சகலரும் செய்ய வேண்டும். என அவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.


9.177 இரண்டாவது, பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்தாலும். மிகச் சக்திவாய்ந்த நிறைவேற்று ஜனாதிபதி காரணமாகவும் அனைத்து மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தையும் நட்பையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்தப்பட முடியும்.

9.178 சகல பிரஜைகளினதும் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன. நல்லிணக்கம் மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரசு சிறுபான்மையினங்களை அண்மித்தல் வேண்டும். சிறுபான்மையினர் அரசு மற்றும் நாடு சம்பந்தமான தமது கடமைகளை மீள நிலைப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

9.179 *சகல அரசியல் கட்சிகளும் விரோத அரசியலைக் கைவிட்டு தேசிய பிரச்சினைகள் குறித்து கருத்தொருமித்த தீர்மானங்களை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



81 Photo source: Colombo Telegraph

போர் முடிவுற்று மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் வன்முறை நம்பிக்கையீனம் பாரபட்சம் என்பன தொடர்கின்றன.

*மேற்கொள்ள வேண்டும். இதற்கு இவர்கள் அனைவருக்கும் அரசியல் உறுதியும் துணிவும் இருக்க வேண்டும்.*

9.180 ஆணைக்குழுவின் முன் தோன்றிய பலரும் பாதுகாப்புப் படைகளினால் அடையப்பட்ட இந்த வெற்றியானது தேசத்திற்கான நிலையான சமாதானம், பாதுகாப்பு, இரு சமூகங்களுக்கிடையில் நிலைபேறான நல்லெண்ணம் நட்புறவு மற்றும் ஒற்றுமை என்பவற்றிற்கான ஒரு தசாப்தத்திற்கு இட்டுச்செல்வதற்காக முதலீடு செய்யப்படல் வேண்டும் என வலியுறுத்தினர். ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் நாட்டின் இறையாண்மை என்பவற்றைப் பேணி ஜனநாயகம் சகிப்புத் தன்மை அதிகாரப் பகிர்வு என்பவற்றைப் பாதுகாக்கும் விழுமியங்களுடன் வாழ வேண்டும் என்றும் கூறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> எவ்வாறாயினும் இந்தச் செயன்முறையை முக்கியமாக முன்னெடுக்கும் பொறுப்பு முற்றிலும் அரசாங்கத்திலேயே தங்கியுள்ளது.

9.181 மோதல்கள் முடிவுற்று இரண்டு வருடங்கள் கழிந்த பின்னரும் கூட வன்முறை சந்தேகம் மற்றும் பாரபட்ச உணர்வு என்பன இன்னமும் சமூக அரசியல் வாழ்க்கையில் நிலவுகிறது. போருக்குப் பின்னர் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டத்திற்கான தாமதம் இதுவாக இருக்கலாம்.

9.182 எனவே ஆணைக்குழுவின் இப்பரிந்துரைகள் மற்றும் அவதானிப்புகள் ஆணைக்குழுவின் முன் தோன்றிய பலராலும் தெரிவிக்கப்பட்ட தெளிவான தற்போதைய ஆபத்துக்கள் வாய்ப்புக்கள் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட கண்ணோட்டங்கள் ஆகும். மூன்று மட்டங்களில் இதற்கான முயற்சி தேவை. அதாவது அரசியல் மட்டத்தில், சிவில் சமூக மட்டங்களில், ஒவ்வொரு பிரஜைகள் மட்டத்தில்

9.183 *எவ்வாறாயினும் இந்தச் செயன்முறையை முக்கியமாக முன்னெடுக்கும் பொறுப்பு முற்றிலும் அரசாங்கத்திலேயே தங்கியுள்ளது.* நல்லிணக்கம் என்பது தொடர்ச்சியாக இருக்க வேண்டிய ஒரு செயல்முறையே ஒழிய ஒரு முறை இடம்பெறும் நிகழ்ச்சி அல்ல. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு அரசாங்கம் தொடர்ச்சியாக இந்த நடவடிக்கைகளில் பரந்துபட்ட அடிப்படையில் ஈடுபடவேண்டும்.

9.184 தமிழ் மக்களின் உண்மையான மனக் குறைகள் மீது அடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் கவனம் செலுத்தத் தவறியமையே இனப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணமாகும் என ஆணைக்குழு கருதுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.185 மோதல்களின் மூல காரணங்கள் மீது கவனம் செலுத்தும் ஒரு அரசியல் தீர்வு முக்கியமானதாகும். அது பற்றி அனைவரும் பேசுகின்றனர். இருந்தாலும் அதனை ஆய்ந்துணர்ந்து தீர்த்து வைப்பதில் இன்னமும் இணக்கப்பாடு இல்லை.



தமிழ் மக்களின் மனக் குறைகள்

## தமிழ் சமூகத்தின் மனக்குறைகள்

9.186 தமிழ் சமூகத்தின் மனக்குறைகள் இனமோதல்கள் மற்றும் அதற்கான காரணங்கள் மீதான விளக்கங்களில் வெளிப்படையாகவே உருவகப் படுத்தப்பட்டன.

9.187 இம்மனக்குறைகள் சிங்களத் தமிழ் தொடர்புகளின் போது தொடர்ந்தும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மோதலின் பின்னர் நல்லிணக்கத்தையும் சமாதான சகவாழ்வையும் கட்டியெழுப்புவது முதல் நடவடிக்கையாகும்.

## இலங்கையின் பெரும்பான்மை / சிறுபான்மை இனங்களுக்கிடையிலான உறவுகள் தொடர்பான வரலாற்றுப் பின்னணி

9.188 சோல்பரி ஆணைக்குழு அறிக்கை சிறுபான்பை இனத்தின் குறைபாடுகள் என அழைக்கப்படுபவற்றிற்குக் கணிசமான இடத்தை ஒதுக்கியுள்ளது.

9.189 பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நிர்வாக ரீதியானதும் அரசியலமைப்பு ரீதியானதுமான பாதுகாப்புகள் அவசியப்பட்டன. அதேவேளை பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனம் ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> அன்றைய அரசாங்கம் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்கு மோசமாகத் தவறிவிட்டது.

கொண்டுள்ள முச்சார்பு நிலையில் ஓர் அடிப்படை மாற்றமின்றி இவை எதுவும் போதுமானதாக இருக்காது என சோல்பரி ஆணைக்குழு கருதியது. மோதலுக்கான காரணங்களை ஆராய்கையில் இந்த அவதானிப்பு எமக்கு ஏற்புடையதாகும் என நல்லிணக்க ஆணைக்குழுவும் கருதுகிறது.

9.190 குறைகள் மீது கவனம் செலுத்தும் செயன்முறைகள் இன்றைய அரசியல் தலைவர்களால் சுமுகமாகவும் நன்னோக்குடனும் செயற்படுத்தப் படவில்லை. அனுகூலமற்ற நிலையிலான சிறுபான்மையினர் கௌரவத்துடன் நடத்தப்பட்ட ஒரு வழிமுறை இருக்கவும் இல்லை. தமிழ் மக்களின் வேதனை மிகு மன உணர்வுகள் இந்த அநீதிகளிலிருந்து எழுந்தவையாகும்.

9.191 இனங்களுக்கிடையிலான தீர்க்கமான பிளவு 1958 இல் தோன்றியது. மீண்டும் 1977 இல் அது தோன்றி 1983இல் உச்சகட்டத்தை அடைந்தது. *அன்றைய அரசாங்கம் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்கு மோசமாகத் தவறிவிட்டது*. சிங்கள தமிழ் மக்களிடையே நிலவிய உறவுகளை நாசப்படுத்திய இந்த வன்முறைக் கலாசாரம் பற்றி ஒரு புரிந்துணர்வில்லாமல் தமிழ் மக்களின் மனக்குறைகளுக்குத் தீர்வு காண முடியாது.

தமிழ் மக்களினதும், போருக்குப் பின்னர் அனைத்துச் சமூகங்களினதும் குறைகள் முக்கியமான அவதானிப்புகள் 9.200 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Photo source: Refugee -Agath Blog

## முஸ்லிம் சமூகத்தின் மனக் குறைகள்

9.192 முஸ்லிம் சமூகம் 1990 ஒக்டோபர் 30ம் திகதி வட மாகாணத்தில் வசித்த முஸ்லிம் மக்கள் எல்.ரீ.ரீ.ஈ. துப்பாக்கி முனையில் வலுக் கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். வடக்கிலும் கிழக்கிலும் மேற்கொள்ளப்பட்ட இனச் சுத்திகரிப்பினால் முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டனர்.

9.193 இவ்வாறாக வெளியேற்றப்பட்ட பின்னர் அரசாங்கமும் தேசிய சர்வ தேசிய அரச சார்பற்ற நிறுவனங்களினதும் சர்வதேச சமூகத்தினதும் முன்னுரிமைக்கான பட்டியலில் அவர்கள் கீழ் மட்டத்திலே இருப்பதாக நம்புகின்றனர்.

9.194 இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் வட மாகாணத்தில் தங்களது சொந்த இடங்களுக்கு விரைவாக மீளத் திரும்புவதற்கு அரசாங்கம் வசதியளித்தல் வேண்டும்.

9.195 எல்.ரீ.ரீ.ஈ அமைப்பினால் அழிக்கப்பட்ட அல்லது சேதமாக்கப்பட்ட பள்ளிவாசல்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகள் மற்றும் பாடசாலைகள் என்பவற்றை மீளக் கட்டுவதற்கு உதவுவதற்கான உடனடி நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்தல் வேண்டும்.

*இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் வட மாகாணத்தில் தங்களது சொந்த இடங்களுக்கு விரைவாக மீளத் திரும்புவதற்கு அரசாங்கம் வசதியளித்தல் வேண்டும்.*

9.196 உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் நலன்புரித் திட்டங்களை அமுல்படுத்தும் தேசிய மற்றும் சர்வதேச முகவர் அமைப்புக்கள் பழைய இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பாக பாரபட்சமாக நடந்துகொள்கின்றனர் என்ற உணர்வுநிலவுகிறது. அரசாங்கம்கைச்சாத்திட்ட அனைத்து மனித உரிமைகளுக்கான ஆவணங்களினதும் அடிப்படை சமநீதியும் பாரபட்சமாக நடத்தப்படாமையும் ஆகும். பழைய இடம் பெயர்ந்தோர், புதிய இடம்பெயர்ந்தோர் என வேறுபடுத்தாமல் அபிவிருத்திப் பங்காளர்களுக்கு உணர்த்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

## போர் நடந்த பிரதேசங்களுக்கு அண்மையில் அமைந்த கிராமங்களில் வாழ்ந்த சிங்கள மக்களின் மனக் குறைகள்

9.197 எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதத்தில் இருந்து சிங்கள குடிமக்களின் உயிரைப் பாதுகாக்க அரசாங்கம் மறந்துவிட்டது என்பதே மேற்படி சிங்கள மக்களின் கருத்தாகும். பாதுகாப்பான பிரதேசங்களுக்கு இடம்பெயராது அபாயகரமான அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இக் கிராமங்களில் அவர்கள் தொடர்ந்து வசித்தனர். இதற்கு மேலதிகமாக கல்வி, தொழில் வாய்ப்பு பற்றிய பல்வேறு பிரச்சினைகளுக்கு அவர்கள் முகங் கொடுத்தனர். சமமாக நடாத்தப்படுவதற்கான தேவையை இக்கிராமத்தவர்கள் எடுத்துக் கூறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.198 இம்மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கம் தனது கவனத்தைச் செலுத்த வேண்டும்.



Photo source: tl.bestpicturesof.com

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

9.199 இக்கிராமங்களுக்கு சமமான வள ஒதுக்கீடு மற்றும் அபிவிருத்தி என்பவற்றை அரசாங்கம் உறுதி செய்யாவிட்டால், குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் பல்வேறு இனங்கள் வாழும் மக்களிடையே புதிய பிரச்சினைகள் ஏற்படலாம்.

## இந்திய வம்சாவழித் தமிழர்களின் மனக் குறைகள்

9.200 தோட்டப் பகுதிகளில் கல்வி சுகாதார வசதிகள் தொடர்பாகவும் அவர்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைகள் பற்றியும் ஆணைக்குழுவிடம் தெரிவிக்கப்பட்டன. வசதிகளையும் சிறந்த வாழ்க்கை நிலையையும் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரைக்கிறது.

9.201 *யுத்தத்தின் பின்னர் ஒரு பாரிய அபிவிருத்திக்கான நிகழ்ச்சி நிரல் மற்றும் நல்லிணக்கத்திற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன இந்திய வம்சாவளித் தமிழர்களின் அத்தியாவசியத் தேவைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரைக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> யுத்தத்தின் பின்னர் ஒரு பாரிய அபிவிருத்திக்கான நிகழ்ச்சி நிரல் மற்றும் நல்லிணக்கத்திற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன இந்திய வம்சாவளித் தமிழர்களின் அத்தியாவசியத் தேவைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரைக்கிறது.

## மனக்குறைகள் மீது கவனம் செலுத்துதல் மற்றும் நல்லிணக்கத்தினை முன்னேற்றுதல் தொடர்பான பிரச்சினைகள் - சட்டத்தின் ஆட்சியை நடைமுறைப்படுத்தாமை


9.202 ஆணைக்குழு முன் முறையீடுகளைச் செய்த பலரும், அரசியல் ஆதரவு கொண்ட ஒரு பெரும் எண்ணிக்கையிலானோரே குற்றங்களைப் புரிந்தனர். ஆனாலும் சட்டத்தை அமுல்படுத்துவோர் மீது பிரயோகிக்கப்பட்ட அரசியல் அழுத்தங்கள் காரணமாக சட்டத்தின் நீண்ட கரங்கள் அவர்களை எட்டவில்லை எனத் தெரிவித்தனர். அர்த்தமுள்ள நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாயின் நீதித்துறையோடு சட்டத்தின் ஆட்சியை கடுமையாகக் கடைப்பிடிக்கும் ஓர் ஒழிவு மறைவற்ற சட்டச் செயன்முறை அவசியமானதொன்றாகும். அர்த்தமுள்ள ஓர் அதிகாரப் பகிர்வின்மையோடு இணைந்ததாகவே நல்லாட்சியின்மை, சட்டத்தின் ஆட்சியை மதிக்காமை மற்றும் நல்லாட்சியின்மை என்பன சமூகங்களுக் கிடையில் பதட்டங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைகின்றன.

9.203 ஆணைக்குழுவின் தீர்க்காலோசனையின் போது தோன்றிய விடயங்கள் பின்வருமாறு:

அ. அரசியல் தொடர்புகள் கொண்ட நபர்களால் குற்றங்கள் புரியப்பட்டவிடத்து, குற்றங்களைப் புலன் விசாரித்து குற்றமிழைத்தவர்களை சட்டத்தின் முன் கொண்டு வருவதற்கு சட்டத்தை அமுல்படுத்தும் உத்தியோகத்தர்கள் தரப்பிலான இயலாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆ. மோதல்கள் முடிவடைந்துள்ள போதிலும் சட்டமும் ஒழுங்கும் தொடர்பிலான முக்கியமான பிரச்சினைகள் தொடர்ந்து இன்னமும் உள்ளன. ஆயுதக் குழுக்களால் மேற்கொள்ளப்படும் பணம் பறித்தல், கப்பம் வாங்குதல், ஆட்கடத்தல்கள், காணாமற் போதல்கள், கொள்ளையடித்தல் போன்ற ஏனைய குற்றவியல்நடவடிக்கைகளால்வடக்கு மற்றும் கிழக்கில் வாழ்கின்ற மக்களின் மனங்களில் அச்ச உணர்வு உள்ளது. எண்ணற்ற அரசியல் வாதிகள் சட்டத்தின் விளிம்பிலிருந்து செயற்படுவதாக குற்றம் சாட்டப்படுகிறது. பொலிஸார் மீது முறையற்ற செல்வாக்கைப் பிரயோகிப்பதன் மூலம் நீதியின் போக்கையே சீர்கெடச் செய்துள்ளனர்.

இ. சுடுகலன்களின் பாவனையுடன் இணைந்த அரசியல் வன்முறைகள் இந்த நாட்டின் சட்டத்திற்குக் கட்டுப்பட்ட மக்கள் மத்தியில் பெரும் கரிசனைகளை ஏற்படுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் வன்முறைகளின் அதிகரிப்பு, அரசியல்வாதிகள் மற்றும் அவர்களது ஆதரவாளர்களால் சட்ட விரோத ஆயுதங்கள் பாவனை செய்வதை ஆணைக்குழு கரிசனையுடன் நோக்குகின்றது.

*சட்ட விரோத ஆயுதங்களை வைத்திருப்பவர்களின் ஆயுதங்களைக் கலைய வேண்டும் எனவும் அத்தகைய குற்றம் இழைத்தவர்கள் மீது சட்ட நடவடிக்கையை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ளுதல் வேண்டும் எனவும் ஆணைக்குழு கண்டிப்பாகப் பரிந்துரைக்கின்றது.*

9.204 *சட்ட விரோத ஆயுதங்களை வைத்திருப்பவர்களின் ஆயுதங்களைக் கலைய வேண்டும் எனவும் அத்தகைய குற்றம் இழைத்தவர்கள் மீது சட்ட நடவடிக்கையை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ளுதல் வேண்டும் எனவும் ஆணைக்குழு கண்டிப்பாகப் பரிந்துரைக்கின்றது.*

9.205 இந்த அறிக்கையை எழுதும் சமயத்தில், அண்மையில் முடிவடைந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களைத் தொடர்ந்து, ஒரு தொகை உயிரிழப்புக்கள் இடம்பெற்றுள்ளன. ஒரே அரசியல் கட்சியைச் சேர்ந்த இரண்டு அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்ட ஒரு மோசமான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றி அறிய நேர்ந்தது. அரசியல்வாதிகளால் பரஸ்பரம் தவறியதும், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இத்தகைய அப்பட்டமான வன்முறைகளை நாடுகின்ற சம்பவங்கள், இந்தத் தேசிய நல்லிணக்கச் செயன்முறை நடவடிக்கைகளின் போது மக்கட் பிரதிநிதிகளிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதற்கு எதிராக ஓர் மோசமான எடுத்துக்காட்டாகவே அமைகின்றது.

9.206 ஆணைக்குழுவிடம் முறையீடு செய்த பலரினாலும் அதன் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட பின்வரும் சம்பவங்களை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.207 கிழக்கு மாகாணத்தின் பாரதி எனப்படும் ஒரு நபர் ஆட்கடத்தல், பணம் பறித்தல், கொள்ளை போன்ற பல குற்றங்களைப் புரிந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டார். இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு ஆணைக்குழு கொண்டு வந்தது. குற்றஞ்சாட்டப்பட்ட குற்றம் இழைத்தவருக் கெதிராக எந்தவொரு அர்த்தமுள்ள நடவடிக்கையையும் எடுக்காமை குறித்து ஆணைக்குழு தன்கவலையை தெரிவிக்கின்றது. சுமார் 600 பொலிஸ் உத்தியோ கத்தர்களுடன் ஆட்கடத்தல்களுக்கு உள்ளாகிய ஓய்வு பெற்ற இரண்டு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் முறையீடுகளை மேற்கொண்ட இருவர், ஆயுதங்களை கைவிட்டு எல்.ரீ.ரீ.ஈ இடம் சரணடை வதற்கு கட்டளையிடப்பட்டு பின்னர் கொலை செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பாக அப்போதைய எல்.ரீ.ரீ.ஈ. தலைவராக இருந்த கருணாவின் ஈடுபாடு தொடர்பாக குற்றஞ்சாட்டிக் குறிப்பிட்டனர்.



*அறுநூறு பொலிசார் நிராயுதபாணிகளாக்கப்பட்டு கொலை செய்யப்படுவதற்கு கிழக்கு மாகாணத்தின் அன்றைய எல்.ரீ.ரீ.ஈ தலைவர் வகைப் பொறுப்புக் கூற வேண்டும். இன்று அவர் இக்குற்றச்சாட்டை மறுக்கின்றார்.*

முறையீட்டாளர்களால் மேற்கொள்ளப்பட்ட குற்றச்சாட்டுக்களை அனுசரித்து ஆணைக் குழு கருணாவிடம் வினவியது. கொலைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை அவர் மறுத்தார்.

ஏவ்வாறாயினும் *கொல்லப்பட்ட 600 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பாக புலன் விசாரணைகள் நடாத்தப்படவில்லை. குற்றங்களின் பாரதூரத் தன்மை மற்றும் நல்லிணக்கத்தில் அது கொண்டுள்ள தாக்கம் என்பவை காரணமாக இந்த விடயத்தில் ஓர் முழுமையான புலன் விசாரணை தேவை என்பது ஆணைக்குழுவின் கருத்தாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> *கொல்லப்பட்ட 600 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பாக புலன் விசாரணைகள் நடாத்தப்படவில்லை. குற்றங்களின் பாரதூரத் தன்மை மற்றும் நல்லிணக்கத்தில் அது கொண்டுள்ள தாக்கம் என்பவை காரணமாக இந்த விடயத்தில் ஓர் முழுமையான புலன் விசாரணை தேவை என்பது ஆணைக்குழுவின் கருத்தாகும்.*

9.208 ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஒரு சில உறுப்பினர்கள் பலவந்தமாகப் பணம் பறித்தனர் என பல முறைப்பாடுகள் செய்யப்பட்டன. இக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஒரு முழுமையான புலன் விசாரணை மேற் கொள்ளப்பட வேண்டும் என்பது ஆணைக் குழுவின் கருத்தாகும். புலன் விசாரணையின்மை குற்ற விலக்களிப்புக்கான ஓர் உணர்வை உருவாக்கும்.

9.209 மேஜர் சீலன் எனப்படும் நபர் ஒருவரினால் தலைமை தாங்கப்படும் ஒரு குழுவின் சட்டவிரோத நடவடிக்கைகளை பலர் ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். பாதுகாப்புப் படைகளை பயன்படுத்தி ஆட்கடத்தல்கள், பணம் பறித்தல்கள் மற்றும் கொள்ளைகள் இடம்பெற்றதாக ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. ஆணைக்குழு இவ்விடயத்தை பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வந்தது. இதன் பயனாக மேஜர் சீலனின் ஓர் உதவியாளர் கைது செய்யப்பட்டுள்ளார். எவ்வாறாயினும் பிரதான நபர் இன்னும் கைது செய்யப் படாமலேயே உள்ளார்.

**9.210 இது தொடர்பில் சட்ட விரோத ஆயுதக் குழுக்கள் பற்றிய ஆணைக்குழுவின் இடைக்காலப் பரிந்துரைகளை அமுலாக்குமாறு ஆணைக்குழு மீள வலியுறுத்துகின்றது.**

9.211 ஆணைக்குழுவின் இடைக்காலப் பரிந்துரைகளுக்கு முழுமையான பயனுறுதி இன்னமும் வழங்கப்படாமை குறித்து ஆணைக்குழு வருத்தம் தெரிவிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.212 மாகாணங்களில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் குற்றப் புலன் விசாரணைகள் மற்றும் வழக்குத் தொடர்தலை மேற்கொள்ளுதல் தொடர்பாக போதுமான சட்ட நிபுணத்துவத்திற்கான வழிவகைகளைக் கொண்டிருக்கவில்லை என ஆணைக்குழு அவதானிக்கிறது. எனவே இவர்களுக்கு **வழிகாட்டுவதற்கும் ஆலோசனை வழங்குவதற்கும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரிவுகளை மாகாணங்களில் ஸ்தாபிப்பதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கிறது.**




Photo source: SLTJ web.com

*சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் பொறுப்புக் கொண்ட பொலிஸ் திணைக்களம் ஓர் சிவில் நிறுவனமாகும்*

9.213 நீதி நிர்வாகத்தில் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக, குற்றம் செய்தவர்களின் அரசியல் தொடர்புகளைக் கவனத்தில்கொள்ளாது குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் புலன் விசாரணை செய்து தவறிழைத்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தண்டனை அளிக்கப்படல் வேண்டும் என ஆணைக்குழு வலியுறுத்துகிறது.

9.214 பொலிஸ் திணைக்களம் என்பது சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்கான பொறுப்பை ஒப்படைத்த ஒரு சிவில் நிறுவனமாகும். ஆதலால், *நாட்டின் பாதுகாப்பிற்குப் பொறுத்தமான பாதுகாப்புப் படைகளுடன் தொடர்புகொண்ட நிறுவனங்களிலிருந்து பொலிஸ் திணைக்களம் விடுவிக்கப்படுவது விரும்பத்தக்கதாகும்.*

9.215 பொலிஸாரின் கடமைகளை உரிய முறையில் செய்யவும் பொது மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கவும் சுயாதீனமான நிரந்தர பொலிஸ் ஆணைக்குழு அமைக்கப்படுதல் வேண்டும். பொலிஸ் சேவைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கும் சுயாதீனமாகச் செயற்பட்டு ஓர் உயர் தரத்திலான தொழில்சார் நடத்தையைப் பேணுவதை உறுதிப்படுத்துவதற்கும் மேற்படி பொலிஸ் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்படல் வேண்டும்.

*நாட்டின் பாதுகாப்பிற்குப் பொறுத்தமான பாதுகாப்புப் படைகளுடன் தொடர்புகொண்ட நிறுவனங்களிலிருந்து பொலிஸ் திணைக்களம் விடுவிக்கப்படுவது விரும்பத்தக்கதாகும்.*

## ஆட்சி தொடர்பான பிரச்சினைகள்

9.216 நிர்வாக முறைகளிலான குறைபாடுகள், நல்லாட்சியின்மை என்பவற்றிலிருந்தே சிறுபான்மையினரின் சில மனக்குறைகள் உருவானதாக ஆணைக்குழு முன் பலர் சமர்ப்பணங்களை முன்வைத்தனர். இக் குறைபாடுகளைத் தீர்க்க அக்கறை கொண்ட அனைத்துச் செயற்பாட்டாளர்களினாலும் ஒன்றிணைந்த நடவடிக்கைகள் தேவைப் படுத்துகின்றது. குறிப்பாக சிறுபான்மை இனங்களுக்கு பாதகமாகச் செயற்படுமிடத்து குறித்த நடவடிக்கைகள் தேவையாக உள்ளன.

9.217 நாட்டின் அரசியல் கலாசாரமானது, தங்களுக்கு உரித்தான பல சேவைகளையும் வசதிகளையும் பெற்றுக்கொள்வதற்கு அரசியல்வாதிகளில் தங்கியிருக்கும் விதத்தில் பொதுமக்களை அதிகார மற்றவர்களாகவும் பயனற்றவர்களாகவும் ஆக்கியுள்ளது.

## பிரஜைகளின் மனக்குறைகளை கையாள்வதற்கான ஒரு விசேட நிறுவனம்

9.218 மக்களின் மனுக்கள் நடைமுறையை மேம்படுத்துவதற்காக 1994ம் ஆண்டு 26ம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Photo source: Daily Mirror





Photo source: Kobeita.Interna.pl

அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், அரசின் நடவடிக்கைகளிலிருந்து எழும் பிரஜைகளின் மனக்குறைகளை பயனுறுதியான முறையில் கையாள்வதற்கு நிர்வாகத்திற்கான பாராளு மன்ற ஆணையாளரின் (ஒம்புட்ஸ்மன்) அலுவலகத்துடன் சம்பந்தப்பட்ட தற்போதைய சட்டம் போதுமானதல்ல. ஆகவே *நிறைவேற்று நிர்வாக நடவடிக்கைகள் காரணமாக குறிப்பாக சிறுபான்மையினரின் மனக்குறைகள் மீது கவனம் செலுத்துவதற்கு ஓர் சுயாதீன நிறுவனத்தை அரசாங்கம் ஸ்தாபித்தல் வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரைக்கிறது. அதற்கென ஓர் வலுவான புலன் விசாரணை அங்கத்தையும் கொண்டிருக்க வேண்டும்.*

9.219 ஏதேனும் நிறைவேற்று அல்லது நிர்வாக நடவடிக்கைகள் காரணமாக குறிப்பாக மதம் அல்லது இனத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுகின்ற மனக்குறைக்கு பரிகாரம் காணும் வகையில் இச்சுயாதீன நிறுவனம் அமைய வேண்டும்.

9.220 இந்த நிறுவனத்தின் தீர்மானங்களுக்குப் பயனுறுதியை அளிப்பதற்கான ஏற்பாடுகளும் இருத்தல் வேண்டும். மேலும் உத்தேசிக்கப் பட்ட நிறுவனத்தைப் பயனுறுதியானதாக்கும் வகையில், அதிகாரத்தை துஷ்பிரயோகித்த நபர்கள் தொடர்பில் தடைகளை விதிப்பதற்கும் சட்டம் ஏற்பாடளித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நிறைவேற்று நிர்வாக நடவடிக்கைகள் காரணமாக குறிப்பாக சிறுபான்மையினரின் மனக்குறைகள் மீது கவனம் செலுத்துவதற்கு ஓர் சுயாதீன நிறுவனத்தை அரசாங்கம் ஸ்தாபித்தல் வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரைக்கிறது. அதற்கென ஓர் வலுவான புலன் விசாரணை அங்கத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

9.221 இவ்விசேட நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு உதவி அளிக்கும் ஓர் ஊட்டும் பொறி முறையாக செயற்படக் கூடிய வகையில் மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் நல்லிணக்க நம்பிக்கை மற்றும் சமாதானக் குழுக்கள் ஸ்தாபிக்கப்படலாம் .

## ஏனைய நடைமுறைகள்

9.222 அனைத்துப் பிரஜைகளினதும் குறிப்பாக சிறுபான்மை இனங்களினது கரிசனைகளுக்கும் அச்சங்களுக்கும் கூர் உணர்வுகொண்டதாக அரச சேவையிலான நடைமுறைகள், நெறிமுறைகள், விதிகள் மற்றும் நடத்தைக் கோவைகள் என்பவற்றால் வழிகாட்டப்படல் வேண்டும். மேலும் அவை ஒழிவு மறைவற்றதாக தகவல்கள் கிடைக்கும் வகையில் அமைதல் வேண்டும்.

9.223 உள்ளூர் மக்களின் பங்கேற்புடனான கலந்தாலோசனையுடன் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை அரசாங்கம் உறுதிப்படுத்துதல் வேண்டும். நிர்வாகத்தில் அத்தகையதொரு ஒழிவு மறைவற்ற அணுகுமுறை, அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஓர் சொந்த உணர்வுக்கான உணர்வையும் தேசத்தைக் கட்டியெழுப்புவதில் தாம் பங்கேற்கும் உணர்வையும் அவர்களுக்கு அளித்தல் வேண்டும்.

9.224 *அரச சேவைகளின் பணிகள் தொடர்பான ஒழுக்கவியலை மேம்படுத்துவதற்கான பயிற்சித் திட்டங்கள் ஊடாக மனப் பாங்குகளிலான மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு ஒரு குறித்த நிகழ்ச்சித்திட்டம் உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்படுவதற்கு ஆணைக் குழு பரிந்துரைக்கின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.225 அரச உத்தியோகத்தர்களின் நியமனங்கள், இடமாற்றங்கள் தொடர்பாக ஆளும் கட்சி அரசியல் வாதிகளால் அதிகரித்த மட்டங் களிலான தலையீடுகள் பற்றிய ஓர் அதிர்ச்சி தருகின்ற நிலைப்பாடும் ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.



Photo source: devwijewardane.blogspot.
Pix by Dev Wijewardane

9.226 அரச துறையில் அரசியல் தலையீடுகள் இல்லாதிருப்பதை உறுதிப்படுத்து வதற்கும், பொதுச் சேவைகளிலான நியமனங்கள் பதவி உயர்வுகளின் போதும், அரசியலமைப்பின் சமத்துவ ஏற்பாடுகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு தாமதமின்றி ஓர் பொதுச் சேவைகள் ஆணைக் குழுவை ஸ்தாபிப்பதற்கு நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

9.227 வடமாகாணத்தின் சிவில் நிர்வாகம் மக்களின் நாளாந்த வாழ்க்கை தொடர்பான, குறிப்பாக விவசாயம், மீன்பிடி இடங்கள் போன்ற பொருளாதார நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக மீளச் செயற்படுவது முக்கியமாகும். வழமையான சிவில் வாழ்க்கைக்கு மீளத் திரும்பி சமாதானத்தின் நன்மைகளை அனுபவிப்பதற்கு இயலுமான பின்னணியில் இராணுவப் பிரசன்னம் படிப்படியாகக் குறைத்தல் வேண்டும்.

9.228 சட்டவாக்கங்களின் நீதி முறையிலான மீள் பரிசீலனைக்காக அரசியலமைப்பு ரீதியிலான ஏற்பாடுகள் இன்மை தொடர்பான மேற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> “அரச சேவைகளின் பணிகள் தொடர்பான ஒழுக்கவியலை மேம்படுத்துவதற்கான பயிற்சித் திட்டங்கள் ஊடாக மனப் பாங்குகளிலான மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு ஒரு குறித்த நிகழ்ச்சித்திட்டம் உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்படுவதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.”

கொள்ளப்பட்ட முறையீடுகளை ஆணைக்குழு கவனத்திற்கொள்கிறது. உத்தேசிக்கப்பட்ட எந்தவொரு சட்டவாக்கத்தினதும் அரசியலமைப்பு ரீதியிலான தன்மையை உயர் நீதிமன்றத்தின் முன்பாக பயனுறுதியான வகையில் ஆராய்வதற்குப் போதுமான சட்ட ஏற்பாடுகள் இருக்க வேண்டும். குறிப்பாக அவசர சட்ட மூலங்களை உயர் நீதிமன்றத்தின் முன் ஆராய்வதற்கு அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள கால அவகாசம் முற்றிலும் போதுமானதல்ல.

## அதிகாரப்பகிர்விற்கான தேவை

9.229 மிக நீண்டகாலமாக அரசியல் ரீதியான கருத்தொருமித்தலை எட்டுவதற்குப் பிரதானத் தடையாக இருந்த எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதம் முடிவுற்றதன் பின்னர், நல்லிணக்கச் செயன்முறைகளை மேலும் முன்கொண்டு செல்வதற்கான அதிகாரப் பகிர்விற்கு வசதியளிக்கும் ஓர் அரசியல் கருத்தொற்றுமையை எட்டுவது முக்கியம். என ஆணைக்குழு முன் தோன்றிய பலரும் தெரிவித்தனர்.

9.230 போருக்குப் பின்னரான ஒரு சூழமைவில் நிலையான *சமாதானம், பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கான ஒரு கட்டமைப்பை ஸ்தாபிக்கும் நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு அரசியல் செயல்முறைக்கான தலைமைத்துவத்தை அரசாங்கம் வழங்க வேண்டும் என்பது முக்கியமானதாகும். இதற்கு அதிகாரப் பகிர்வை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசியல் தீர்வும், இனப் பிரச்சினை,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: The Hindu

*ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தலான ஏனைய பிரச்சினைகள் என்பன மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.* இச் செயல்முறை மூலம் சமூக/பொருளாதாரக் கொள்கைகளின் அமுல்படுத்தல் என்பவற்றை வழங்கும் ஓர் அரசியலமைப்பு ரீதியான கட்டமைப்பு மற்றும் பொறிமுறைகள் முற்றுப் பெறுதல் வேண்டும்.

9.231 அதிகாரப் பகிர்வு இயல்பாகவே மக்களை மையமாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதோடு பின்வரும் கரிசனைகளை மனதில் கொண்டிருத்தல் வேண்டும்

(அ) அதிகாரப் பகிர்வு நாட்டின் மக்கள் மத்தியில் கூடுதலான இணக்கப்பாடு மற்றும் ஒற்றுமையை முன்னேற்றுதல் வேண்டுமேயன்றி இணக்கப்பாடின்மை ஒற்றுமையின்மையை மேம்படுத்தக் கூடாது. வளமான பன்மைத் துவத்தைப் பாதுகாத்து பாராட்டும் அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“
அரச சேவைகளின் பணிகள் தொடர்பான ஒழுக்கவியலை மேம்படுத்துவதற்கான பயிற்சித் திட்டங்கள் ஊடாக மனப் பாங்குகளிலான மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு ஒரு குறித்த நிகழ்ச்சித்திட்டம் உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்படுவதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.
”

வேளை இந்த ஐக்கியம் ஒரு பொது அடையாளமாக முன்னேற்றுவதே அதிகாரப் பகிர்வின் எந்தவொரு வடிவத்தினதும் முக்கிய இலக்காக இருத்தல் வேண்டும்.

(ஆ) அதிகாரப் பகிர்வு எந்தவொரு இனச் சமூகத்தையும் அனுகூலத்திற்கு அல்லது பிரதிகூலத்திற்கு உட்படுத்துவதாக இருத்தல் கூடாது. இந்தக் கருத்தில், அது, நாட்டிலுள்ள எந்தவொரு இனச் சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கும் பாரபட்சமானதாக இருத்தல் கூடாது அல்லது அவர்களால் பாரபட்சமானதாக காணப்படல் கூடாது.

(இ) மனித உரிமைகளை மேம்படுத்தலும் பாதுகாத்தலும் என்பது அரசியலமைப்பு நாடு தன்னார்வத்துடன் பொறுப்பேற்றுக் கொண்ட சமவாயங்கள் கடப்பாடுகள் என்பவற்றின் குறித்த ஏற்பாடுகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும். அவை தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் ஓர் அடிப்படைக் கடப்பாடாகவும் ஆகின்றது.

(ஈ) அதிகாரப் பகிர்வு தொடர்பாக கவனம் செலுத்தும் பொழுது இரண்டு விடயங்கள் குறித்து அரசாங்கத்தின் கவனம் ஈர்க்கப்பட வேண்டும். முதலாவது, கீழ் மட்டத்தில் கூடுதலான மக்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்துவதற்கு உள்ளூராட்சி மன்றங்களை வலுவாக்கம் செய்தல். இரண்டாவது மாகாண சபைகள் முறையின் செயற்பாட்டிலுள்ள குறைபாடுகளிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களை கவனத்தில் எடுத்துக்கொள்வதும் முக்கியமானதாகும். பன்மைத்துவத்தின் வளத்தைப் பேணும் அதே சமயம் இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் ஐக்கியம் என்பவற்றிற்கு ஒருங்கே பாதுகாப்பையும் அளித்தல் வேண்டும்.


9.232 மாகாணப் பிரதிநிதிகளை உள்ளடக்கியதான ஓர் இரண்டாவது சபையை ஸ்தாபிப்பதன் சாத்தியம் ஓர் மேலதிக பொறிமுறையாக கவனத்தில்கொள்ளப்படலாம். அத்தகைய தொரு பொறிமுறை, மாகாணங்கள் தொடர்பில் குறிப்பிட்ட சம்பந்தங்களைக் கொண்டுள்ள சட்டவாக்க முறைகளை ஆராய்வதனூடாக, சட்டவாக்கத் தீர்மானம் மேற்கொள்ளும் செய்முறைகளில் தாங்களும் கூட ஒரு முக்கியமான பாத்திரத்தை வகிப்பதற்கு உள்ளது எனும் நம்பிக்கையை தலைமைத் துவங்கள் மத்தியிலும் மாகாணத்தின் மக்கள் மத்தியிலும் உருவாக்கும்.

9.233 *அதிகாரப் பகிர்வு மூலம் அரசியற் கட்சித் தலைவர்கள் மக்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டும். இதனை அனைத்துக் கட்சிகளும் ஏற்க வேண்டும். இதன் மூலமே சிங்களம், தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய அனைத்துச் சமூகங்களினதும் பிரஜைகளின் தேவைகளை உள்ளடக்கும் ஜனநாயக முறை அமுலாக்கப்பட முடியும்.*

9.234 தீர்வுகளை உள்ளகவாரியாகக் காண்பதற்கு அனைத்துத் தரப்புகளும் தங்களை அர்ப்பணித்துக்கொள்ளுதல் வேண்டும். இனப்பிரச்சினையின் தேவையற்ற சர்வதேச மயப்படுத்தலையும் புலம்பெயர்ந்தவர்களால் பிரயோகிக்கப்படும் வெளி அழுத்தங்களையும் ஓர் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் மீதான அதன் தாக்கத்தையும் அரசியல் தலைவர்கள் கவனத்தில்கொள்ளுதல் வேண்டும்.



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ



எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்ஹ



முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம்



ஜே.வி.பி. தலைவர் சோமவங்ச அமரசிங்ஹ



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன்



Photo Sources : Lanka Polity Blog / Sinhala24News.com/Lankapuvath.lk
DM Online/ Pix by V.V.Krishnana/SriLankan Logos website

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> அதிகாரப் பகிர்வு மூலம் அரசியற் கட்சித் தலைவர்கள் மக்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டும். இதனை அனைத்துக் கட்சிகளும் ஏற்க வேண்டும்.

9.235 அதிகாரப் பகிர்வுப் பொறிமுறையும் ஓர் இறையாண்மை, அரசியல் சுயாதீனம் மற்றும் பல்லின இலங்கை நாடு என்ற பரந்த கட்டமைப்பினுள் பயன்பெறுதல் வேண்டும் என்பது கட்டாயமானதென ஆணைக்குழு கருதுகிறது. அரசின் மத்திய பொறுப்புக் களிலிருந்து சில முக்கிய அதிகாரங்களை பகிர முடியாது. எந்தவொரு அதிகாரப் பகிர்விற்கான ஏற்பாடுகளும் பிரிவினைவாதப் போக்குகளைபயனுறுதியானவகையில்கவனம் செலுத்தி நாட்டின் இறையாண்மையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் உட்கட்டமைக்கப்பட்ட பொறிமுறைகளை கொண்டிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

9.236 நிலைபேறான நல்லிணக்கத்தின் எந்தச் செயன்முறைகளின் வெற்றியையும் உறுதிப் படுத்துமுகமாக, அதிகாரப் பகிர்வு விடயம் மீது தெளிவான முன்னேற்றங்களை ஏற்படுத்துவதன் முக்கியத்தை கோடிட்டுக் காட்டுவதற்கு ஆணைக்குழு விரும்புகின்றது, விசேடமாக கீழ் மட்டங்களிலான அதிகூடிய அதிகாரப் பகிர்வு, அதே போன்று மத்தியிலான அதிகாரப் பகிர்வு. ஆகிய இரண்டிலும் உள்ள விடயங்களின் அடிப்படையில் எட்டப்பட்டதான அதிகாரப்பகிர்வு மீது ஒரு கருத்தொற்றுமையை உருவாக்குவதற்கான நம்பிக்கையை ஆரம்பிப்பதற்கு தற்போதைய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தல் வேண்டும்.

9.237 மேற்படிப் பெறுபேறுகளை அடைவதற்கு நேர்மையான திட்டமிட்ட பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் முன்னெடுப்புக்களைச் செய்ய வேண்டும். எதிர்பார்க்கும் பேச்சுவார்த்தைக்கும் உள்ளடக்கத்திற்கும் அரசாங்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Photo source: Pix by Dena Jayaman

கருத்துக்கள் அடிப்படையாக அமைய வேண்டும். *சிறுபான்மைக் கட்சிகள் உட்பட சகல அரசியற் கட்சிகளும் உயர் மட்டத்தில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும்.*

## மொழிக்கொள்கை

9.238 அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களினால் மொழிக்கொள்கையை அமுல்படுத்துவதிலான குறைபாடுகள் காரணமாக தெரிவிக்கப்பட்ட ஓரங்கட்டப்பட்ட உணர்வுகளை ஆணைக்குழு கவனத்திற் கொண்டதுடன் அது குறித்து பல தமிழ் மக்களிடமிருந்தும் அறிந்துகொண்டது.

9.239 இன்றும் கூட, சிறுபான்மையினத்தைச் சேர்ந்த பலரும் தங்களது காரியங்களை அவர்களது தெரிவிற்குரிய மொழியில் இல்லாமல் நிறைவேற்றுவதற்கு நிர்ப்பந்திக்கப் படுவதை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான விஜயங்களின் போது ஆணைக்குழு நேரடியாகக் கண்டுகொண்டது.

9.240 தமிழ் பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப் படுவதை அங்கீகரிக்கும் அதேவேளை, ஜனாதிபதிக்கான அதன் இடைக்கால தொடர்பாடல்களில் அவசரமான விடயங்கள் தொடர்பில் ஆணைக்குழுவினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் இன்னமும் அமுல்படுத்தப்படாதிருப்பதை ஆணைக்குழு வருத்தத்துடன் அவதானிக்கின்றது.

*சிறுபான்மைக் கட்சிகள் உட்பட சகல அரசியற் கட்சிகளும் உயர் மட்டத்தில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும்.*

9.241 *மொழிக்கொள்கைகளை நிறைவேற்றுதலும் செயற்பாடுகளைக் கண்காணித்தலும் பற்றிய உத்தியோகபூர்வ அமைப்புக்கள் தமிழ் மொழி பேசுவோர்கள் மற்றும் தமிழ் மொழி பேசும் பிரதேசங்களில் போதுமான பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

9.242 தொடர்பாடலிலான தடைகளின் காரணத்தால் வடக்கு கிழக்கிலுள்ள மக்கள் தெற்கிலுள்ள மக்களிலிருந்து வேறாகியுள்ளனர். அனைத்துப் பிரஜைகளிடையேயும் அவர்களது சாதி, சமயம் அல்லது சமூக அந்தஸ்து என்பவற்றைக் கவனத்திற்கொள்ளாது, நாட்டிற்கு உரியவராக இருக்கும் ஓர் உணர்வை உருவாக்குவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

9.243 ஒவ்வொருவரும் மற்றவர்களின் மொழிகளைக் கற்பது பாடசாலைப் பாட விதானத்தின் ஒரு கட்டாயப் பகுதியாக்கப்படுதல் வேண்டும். இது இரண்டு சமூகங்களிடையேயும் மனப்பாங்கில் மாற்றத்தை உறுதிப்படுத்து வதற்கான ஒரு முதன்மைச் சாதனமாக அமையும்.

9.244 எதிர்காலச் சந்ததியினருக்கு மும்மொழித் தேர்ச்சியை வழங்குவது மிக முக்கியமாகும்.

9.245 இலங்கையை 2020ஆம் ஆண்டு ஓர் மும்மொழித் தேசமாக்குவதற்கான அரசாங்கத்தின் முன்னெடுப்பை ஆணைக்குழு வரவேற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Photo source: CPA

9.246 எந்தவொரு மாவட்டமும் அல்லது மாகாணமும் மொழிகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுதல் கூடாது. அரச உத்தியோகத்தர்கள் நாடடின் எந்தப் பாகத்திலும் சேவையாற்றுவதற்கான மொழித் தேர்ச்சியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

9.247 அனைத்து அரசாங்க அலுவலகங்களும் தமிழ் பேசும் உத்தியோகத்தர்களை எல்லாச் சந்தர்பங்களில் கொண்டிருப்பதைக் கட்டாயமாக்குதல் வேண்டும். பொலிஸ் நிலையங்களைப் பொருத்தவரை அவை, இறுமொழித் தேர்ச்சி பெற்ற உத்தியோகத்தர்களை 24 மணித்தியாலமும் கொண்டிருத்தல் வேண்டும். முறைப்பாட்டாளர் தான் விரும்பிய மொழியில் தனது வாக்கு மூலத்தை பதிவு செய்யவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

9.248 அரச கரும மொழிகள் ஆணைக்குழு கொழும்பை தளமாகக் கொண்டு அமைந்துள்ளதால் கிராமப்புர மக்களால் இலகுவாக அணுக முடியாதுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாணைக்குழு தனது தீர்மானங்களை செயற்படுத்தக்கூடிய அதிகாரங்களைக் கொண்டிருப்பதோடு, அனைத்து மாகாணங்களிலும் கிளைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*மொழிக் கொள்கைகளை நிறைவேற்றுதலும் செயற்பாடுகளைக் கண்காணித்தலும் பற்றிய உத்தியோகபூர்வ அமைப்புக்கள் தமிழ் மொழி பேசுவோர்கள் மற்றும் தமிழ் மொழி பேசும் பிரதேசங்களில் போதுமான பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

9.249 மொழி ரீதியான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முடியும். நீண்டகாலத் தீர்வு பெறும் வரை மொழிபெயர்ப்புச் செய்வதற்கான மென்பொருள் செய்நிரல்கள் பயன்படுத்தப்படலாம்.

9.250 பொலிஸ் நிலையங்களில் இருமொழித் தேர்ச்சி கொண்ட ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களை பொலிஸ் நிலைய உரைபெயர்ப்பாளராக உபயோகிப்பதற்கான ஆணைக்குழுவின் இடைக்காலப் பரிந்துரைகளை இட்டு மீண்டும் கவனத்தை ஈர்க்க விரும்புகிறது.

## கல்வி க்கான சமவாய்ப்புக்கள்

9.251 ஓர் ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான நல்லிணக்கத்திற்கு பாரபட்ச உணர்வுகளின் நீக்கம் ஓர் முன் நிபந்தனையாகும். கல்வித் துறையில் தரப்படுத்தலை அறிமுகப்படுததிய பின்னர் பல்வேறு அநீதிகள் ஏற்பட்டுள்ளன. ஒரு சுயாதீனமான கல்வி, நிபுணர்களின் குழுவினால் நியாயமான பங்கீட்டு முறை அறிமுகப்படுத்த ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

9.252 கல்வி வசதிகள் நியாயமான முறையில் பங்கீடு செய்வதற்கான ஒரு வேலைத் திட்டத்தை அரசாங்கம் உருவாக்க வேண்டும். 2011இல் உத்தேசிக்கப்பட்ட நாடு முழுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: My Global Networker Blog

*கல்வி வசதிகள் நியாயமான முறையில் பகிரப்படும் வேலைத் திட்டத்தை அரசாங்கம் உருவாக்க வேண்டும்*

இரண்டாம் நிலை பாடசாலைகளாக தரமுயர்த்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் சமத்துவம் இன்மையை ஓரளவு குறைக்கும். சமூகத்தில் பிளவுகள் ஏற்படாத வகையில் இக்கொள்கை அமுல்படுத்தப்பட வேண்டும்.

9.253 பல்வேறுபட்ட இன மற்றும் மதப் பின்னணிகளைக் கொண்ட பிள்ளைகளுக்கு சேவையாற்றும் கலவன் பாடசாலைகளை ஊக்குவிப்பதற்கான ஒரு கொள்கையை அரசாங்கம் கொண்டிருக்க வேண்டும். பாடசாலைகளுக்கான அனுமதிகளைப் பொருத்தவரை, இன, மற்றும் மத அடிப்படையில் தகுதி பெறாத மாணவர்கள் என வகைப்படுத்துவது நல்லிணக்கத்திற்கு நன்மை பயக்கமாட்டாது.

9.254 பல்வேறுபட்ட இனங்களின் பெறுமதிமிக்க பன்மைத்துவ கலாசாரங்களை மதிப்பதற்கு பிள்ளைகளை பயிற்றுவிக்க வேண்டும். மாகாணங்களுக்கிடையிலான அப்பாடசாலை களுக்கிடையே பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்களை ஊக்குவிப்பதன் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லிணக்கத்தை மேம்படுத்தலாம். தேசிய இளைஞர் சேவை சபையை விட பரந்துபட்ட பரிமாற்ற நிகழ்ச்சிகளை முன்னெடுக்கலாம்.

> “அதிகாரப் பகிர்வு மற்றும் ஏனைய மனக்குறைகளை இட்டு சிறுபான்மைக் கட்சிகளின் மக்கள் பிரதிநிதிகளுடன் பயனுறுதிவாய்ந்த அரசியல் கலந்துரையாடலை நடத்த வேண்டும்.”

## சமாதானக் கல்வி

9.255 சர்வதேச ரீதியாக நிபுணத்துவம் பெற்ற சட்டத்தரணி ஒருவர் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளிக்கையில், நாட்டின் ஐக்கியத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் சமாதானக் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். அவற்றிற்கான பரிந்துரைகள் இவ்வறிக்கையின் உள்ளடக்கத்தில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது.

9.256 மும்மொழிக் கொள்கையை நடைமுறைப் படுத்தும் போது பல்வேறு இனங்களுக் கிடையிலான பிள்ளைகள் மத்தியில் இடைச் செயற்பாடுகளை நடத்துவதற்கு வகுப்பறைகளில் ஊக்குவிக்க வேண்டும். வெவ்வேறான மொழிகளில் பாடங்களைக் கற்பிப்பதற்கு வசதிகள் செய்யப்பட வேண்டும்.

9.257 அனைத்து பல்கலைக்கழகங்களும் மும்மொழிகளைக் கொண்டதாகவும் எல்லா இனங்களும் கலந்து கற்பதற்குரிய ஒரு சூழலையும் ஏற்படுத்த வேண்டும். தற்போது அதிகப்படியான தமிழ் மாணவர்கள் வடக்கு கிழக்குப் பல்கலைக்கழகங்களுக்கும் சிங்கள மாணவர்கள் தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கும் மட்டுப்படுத்தப் பட்டுள்ளனர்.

9.258 விளையாட்டுக்கள் மூலம் தனிப்பட்ட தொடர்புகளை வலுப்படுத்த முடியுமென ஆணைக்குழு கருதுகிறது. இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: Global Peace Support Website

புலம்பெயர் சமூகங்களின் பலத்தைப் பயன்படுத்தக்கூடிய பிரவேசம் அவசியம்

நல்லிணக்கத்திற்கு அத்தியாவசியமாகும். மாகாணங்களுக்கிடையேயான தேசிய விளையாட்டுப் போட்டிகளை குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடத்த வேண்டுமென ஆணைக்குழு பரிந்துரைக்கிறது.

## புலம்பெயர்ந்தவர்கள்

9.259 வெளிநாடுகளில் வாழும் இரண்டு புலம் பெயர்ந்த குழுக்களைப் பற்றி (Diaspora) நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு தகவல் கிடைத்துள்ளன. ஒன்று நல்லிணக்கததிற்கு பங்களிப்புச் செய்யத் தயாராகவுள்ளது. மற்றையது எல்.ரீ.ரீ.ஈ ஆதரவாளர்கள் எனக் கூறும் ஒரு பாதகமான அனுகுமுறையைக் கொண்டவர்கள்.

9.260 இந்த விரோதப் போக்குக் கொண்ட புலம் பெயர்ந்தவர்கள் இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்குப் பாதகமாகச் செயற்படலாம். எனவே இவர்களது சக்தியை பயன்படுத்தக் கூடிய பயனுறுதிவாய்ந்த அணுகுமுறையைக் கையாள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இலங்கையில் முதலீடு செய்ய விரும்புவோருக்காக ஒரு நெகிழ்ச்சியான நடைமுறையும் மனப்பாங்கும் இருத்தல் வேண்டும்.*

9.261 அத்தகையதொரு அணுகுமுறையின் பிரதான அம்சங்கள் பின்வருமாறு அமைதல் வேண்டும் :

அ. *அதிகாரப் பகிர்வு மற்றும் ஏனைய மனக்குறைகளை இட்டு சிறுபான்மைக் கட்சிகளின் மக்கள் பிரதிநிதிகளுடன் பயனுறுதிவாய்ந்த அரசியல் கலந்துரையாடலை நடத்த வேண்டும்.*

ஆ. தேசிய சமாதான நல்லிணக்கத்திற்கும் அபிவிருத்திக்கும் விரோதக் குழுக்களின் பங்களிப்பைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துதல்.

இ. புலம் பெயர்ந்த இலங்கையர் வாழும் நாடுகளில் இராஜதந்திர ரீதியான முயற்சிகளை ஆரம்பித்து இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும். அதே சமயம் எல்.ரீ.ரீஈ. இன் வன்முறைகளையும் பிரிவினை வாதக் கண்ணோட்டத்தையும் அங்கீகரிக்காத புலம்பெயர் சமூகத்தின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஈ. நாட்டில் இருந்து வெளியேறிய அதேசமயம் *இலங்கையில் முதலீடு செய்ய விரும்புவோருக்காக ஒரு நெகிழ்ச்சியான நடைமுறையும் மனப்பாங்கும் இருத்தல் வேண்டும்.* இரட்டைக் குடியுரிமை அந்தஸ்தைப் பெறுவதை இலகுவாக்குதல் வேண்டும். பணம் அனுப்புதல்கள் இலகுபடுத்தித் தேவையற்ற கட்டுப்பாடுகளின்றி நாடு பூராவும் நடமாடுவதற்கானவசதிகளை ஏற்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Photo source: MichaelDesign.Com.Au

இலங்கை மற்றும் வெளிநாட்டு அபிவிருத்திப் பங்காளர்களை இணைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

உ. இந்நடவடிக்கைகளுக்காக கவனமாகத் திட்டமிட்ட வேலைத்திட்டம் இருத்தல் வேண்டும். இதற்கு அரச தூதுவர்களினுடைய செயற்பணியையும் உள்நாட்டு வெளிநாட்டு சிவில் சமூக முன்னணியினதும் ஒத்துழைப்பைப் பெற வேண்டும்.

9.262 வன்னிப் பிரதேசத்தின் வீடுகள் பாடசாலைகள், சுகாதாரம் மற்றும் தொழில் வாய்ப்புக்கள் என்பவற்றை உருவாக்குவதற்கு இலங்கையின் புலம்பெயர் சமூகம் இலங்கை அரசாங்கத்திற்கு உதவ முடியும். இலங்கை மற்றும் வெளிநாட்டுப் பங்காளர்களை தொடர்புகொள்வதற்கு அரசாங்கம் முன்னெடுப்புக்களைச் செய்ய வேண்டும். நல் நோக்குடன் நல்லிணக்கத்திற்காக இது ஒரு அவசியமான நடவடிக்கை என்பதை உறுதி செய்ய வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ஆழமான புரிந்துணர்வுடன் மோதலையும் அதன் விளைவுகளையும் நோக்குதல் அவற்றை பரஸ்பரம் பொறுப்பேற்பது என்பன சகல மக்களுக்கும் வழிகாட்டுதல் மூலம் மதத் தலைவர்கள் முன்னுதாரணமாகத் திகழ வேண்டும்.

9.263 வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களிடமிருந்து பயனைப் பெறுவதற்கும் விரோதப் புலம்பெயர் சமூகம் எனக்கோரும் சமூகத்தோடு உறவுகொள்வதற்கும், அவர்களை நல்லிணக்க செயற்பாட்டின் பங்காளர்களாக்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு அரசதுறை, தனியார் துறை கல்வியியலாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பைப் பெறுவதோடு நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப வேண்டும். இத்தகைய நடவடிக்கைகளை எடுக்காதுவிடின் வெளிநாட்டு விரோதங்கள் வளர்ச்சியடையக் கூடும். அதே சமயம் இலங்கைக்குக் கிடைக்கும் ஒத்துழைப்பும் பலவீனமடையக் கூடும்.

## சர்வமத நடவடிக்கைகளும் நல்லிணக்கத்திற்கான மதங்களின் பங்களிப்பும்

9.264 மதக் குழுமங்கள் ஆணைக்குழுவிடம் கூறியவாறு இலங்கையில் நான்கு பிரதான மதங்களான பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் என்பவை போஷிக்கப்பட்டுள்ளன.

9.265 நீண்டகால மோதலின் பின்னர் குறுகிய காலத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. அதுவும் நீண்டகாலமாக உருவாக்கப்பட வேண்டும். சமூக ஐக்கியத்தை அளிக்கும் போக்குகளை முன் கூட்டியே கண்டறிந்து அவை ஆபத்தான நிலைக்கு வளர விடாமல் ஒழுகுவதற்கு நிறுவன ரீதியான வேலைத்திட்டம் இருக்க வேண்டும்.

9.266 அடையாளம் காணாத வன்முறையாளர்கள் வணக்க ஸ்தலங்களை அழிப்பதைக் கேள்வியுற்று ஆணைக்குழு பேரதிர்ச்சி அடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: www.ucanews.com

*மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் சர்வ மதத்தலைவர்கள் பாரிய பங்களிப்பைச் செய்ய முடியும் என ஆணைக்குழு வலியுறுத்துகின்றது.*

9.267 இத்தகைய சம்பவங்கள் தொடர்ச்சியாக ஏற்படின் அது நல்லிணக்கத்திற்கு பாதகமாகவே அமையும். இத்தகைய நடவடிக்கைகளைத் தவிர்ப்பதற்கு கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எனினும் இவற்றுக்குப் பொறுப்புடையவர்களை இனம்கண்டு புலனாய்வு செய்து சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க முடியாமையையிட்டு ஆணைக்குழு மனம் வருந்துகிறது. இத்தகைய நடவடிக்கைகளை தடுப்பதற்கு எடுக்கும் முயற்சி பாதிப்புக்குள்ளானோர் மீது நம்பிக்கையை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமையும்.

9.268 *ஆழமான புரிந்துணர்வுடன் மோதலையும் அதன் விளைவுகளையும் நோக்குதல் அவற்றை பரஸ்பரம் பொறுப்பேற்பது என்பன சகல மக்களுக்கும் வழிகாட்டுதல் மூலம் மதத் தலைவர்கள் முன்னுதாரணமாகத் திகழ வேண்டும்.* மதங்களின் பொதுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணாம்சங்கள் ஊடாக ஐக்கிய செயற்பாட்டை நோக்கி மக்களை வழி நடத்த வேண்டும்.

> பன்மைத்துவ இனங்களின் மொழி மற்றும் கலாசார உறவுகளைப் பற்றிய அறிவை மேம்படுத்துவது பரந்துபட்ட கூட்டணிக்குக் காரணமாகும் என ஆணைக்குழு கருதுகிறது.

9.269 ஐக்கிய கூட்டு நடவடிக்கைகள் மூலம் இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையே ஒரு சுமுக உறவை ஏற்படுத்துவதற்கு சர்வமதக் குழுக்கள் செயற்பட வேண்டும் என்பதை ஆணைக்குழு மீண்டும் வலியுறுத்துகின்றது.

9.270 சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் பாதகங்களை ஏற்படுத்தக்கூடிய மோதல்கள் ஏற்படுவதை முன் கூட்டியே அபாய அறிவிப்புச் செய்யக்கூடிய பொறிமுறை இதற்கு உதவ முடியும் என ஆணைக்குழு முன்னிலையில் சாட்சி கூறிய ஒரு சிலர் குறிப்பிட்டனர். அவர்களின் ஒத்துழைப்போடு இத்தகைய ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரைக்கிறது.

## கலையும் கலாசாரமும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கான கருவிகளாக

### *மொழிகளுக்கும் கலாசாரங்களுக்குமிடையிலான உறவு நிலை.*

9.271 ஆணைக்குழு முன்னிலையில் இவ்வாறு கூறப்பட்டது: இலங்கையின் அடையாளத்திற்காக மொழி மற்றும் கலாசார பொதுக்குணாம்சங்களை அடையாளம் காண்பது அவசியமாகும். ஆனால், சமூக நன்மைக்காக கலைப்படைப்புக்களிடமிருந்து பயன் பெறுவதற்கு அரசாங்கமும் மக்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறியுள்ளனர். கலை இதனை சாதிக்க முடியும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.


9.272 *தேசிய ஐக்கியத்திற்கான நடவடிக்கைகளுக்காக கலாசார உறவுகள் மிக முக்கியமானவை எனப் பல பிரதிநிதிகள் ஆணைக்குழு முன்னிலையில் எடுத்துக் கூறினர்.* சிங்களம் மற்றும் தமிழ் கலாசாரங்கள் மிகவும் செழுமையான வேர்களைக் கொண்டுள்ளன என அவர்கள் கூறினர். 1956 இல் இடம்பெற்றதைப் போல கலை, நாடகம், இசை ஆகிய துறைகளில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டனர்.

9.273 ஆணைக்குழு மகிழ்ச்சியடைந்த ஒரு விடயம் இருந்தது. மதத் தலைவர்களிடமும் கலைஞர்களிடமும் பிரஜைகளிடமும் ஒரு பொதுவான கருத்து நிலை நிலவியது. எனினும் இப் பொதுக் குணாம்சங்கள் சமாதானத்திற்காக பயன்பட வேண்டுமாயின் சகல அரசியல் தலைவர்களும் குறுகிய மனப்பான்மைகளை கைவிட்டு ஒரே நோக்குடன் தலைமைத்துவத்தை வழங்க வேண்டும்.

9.274 *பன்மைத்துவ இனங்களின் மொழி மற்றும் கலாசார உறவுகளைப் பற்றிய அறிவை மேம்படுத்துவது பரந்துபட்ட கூட்டணிக்குக் காரணமாகும் என ஆணைக்குழு கருதுகிறது.* அதற்கான அரச கொள்கையும் இதற்கு அத்தியாவசியமான பகுதியாக மாற்றுவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.


Photo source: Nruthyanjalee.com


Photo source: Himalayan Academy


Photo source: Divinologue.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ***தேசிய கீதத்தை ஒரே இசையுடன் இரு மொழிகளில் தொடர்ச்சியாகப் பாடுவதை ஊக்குவிக்க வேண்டும். இந்நடைமுறையை மாற்றியமைத்தால் நல்லிணக்கம் பழுதடையும்.***


9.275 தமிழ் சிங்கள இலக்கிய நூல்கள் பரஸ்பர மொழிகளிலே பிரசுரிக்கப்பட வேண்டும். பாடசாலைப் பிள்ளைகள் மத்தியில் பரஸ்பர காலாசாரங்களைப் பற்றிய கூர் உணர்வை ஏற்படுத்தல் மிக முக்கியமாகும்.

9.276 பல்வேறு இனங்களுக்கிடையிலே காணப்படும் பொதுப் பண்புகளையும் புரிந்துகொண்டு சினிமா, தொலைக்காட்சி மேடை நாடகம் என்பவற்றிற்கு ஊக்குவிப்பு வழங்க வேண்டும்.

9.277 *தேசிய கீதத்தை ஒரே இசையுடன் இரு மொழிகளில் தொடர்ச்சியாகப் பாடுவதை ஊக்குவிக்க வேண்டும். இந்நடைமுறையை மாற்றியமைத்தால்நல்லிணக்கம்பழுதடையும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தேசிய இனங்களுக்கிடையே பரஸ்பர உறவுகள்

9.278 ஆணைக்குழுவின் பிராந்தியக் கூட்டங்களின் போது அனைத்து இனங்களையும் சார்ந்த பலர் இனங்களுக்கிடையிலான பரஸ்பர உறவுகளின் முக்கியத்துவத்தைப் பற்றிக் கூறினர். ஒருவரையொருவர் சந்தித்து கருத்தொருமித்தலைக் கட்டியெழுப்புவது மிகவும் சிறந்த கருவியாகும் என ஆணைக்குழு அங்கீகரிக்கிறது.

9.279 மோதல்களின் மிகக் கொடூரமான விளைவுகளுக்கு அனைத்து இனங்களையும் சார்ந்த இளைஞர்களே முகம் கொடுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தேசிய ஐக்கியத்திற்கான நடவடிக்கை களுக்காக கலாசார உறவுகள் மிக முக்கியமானவை எனப் பல பிரதிநிதிகள் ஆணைக்குழு முன்னிலையில் எடுத்துக் கூறினர்.

எனவே அவர்களுக்கு விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இரத்தம் சிந்துவதற்கு அவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கவில்லை. சர்வதேசப் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கு அவர்களுக்கு அவகாசமோ நேரமோ கிடைக்கவில்லை.

9.280 இது சம்பந்தமாக இளம் பாராளுமன்றத்திற்கும், "பனந்தோப்பிலிருந்து தென்னந் தோப்பிற்கு" என்ற பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தது குறித்து சிவில் சமூகத்திற்கும் அரசாங்கத்திற்கும் ஆணைக்குழு மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றது.

9.281 தமது வகைப்பொறுப்பின் முறைமைக்கு ஏற்ப அனைத்து அமைச்சுக்களால் இத்தகைய நிகழ்ச்சி நிரலை ஆரம்பிக்கலாம். பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களை பரந்துபட்ட முறையில் செய்வதற்கு சிவில் சமூகக் குழுக்களின் ஒத்துழைப்பை நாடவேண்டும். ஆனால் இரு தேசிய இனங்களின் கலாச்சார மற்றும் மொழி பற்றிய கூர் உணர்வுகளுக்கு உரிய மதிப்பளித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அரசியல் இணக்கப்பாட்டின் அவசியம்

9.282 ஐக்கிய நல்லிணக்கத்திற்குத் தடையாக இருக்கும் முக்கிய காரணி அதிகாரப் பகிர்வு போன்ற அரசியல் இணக்கப்பாடு மற்றும் பல்கட்சிப் பிரவேசம் இல்லாமையே ஆனும்.

9.283 கடந்த நான்கு-ஐந்து தசாப்தங்களின் போது "குரோத உரைகள்" இன-மத ரீதியான பதட்டங்களைத் தூண்டிவிடவும் ஒற்றுமை யின்மைக்கும் காரணமாக அமைந்தது. இத்தகைய நடைமுறைகளைத் தடுப்பதற்கு கடுமையான சட்டங்கள் உருவாக்கப்பட்டு கண்டிப்புடன் அமுல்படுத்தப்படல் வேண்டும்.

9.284 மோதல் ஒரு துயரம் என்பதை அரசியல் தலைமைத்துவமும், சிங்களத் தமிழ் சிவில் சமூகங்களும் கூட்டாக ஏற்று வேதனைப்படுதல் ஓர் நல்லிணக்கத்திற்கு அவசியாகும். தென்னிலங்கையின் முக்கிய கட்சித் தலைவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண உடன்பட்டிருந்தால் மோதலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> **நாட்டில் இத்தகைய தொரு இரத்தம் சிந்தும் மோதல் மீண்டும் ஒரு போதும் ஏற்படாதிருப்பதை உறுதிப் படுத்துவதற்குமான கூட்டுப் பற்றுறுதியை உறுதி அளிப்பதற்கான ஒரு தனியான நிகழ்வுக்கு ஆணைக்குழு பரிந்துரைக்கிறது.**

தவிர்த்திருக்கலாம். இது பற்றி அவர்களுக்கும் சமமான வகைப்பொறுப்பு உண்டு. இத்துயரம் தொடர்பாக எந்தவொரு தரப்பினரும் சமமான முறையில் துயரம் அடையவில்லை. இது பற்றி நெறிமுறை சார் மதிப்பாய்வு இருத்தல் வேண்டும். மன்னிப்பதன் மூலம் கருணை காட்டுவதன் மூலமுமே. இது சம்பந்தமாக ஒருங்கிணைந்த பிரகடனத்தை சிவில் சமூகமும் மதத் தலைவர்களும் அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். சகல தரப்பையும் சார்ந்த தலைவர்கள் இம்மோதலைத் தடுப்பதற்கு தம்மால் முடியவில்லையென்று பாதிப்புக்குள்ளான சிவில் சமூகங்களின் தலைமை கேட்க வேண்டும். இதற்கு ஒருங்கிணைந்த பிரகடனத்தைச் செய்வதற்கும் சிவில் சமூக மதத் தலைவர்களும் அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். இது நல்லிணக்க நிகழ்ச்சித் திட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

9.285 எமது தேசிய தினத்தன்று, துயர் கொண்ட மோதலில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஒத்துணர்வு தெரிவிப்பதற்கும், *நாட்டில் இத்தகைய தொரு இரத்தம் சிந்தும் மோதல் மீண்டும் ஒரு போதும் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்குமான கூட்டுப் பற்றுறுதியை உறுதி அளிப்பதற்கான ஒரு தனியான நிகழ்வுக்கு ஆணைக்குழு பரிந்துரைக்கிறது.* அத்தகையதொரு சிறப்பு நிகழ்வில் இந்த ஞாபகார்த்த உணர்வு நல்லிணக்கச் செயன்முறைக்கு அவசியமான உத்வேகத்தை வழங்குமென ஆணைக்குழு உணர்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இக்கட்டுரையின் மூலம் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பான ஒரு சுருக்கமான ஆய்வு சமர்ப்பகிக்கப்படுகிறது.**

இணைப்பு 1 **LLRC** பரிந்துரைகளின் அண்மித்த வரலாறு

இணைப்பு 2 **LLRC** பரிந்துரைகள் தொடர்பான, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஊடக வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: Website of Champika Ranawaka

LLRC ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்




Photo source: chrsrilanka.com

LLRC ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியளிக்கும் ஒரு சந்தர்ப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: Sri Lanka Guardian Website

ஐ.நா. செயலாளர் நாயகமும் தருஷ்மான் உட்பட நிபுணர் குழுவும்

## LLRC பரிந்துரைகளின் அண்மித்த வரலாறு

எமது நாட்டு அரசியல் பயணத்தில் பொதுமக்கள் தமது அதிகாரத்தை படிப்படியாகக் கைவிட்டமை அல்லது ஜனநாயகத்தை இல்லாதொழிப்பதற்கு இடமளித்தல், இதன் ஆரம்ப வரலாறாகும். இதனால் ஜனநாயகம் சிறு எண்ணிக்கையினரின் சொத்தாக மாறியமையால் மோதல்கள் உக்கிரமடைந்தன.

அரசியலமைப்பு ரீதியான அதிகாரம் 1977 முதல் இன்றுவரை ஓரிடத்தில் குவிந்தமை இதன் அண்மித்த வரலாறாகும். இதன் காரணமாக சட்டத்தை விட தனிநபர் மேலோங்கியமை, GSP+ வரிச்சலுகையை பெறுவதாயின் ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) பரிந்துரைகள், தருஸ்மான் அறிக்கை, ஜெனீவாவில் மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசாங்கத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிராக அங்கீகரித்த பிரேரணை என்பனவும் LLRC பரிந்துரைகளுக்குக் காரணமாக அமைந்தன.

சர்வதேச மனிதநேயச் சட்டத்தையும் (International Humanitarian Law), சர்வதேச மனித உரிமைகள் சட்டமும் (International Human Rights Law) என்பன மீறப்பட்டமை இலங்கைக்கு எதிராகத் தொடர்ந்து நிலவும் குற்றச்சாட்டுக்கள் ஆகும். சர்வதேச சமவாயங்களில் இலங்கை கையொப்பமிட்டதன் மூலம் மேற்படி சட்டங்களைப் பாதுகாப்பதற்கு இலங்கை கடப்பாடு கொண்டுள்ளது.

30 ஆண்டு கால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த இறுதிக்கட்ட யுத்தத்தின் போது மேற்படி எந்தவொரு சட்டத்தையும் மீறவில்லை என தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கம் கூறி வந்தது. ஐக்கிய நாடுகள் சபை இதுபற்றி விசாரணை செய்வதற்கு ஒரு தூதுக்குழுவை இலங்கைக்கு அனுப்பத் தயாரானது. அதற்கு இடமளிக்க முடியாதென இலங்கை அரசாங்கம் கூறியது. எனவே, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் மூவர் அடங்கிய நிபுணர் குழுவை நியமித்தார். செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கவோ நடந்த சம்பவங்களை ஆய்வு செய்யவோ அல்லது நடந்த சம்பவங்களை விசாரணை செய்யவோ இக்குழு அமைக்கப்படவில்லை. எனவே, மேற்படி நிபுணர் குழு இலங்கைக்கு வரவேண்டிய அவசியமும் இருக்கவில்லை. இந்த நிபுணர் குழுவின் மூன்று உறுப்பினர்களும் இலங்கையைப் பற்றிய தகவல்களை அறிந்திருந்தனர். இவர்களுக்குக் கிடைத்த தகவல்களையும் தகவல் மூலங்களையும் பயன்படுத்தி பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. இப்பரிந்துரைகள் 'தருஷ்மான்' அறிக்கை என அறிமுகப்படுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Photo source: ibnlive.in.com

யுத்த வெற்றியினால் குதூகலமடைந்த தென்னிலங்கை மக்கள்

இவ்வறிக்கையில் இலங்கைக்கு எதிராக ஐந்து குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. 2012-03-22ம் திகதி ஜெனீவா நகரில் அங்கீகரிக்கப்பட்ட பிரேரணைகளுக்கு இந்த யோசனைகள் அடிப்படையாக அமைந்துள்ளன. இவ்வறிக்கையை ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை பரிசீலனை செய்து, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவைக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் கூறப்பட்டது.

### ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழு - தருஸ்மான் அறிக்கையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பின்வருமாறு:

i. கொத்துக் குண்டுகள் (Cluster Bombs) மூலம் பொதுமக்கள் கொலை செய்யப்படுதல்

ii. வைத்தியசாலைகளுக்கும் தடைசெய்யப்பட்ட இடங்களுக்கும் ஷெல் வீச்சுக்களை நடத்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: Lanka Express Website

*யாழ்ப்பாணத்தில் யுத்த வெற்றியின் பின்னரும் அரச படைகள்*

iii. மனிதநேய உதவிகளையும் சேவைகளையும் புறக்கணித்தல்

iv. இடம்பெயர்ந்தவர்களுக்கும் எல்.ரீ.ரீ.ஈ. சந்தேக நபர்களுக்கும் மோதலின் போது உயிர் பிழைத்தோருக்கும் இம்சை செய்தல்.


v. ஊடகங்களையும், அரசுக்கெதிராக விமர்சனங்களை முன்வைத்தவர்களையும் மோதல் வலயத்திற்கு வெளியே இம்சித்தல், துன்புறுத்தல், கொலை செய்தல்.

இவ்வைந்து குற்றச்சாட்டுக்களில் முதல் நான்கும் சர்வதேச மனிதநேயச் சட்டங்களை மீறியவையாகும். ஐந்தாவது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தை, அதாவது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சமவாயத்தை, மீறுதலாகும். எல்.ரீ.ரீ.ஈ க்கு எதிராக 6 குற்றச்சாட்டுக்கள் தருஸ்மான் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தன. அவற்றை விசாரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கும் ஆரம்பப் பொறுப்பும் அரசாங்கத்தையே சாரும். இக்குற்றச் சாட்டுக்களை கண்டறிந்த போது அரசாங்கம் பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடியதையோ எல்.ரீ.ரீ.ஈ தனியோர் அரசை நிறுவுவதற்கு நடத்திய போராட்டமோ கருத்திற்கொள்ளப்படவில்லை.


Photo source: Sndeyaz Website

## தேசப்பற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பும்

ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாக நாடு பூராவும் 'தேசப்பற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பும்" பற்றி பாரிய பிரசாரத்தை அரசாங்கம் ஆரம்பித்தது. எனவே, தருஸ்மான் நிபுணர் குழுவிற்கு, எதிராக பாரிய எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. 'வெளிநாட்டு விசாரணைகள் எமக்கு வேண்டாம், எம்மால் அதைச் செய்ய முடியும்." என்ற கருத்துக்கமைய "உள்நாட்டு விசாரணைகள் ஆணைக்குழு" ஒன்று ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டது.

இதுவே கற்ற பாடங்களும் நல்லிணக்க ஆணைக்குழுவும் என அழைக்கப்பட்டது (LLRC). நாம் மேற்படி ஆணைக்குழு முன்வைத்த 285 அவதானிப்புகளையும் பரிந்துரைகளையுமே வாசிக்கப் போகின்றோம். தருஸ்மான் அறிக்கையில் பின்வருமாறு அவதானிப்புகள் செய்யப்பட்டுள்ளன. யுத்த வெற்றியைக் காரணமாக வைத்து அளவுகடந்த மகிழ்ச்சியை அரசாங்கம் பிரகடனப்படுத்தியது மூலம் யுத்தத்தினால் ஏற்பட்ட மனித அழிவுகளை நிராகரித்துள்ளது, தமிழ் மக்களைப் புறக்கணிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன. அடக்குமுறைச் சட்டங்கள் மாத்திரமல்லாது, அச்சுறுத்தல்கள், வன்முறைகள் இடம்பெறுவதோடு யுத்த நிலமையை வடக்கிலே தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. ஊடகங்களுக்கும் பிரஜைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> எனவே, அமெரிக்காவின் பிரேரணையைத் தயாரிப்பதற்கு இலங்கை அரசாங்கமே கூடிய ஒத்துழைப்பை வழங்கியுள்ளது.

உரிமைகளுக்கும் தொடர்ந்தும் மட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன" இப்பரிந்துரைகளை LLRC பரிந்துரைகளோடும் அவதானிப்புகளோடும் ஒப்பு நோக்குவதன் மூலமாக இவ்விரண்டும் ஒன்று என புரியக்கூடியதாக உள்ளது. எனவே, எமது அரசாங்கம் கட்டாயமாகச் செய்ய வேண்டியதைத் தான் இந்த அறிக்கையின் மூலமும் சொல்லப்படுகிறது. இவை எதுவுமே வெளிநாட்டவர்களுக்காகவோ அல்லது வெளிநாட்டவர்களின் சார்பிலோ செய்யப்படுபவை அல்ல. எமது நாட்டு மக்கள் சார்பில் அமுலாக்குவதற்கு கடப்பாடுடைய விடயங்களாகும். இந்த இரண்டு அறிக்கைகளுக்கும் முன்பு ஐரோப்பிய ஒன்றியம் எமது ஏற்றுமதி பொருட்களுக்கான வரிச்சலுகையை தொடரவேண்டுமானால் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நியமங்களை கவனத்தில் எடுத்தது. ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்த 15 பரிந்துரைகளோடு, தருஸ்மான் அறிக்கையினதும், LLRC அறிக்கையினதும் பரிந்துரைகளை ஒப்புநோக்கினால் ஐரோப்பிய ஒன்றியத்தின் பரிந்துரைகளுக்கு இவை மாறுபட்டவையுமல்ல. தொடர்ந்து சட்டமும் மனித உரிமைகளும் மீறப்பட்டமைக்கான குற்றச்சாட்டுகளே இலங்கை மீது முன்வைக்கப்பட்டது.

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அங்கீகரிக்கப்பட்ட பிரேரணை திடீரென உருவாக்கப்பட்டது அல்ல. இக்குற்றச்சாட்டுக்கள் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தயாரிக்கப்பட்டன. இதனை அமெரிக்கா சமர்ப்பித்தது. இந்தியா உட்பட 24 நாடுகள் இப்பிரேரணையை அங்கீகரித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐரோப்பிய ஆணைக்குழுவின் பரிந்துரைகள் (GSP+).


Photo source: EU Website

GSP+ வரிச்சலுகையை நீக்கிவிடாதிருக்க வேண்டுமாயின் இலங்கை அரசு 15 நிபந்தனைகளை அனுசரிக்க வேண்டும் என 2011 ஆகஸ்ட் 15ம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணைக்குழு இலங்கைக்கு அறிவித்தது. 2007ம் ஆண்டு துறைமுகத் தொழிற்சங்கங்களுக்கு எதிராக ஓர் தடை உத்தரவை மேற்கொள்வதன் மூலம் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் தொழிலாளர் உரிமைகள் சம்பந்தமான சமவாயங்களை இலங்கை அரசாங்கம் மீறியுள்ளமை பற்றியும் அறிவிக்கப்பட்டிருந்தது. அரசாங்கம் கடப்பாடு கொண்டுள்ள சர்வதேச தொழிலாளர் சமவாயங்களுக்கும் அரசாங்கத்தின் நிலைப்பாடு முரணானது என்றும் தீர்மானிக்கப்பட்டது. எனவே, அமெரிக்காவின் பிரேரணையைத் தயாரிப்பதற்கு இலங்கை அரசாங்கமே கூடிய ஒத்துழைப்பை வழங்கியுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் 15 நிபந்தனைகள் பின்வருமாறு:

1. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயத்தை மீறும் விடயங்கள்

2. அனைத்து சமூகங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய அரசியலமைப்பு செயற்குழுவை நியமித்து அரசியலமைப்பின் 17வது திருத்தத்திற்கு அமைய சுயாதீன ஆணைக்குழுக்களை நியமனம் செய்தல்.

3. வழக்கு விசாரணையின்றி தடுத்து வைத்திருத்தலை நீக்கிவிட்டு அரசியல் உரிமைகள் பற்றிய சமவாயங்களுக்கும் சித்திரவதை பற்றிய சமவாயங்களுக்கும் ஏற்புடைய வகையில் குற்றவியல் சட்டத்தைத் தயாரித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*ஊடகவியலாளர்கள் தமது தொழிலை எதுவிதத் தடையுமின்றி சுதந்திரமாகச் செய்வதை உறுதிப்படுத்துதல்*

4. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சமவாயத்திற்கேற்ப பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் உறுப்புரைகளை மீள் உருவாக்கம் செய்தல் அல்லது நீக்குதல்.

5. மேற்படி சமவாயங்களுக்கு முரணாகாத வகையில் மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் விதிகளைத் தயாரித்தல்.

6. ஒரு சந்தேக நபரை கைது செய்தால் அந்நபருக்கு சட்டத்தரணியின் உதவியைப் பெறுவதற்கான வாய்ப்பை உறுதிப்படுத்தல் வேண்டும்.

7. சிவில், அரசியல் உரிமைகள் பற்றிய சமவாயத்தோடு தொடர்புடைய முதலாவது மேலதிக ஒப்பந்தத்தின் கீழ் ஒரு நாட்டுப் பிரஜை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் செயற்குழுவிற்கு முறைப்பாடு செய்யும் உரிமையை உறுதிப்படுத்துதல்

8. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பற்றிய செயற்குழுவின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துதல்.

9. காணாமற் போகச் செய்தல் பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் குழுவும், சித்திரவதைகள் பற்றிய ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளரும், வெளியீட்டுச் சுதந்திரம் பற்றிய ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளரும், நீதவான்களினதும் சட்டத்தரணிகளினதும் சுயாதீனம் பற்றிய விசேட அறிக்கையாளரும் இலங்கைக்கு வருவதற்கு முன்வைத்துள்ள கோரிக்கைக்கு இடமளித்தல்.

10. காணாமற் போதல் பற்றிய ஐக்கிய நாடுகளின் நடவடிக்கைக் குழு முன்னிலையில் பரிசீலனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Photo source: Jean-Marc Ferre

ஜெனீவாவில் 22வது கூட்டத்தொடரில் பங்குபற்றிய அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும் குழுவினரும்

செய்யப்படும் முறைப்பாடுகள் பற்றி தனித்தனியாக பதில் அளித்தல்

11. விசாரணை ஆணைக்குழுவின் (2008) அறிக்கையைப் பிரசுரித்து வெளியிடுதல்.

12. தற்போது தடுப்புக் காவலில் இருக்கும் எல்ரீரீஈ சந்தேக நபர்களின் பெயர்ப்பட்டியலை பகிரங்கப்படுத்த வேண்டும். மேற்படி சந்தேக நபர்களின் குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு மேற்படித் தகவல்களை பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல். இவர்களுக்கெதிராக வழக்குத் தொடர்தல் அல்லது விடுதலை செய்தல்.

13. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற நிறுவனங்கள் அவதானிப்புகளைச் செய்வதற்காக அனுமதி அளித்தல்.

14. மனித உரிமைகள் பற்றிய தேசியத் திட்டத்தை அங்கீகரித்து செயற்படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Photo source: Peace in Sri Lanka website

எல்.ரி.ரி.ஈ முன்னாள் போராளிகள் புனர்வாழ்வு பெறல்

15. ஊடகவியலாளர்கள் தமது தொழிலை எதுவிதத் தடையுமின்றி சுதந்திரமாகச் செய்வதை உறுதிப்படுத்துதல்

மேற்கூறிய பரிந்துரைகளுக்கும், ஏற்கனவே குறிப்பிடப்பட்ட தருஸ்மான் அறிக்கை LLRC அறிக்கையின் பரிந்துரைகளுக்குமிடையில் வேறுபாடுகள் இல்லை என்பது தற்போது உங்களுக்குப் புரியும்.

## ஜெனீவாப் பிரேரணைகள்

அமெரிக்காவின் பிரேரணை இன்றும் செல்லுபடியானதாகும். எனவே ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையும், மேலைத்தேய நாடுகளும் எதிர்காலத்தில் இதனடிப்படையில் செயற்பட இடமுண்டு. அமெரிக்கப் பிரேரணையின் சாராம்சம் பின்வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: Pact.lk / Courtesy of Sahajeevana Centre

*1972 அரசியலமைப்புப் பேரவையின் ஓர் அமர்வு*

1. LLRC பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல்
2. மனித நேயச் சட்டங்களையும் மனித உரிமைகள் சமவாயங்களையும் மீறியமை பற்றி கண்டறிதல்
3. இவற்றின் அமுலாக்கம் பற்றிய நடைமுறைத் திட்டத்தை முன்வைத்தல். இது சம்பந்தமான ஆலோசனைகளையும் தொழில்நுட்ப உதவியையும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். 22ம் கூட்டத்தொடருக்கு ஓர் அறிக்கையை சமர்ப்பித்தல்.

   அரசாங்கத்தின் சார்பில் இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பற்றிய தகவல்கள்

அரசாங்கத்தின் சார்பில் முன்வைக்கப் பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

1. இடம்பெயர்ந்தோரை மீள் குடியேற்றம் செய்தல்
2. மிதிவெடிகளை அகற்றுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*1978 அரசியலமைப்பு மூலம் நிறைவேற்று ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்திய திரு. ஜே.ஆர். ஜயவர்தன*

3. எல்ரீரீஈ இன் முன்னாள் போராளிகளுக்கு புனர் வாழ்வளித்தல்.
4. அரச கரும மொழிக்கொள்கையை அமுலாக்கம் செய்தல்.
5. தமிழ் மொழி பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்களை பொலி சேவையில் இணைத்துக்கொள்ளல்.
6. வடக்கில் இராணுவ நிர்வாகத்தை படிப்படியாக நீக்குதல்
7. இராணுவ நிர்வாகத்திலிருந்து காணிகளை விடுவித்தல்
8. வடக்கு கிழக்கு மாகாணங்களின் சனத்தொகை புள்ளிவிபர ஆவணத்தைத் தயாரித்தல்

மேற்கூறிய விடயங்கள் ஒட்டுமொத்தமாக பூர்த்தியடையாவிடினும் ஓரளவு அவை செயற்படுத்தப் பட்டுள்ளன என்பது உண்மை. அவற்றோடு அனைத்துப் பரிந்துரைகளையும் முழுமையாக செயற்படுத்தினால் இக்குற்றச்சாட்டுக்களிலிருந்து நாம் விடுவிக்கப்பட முடியும். மீண்டும் ஓர் இரத்த ஆறு ஓடுவதை நாம் தடுக்க முடியும். நாடு பிளவுபடுவதை தடுப்பதற்கும் இவை அமுல்படுத்தப்பட வேண்டும்.

## அதிகாரத்தை குவிமையப்படுத்தும் அரசியல்

1947 முதல் அதிகாரம் ஒரு பிரிவினரின் கையில் குவிமையப்படுத்தப்பட்டது. பின்னர் 1977 முதல் ஒரு தனிநபரிடம் இது குவிமையப்படுத்தப்பட்டுள்ளது. யுத்தம் வரை இந்த அரசியலே தொடர்ந்தது. இதன்

காரணமாக நாடு பஞ்சமடைந்தது. மனிதத் தன்மையற்ற ஒரு நாடாக மாறுவதற்கு இந்த அரசியல் துணை நின்றது. இதற்கு வகைப்பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Photo source: Sunday Leader website

*இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ LLRC அறிக்கையை வாசிக்கின்றார்.*

1947 அரசியலமைப்பில் சிறுபான்மை இனங்களின் பாதுகாப்பிற்காக இருந்த 29வது உறுப்புரை, 1972 குடியரசு அரசியலமைப்பு மூலம் நீக்கப்பட்டது. 1948 இல் இந்திய வம்சாவளி மக்களின் பிரஜா உரிமை நீக்கப்படுவதற்கு சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. 'தேசிய வன்முறைக்கு அவசியமான ஒரு மனோநிலையே உருவாக்கப்பட்டது."

குடியரசு அரசியலமைப்பின் 6ம் 7ம் உறுப்புரைகள் மூலம் தேசிய, மத, மொழி வேறுபாடுகள் அங்கீகரிக்கப் படவில்லை. இவை 1978 அரசியலமைப்பு மூலம் மீண்டும் உறுதி செய்யப்பட்டன,

1978 அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்ட 18 திருத்தங்களில் 13ம் 17ம் திருத்தங்களைத் தவிர ஏனைய அனைத்துமே ஒரு தனி மனிதனின் அதிகாரத்தை குவிமையப்படுத்துவதற்காகவே அங்கீகரிக்கப்பட்டன. இதன் மூலம் அதிகாரம் குவிமையப்படுத்தப்பட்டதோடு ஜனநாயகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எமது பிள்ளைகள் சிரிக்கக்கூடிய நாளை....?

கட்டமைப்பை ஏற்படுத்தக்கூடிய இரண்டு திருத்தங்களும், ஜே.ஆர். முதல் அனைத்து ஜனாதிபதிகளும் செயற்படுத்தவில்லை. இது தெளிவாக ஓர் அரசியலமைப்பு மீறலாகும். இதற்கு அரசியல் செயற்பாடுகள் மூலமும் நீதித்துறையினதும் பாரிய ஒத்துழைப்பு கிடைத்தது. அரசியலமைப்பிற்கான 17வது திருத்தத்தை நீக்கி 18வது திருத்தத்தை அமுல்படுத்தியது மூலம், ஒரு தனிமனிதனிடம் ஆகக்கூடிய அதிகாரங்கள் குவிமையப்படுத்தப்பட்டன.

அதிகாரம் இவ்வாறு குவிமையப்படுத்தும் அரசியல் காரணமாகவே வெளிநாடுகளுக்கு அடிவருடிகளாக மாறுவதும் வெளிநாட்டுத் தலையீடுகள் அதிக அளவில் இடம்பெறுவதும் நிகழ்கின்றன. அதிகார அரசியல் காரணமாகவே வெளிநாடுகள் குற்றச் சாட்டுக்களை சுமத்தக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சர்வதேச சட்டங்கள் மீறப்படும் நிலையும் இதன் காரணமாகவே உருவாகியுள்ளன. உள்நாட்டு சட்டதிட்டங்களும் அரசியலமைப்பும் மீறப்படுகின்றமையாலேயே சர்வதேச சட்டங்களும் மீறப்படுவதற்கான வழி சமைக்கப்பட்டுள்ளன.

இதற்கு சிங்களம், தமிழ், முஸ்லிம் ஆகிய அனைத்து சமூகங்களும் அரசியற் கட்சிகளும் பொறுப்புக் கூற வேண்டும். தற்போது இப்பிரச்சினையைத் தீர்ப்பதாயின் சகல கட்சிகளினதும் மக்களினதும் ஒத்துழைப்பி னூடாகவே அதனை சாத்தியமாக்க வேண்டும்.

சர்வதேசச் சட்டங்களை மீறும் குற்றச் சாட்டுகளிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகவே அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தது. அதாவது போரின் சிக்கலான தன்மை காரணமாக வேண்டுமென்றே சட்டங்கள் மீறப்படவில்லை" (9.27 முதல் 9.37 வரை பார்க்கவும்) உண்மை இவ்வாறாயின் சர்வதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்திற்கு அப்படியான நோக்கம் இருந்ததை நிரூபிக்க முடியாது போய்விடும். ஆனால் சர்வதேச சமூகத்தை இலங்கைக்கு விஜயம் செய்ய விடாமல் தடுப்பதன் மூலம் சந்தேகம் வலுவடைகிறது.

சர்வதேச சட்டங்களை மீறுவது பற்றிய பிரச்சினை எந்த வகையிலும் தீர்க்கப்படலாம். ஆனால் உள்நாட்டுச் சட்டங்கள் 1948 முதல் மீறப்படுகின்றன. நாட்டில் ஜனநாயகத்தை நிலை நாட்டுவது தொடர்பாக சர்வதேச தலையீடுகள் எமக்குத் தேவையில்லை. எமது நாட்டின் சட்டங்களை ஆட்சியாளர்கள் மீறும் போது அதற்கு வாக்காளர்களாகிய நாம் தண்டனை வழங்க முடியும். ஆனால் அது அவ்வாறு நிகழ்வதில்லை. ஜனநாயக விரோத நடத்தைகளையிட்டு நாம் பொறுத்துக் கொள்கின்றோம். நாம் குறுகியகால கனவுகளை நனவாக்குவதற்கு ஒரே வகையைச் சார்ந்த அரசியல் வாதிகளுக்கு நாம் அதிகாரம் வழங்குகின்றோம். இது குறித்து வாக்காளர்கள் பொறுப்புக்கூற வேண்டும். தொடர்ந்தும் இந்நிலமையை இல்லாதொழித்து ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதாயின், குறைந்தபட்சம் LLRC பரிந்துரைகளை அமுலாக்குமாறு ஆட்சியாளர்களை நிர்ப்பந்திக்க வேண்டும். இச்செயற்பாட்டில் நாம் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

நடக்கக் கூடாதவைகள் தொடர்ந்து இடம்பெறுகையில் அதை பேசா மடந்தைகளாக அவதானித்துக் கொண்டிருந்தால் விளைவு பயங்கரமாகவே அமையும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எமது எதிர்கால சந்ததியினரை இத்தகைய துன்பியல்

நடவடிக்கைகளில் இருந்து காப்பாற்ற வேண்டுமானால் இம்சையையும் ஒடுக்கு முறையையும் தடுப்பதாக இருந்தால் மக்களின் கடமைகளை எவருக்கும் ஏமாறாமல் நாம் நிறைவேற்ற வேண்டும். இதனை நாம் நாளை அல்ல இன்றே ஆரம்பிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C P A
Centre for Policy Alternatives

## கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (LLRC) வெளியிட்ட அறிக்கை

***2012, ஜனவரி 04, கொழும்பு, இலங்கை.*** மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (LLRC) வெளியிட்ட அறிக்கையையும், முரண்பாட்டு மோதலின் மூலகாரணங்கள் சம்பந்தமான அதன் பகுப்பாய்வையும், எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் கொடுமைகள் சம்பந்தமான எடுத்துரைப்புகளையும், ஆட்சிமுறை சம்பந்தமான பரிந்துரைப்புகளையும் - விசேடமாக, தற்போதுள்ள நிறுவனங்களின் அரசியல்மயப்படுத்தலை இல்லா தொழிப்பது குறித்தும், தகவல் உரிமைக்கான சட்டவாக்கத்தை அறிமுகஞ்செய்வது குறித்தும், மொழி உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் குறித்தும், இராணுவமயமாக்கல், கருத்து வெளியிடுதல் சுதந்திரத்துக்கெதிரான தாக்குதல்கள் குறித்தும், ஒளியலை நான்கு (Channel four) ஆவணத்திலுள்ள குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வது குறித்தும், ஆட்கள் காணாமற் போனமை மற்றும் சிவிலியன் மக்களின் மரணங்களுக்குக் காரணமானவர்களை விசாரணை செய்து, அவர்களுக்கெதிராக வழக்குத் தொடருவது குறித்தும் செய்யப்பட்டுள்ள பரிந்துரைகளையும் வரவேற்கின்றது. அரசாங்கத்துடன் இணைப்புள்ள பெயர் குறிப்பிடப்பட்ட தனிநபர்களும், அமைப்புகளும் மனித உரிமை மீறல்கள் மற்றும் ஒட்டுப்படை நடவடிக்கைகள் சம்பந்தமாக விசாரிக்கப்படவேண்டுமென்றும், எல்.ரி.ரி.ஈ. அமைப்பினால் வெளியேற்றப்பட்ட வடபகுதி முஸ்லிம்கள் சம்பந்தமாகவும், மலைநாட்டுத் தமிழ் மக்கள் சம்பந்தமாகவும் உரிய, பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள பரிந்துரைகளையும் நாம் வரவேற்கின்றோம். இந்த இரு சனசமூகங்களினதும் நிலைமைக்கு இந்த ஆணைக்குழு வழங்கியுள்ள கவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மக்களுக்கு நல்லிணக்கம் என்னும் நடுநாயகமான பிரச்சினைகுறித்த அறிக்கையின் அர்த்தப்பொதிவை வலுப்படுத்துகின்றது. ஆணைக் குழுவின் முன்பாக அறிக்கையிடப்பட்ட சாட்சியங்களும், விசாரணை நடவடிக்கைகளின் பதிவேடுகளும் எதிஉகாலச் சந்ததியினரின் நன்மைக்காகப் பாதுகாத்து வைக்கப்பட வேண்டுமென்று நாம் தீவிரமாக வலியுறுத்துகின்றோம்.

ஆணைக்குழுவின் பணிப்பாணை மற்றும் அதன் அங்கத்தவர்கள் சம்பந்தமாகவும், ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் கடந்தகால வரலாறுகள் காரணமாகவும், விசேடமாக அவற்றின் பரிந்துரைகள் இந்த LLRC ஆணைக்குழுவின் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வெளியிடப்படாமை மற்றும் நடைமுறைப்படுத்தப்படாமை காரணமாகவும் CPA இந்த ஆணைக்குழுவின் முன்பாகச் சாட்சியமளிக்கச் செல்லவில்லை. எவ்வாறாயினும், LLRC யினால் செய்யப்பட்ட பல அவதானிப்புரைகளும், பரிந்துரைகளும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினாலும், ஏனைய சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களினாலும் ஆட்சிமுறையின் நிலை, இலங்கையில் தண்டனைப் பயமின்மை குறித்த கலாசாரம் மற்றும் குறிப்பாக, மனித உரிமைகள் பாதுகாப்புச் சம்பந்தமாக மேற்கொண்ட பரிந்துரைகளை மேலும் வலியுறுத்துவனவாகவே அமைந்துள்ளதை நாம் அவதானிக்கின்றோம். ஜனாதிபதி ஆணைக்குழு இக்கருத்துகளை அங்கீகரித்துள்ளமை சிவில் சமூகத்தின் இந்த விமர்சனத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளதோடு, மிகவும் அவசரமான தேசிய முன்னுரிமை விடயமாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயப்பரப்புகளிலான LLRC யின் பரிந்துரைகளை நம்பத்தக்க வழியிலும், பயனுறுதியுள்ள வழியிலும் நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகின்றது. இது, LLRC எடுத்துரைத்துள்ளது போன்று, ஆணைக்குழுவின் இடைக்கால பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் பூரணமாக நடைமுறைப்படுத்துவதற்குத் தவறியமை காரணத்தாலும் மேலும் முக்கியத்துவம் பெறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.நா. செயலாளர் நாயகத்தின் மதியுரைக்குழுவின் அறிக்கை வெளியாகியதைத் தொடர்ந்தும், எல்.ரி.ரி.ஈ. அமைப்புக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் எதிராகச் செய்யப்பட்ட யுத்தக் குற்றங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்ட (IHL) மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் சம்பந்தமாகச் சர்வதேச விசாரணைகள் அவசியமென்று குரல்கள் ஒலிக்கத் தொடங்கிய பின்னரும் இலங்கை அரசாங்கம் LLRCயின் அறிக்கை அதை விமர்சிப்பவர்களுக்கு உரிய பதிலை வழங்குமென்று கூறிவந்துள்ளது. இந்த விடயத்துக்கு நடுநாயகமாக உள்ள விடயம் முரண்பாட்டு மோதலின் இறுதிக் கட்டத்தில் உண்மையில் என்ன நடந்தது என்பதைத் தீர்மானிப்பதும், வகைப்பொறுப்பு சம்பந்தமான பிரச்சினையுமாகும். ஆரம்பத்திலேயே LLRCக்கு மனித உரிமைகள் அல்லது சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ளும் பணிப்பாணை வழங்கப்படவில்லை என்பதையும், 2001ஆம் ஆண்டில் போர் நிறுத்த உடன்படிக்கை ஏன் செயலிழந்தது என்பதைப் பரிசீலனைசெய்யும் பணியே அதற்கு வழங்கப்பட்டது என்பதையும் கவனிப்பது அவசியமாகும். LLRC தனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் உண்மையை நிர்ணயம் செய்வது அனேகமாக முடியாத விடயமாக உள்ளதென்றும், மேலும் முக்கியமாக, இந்த நேரத்தில் பெறக்கூடிய தகவல்களின் பிரகாரம் நிலைமை அவ்வாறே உள்ளதென்றும் முடிவுசெய்துள்ளது.

ஆணைக்குழுவுக்குக் கிடைக்கக்கூடிய தகவல்கள் சம்பந்தமான மட்டுப்பாடுகள் இருந்த வேளையிலும், ஆணைக்குழு சிவிலியன்களை எந்தவேளையிலும் இலக்குவைப்பது இலங்கை அரசின் நோக்கமாக இருக்கவில்லை என்று தெளிவாகக் கூறுகின்றது. சில விடய நிகழ்வுகளில் சிவிலியன்களின் மரணங்கள், யுத்தக் குற்றங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்களுக்கான பொறுப்பைத் தீர்மானிப்பதற்கு மேலும் விசாரணைகள் அவசியமென்று கூறியுள்ளபோதிலும், "இது தீங்கு விளைவிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் செய்யப்படாத விடயமாக இருக்கலாம்" என்றும் கூறுகின்றது. இது அரசியல் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளிலுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் மற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரிகளின் சாட்சியங்களை எதிரொலிக்கும் ஒரு முடிவாகவே உள்ளது. இந்த முடிவு மேலதிக சிவிலியன் வாக்குமூலங்களைப் பெற்றுக்கொள்ள வகைசெய்யும் சாட்சி மற்றும் பாதிக்கப்பட்டவர் பாதுகாப்பு வழிமுறையமைப்பு எதுவும் இல்லாத நிலையில், யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் என்ன நடந்தது என்பது சம்பந்தமான ஒரு பூரணமான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு செயல்முறையினூடாகவே செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளித்த சிவிலியன்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் மற்றும் பின்னர் இடம்பெற்ற தொல்லைகள் மற்றும் ஆணைக்குழுவுக்கு வாய்மூல சாட்சியங்களைச் செய்வதற்குச் சிவிலியன்களுக்கு வழங்கப்பட்ட நேரம் போதாமை என்பவற்றையும் அவதானிப்பது முக்கியமானதாகும். மேலும் முக்கியமாக காணாமற்போன மற்றும் கொல்லப்பட்ட ஆட்களின் குடும்பங்களைச் சேர்ந்த பலர் தாம் எதிர்நோக்கிய இடர்கள் மற்றும் ஆபத்துக்களைப் பொருட்படுத்தாது ஆணைக்குழு முன் வந்து சாட்சிய மளித்தமை பாதிக்கப்பட்ட ஜனசமூகத்தின் கருத்துகள் செவிமடுக்கப்பட வேண்டும் என்பதற்கான தீவிர தேவையையும், சமூக மட்டத்தில் நீதிக்கும், வகைப்பொறுப்புக்குமான அவசரத் தேவையையும் வலியுறுத்துவதாகவே உள்ளது.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் ஆயுதப் படைகளின் நோக்கங்கள் சம்பந்தமான முடிவு ஏமாற்றமளிப்பதாகவே உள்ளதென்று எண்ணுகின்றது. அது விசாரித்துவிட்டு அவற்றை அப்படியே கிடப்பில் போடுவதற்குப் பதிலாக, ஒரு சர்வதேச விசாரணை அவசியமென்ற கோரிக்கைகளை மேலும் பலப்படுத்துவதாகவே அமைகின்றதென்று நாம் தீவிரமாக நம்புகின்றோம். ஆட்சிமுறை மற்றும் சட்டத்தின் ஆட்சிகுறித்த தற்போதைய நிலைமை, பொலிஸ் படையைப் பாதுகாப்புத் துறையிலிருந்து பிரிப்பதற்கான தேவை மற்றும் பயனுறுதியைப் பொறுத்தவரையில் 17வது திருத்தத்தையும், ஏனையவற்றுடன் சேர்த்து பொலிஸ் மற்றும் பொதுச் சேவைக்கான சுயாதீன ஆணைக்குழுக்களை ஏற்படுத்துவதும் குறித்த LLRCயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனங்களும் இக்கோரிக்கைகளை மேலும் வலுப்படுத்துகின்றன. LLRC யினால் விபரிக்கப்படும் ஆட்சிமுறை நிலைமையும், சட்டத்தின் ஆட்சியும், விசாரணைகளில் ஈடுபடும் நிறுவனங்களின் நேர்மைத்திறன் மிகவும் பாதிப்புற்ற நிலையில் ஆணைக்குழு விதந்துரைக்கும் தேசிய அளவிலான விசாரணைகளை எவ்வாறு சாத்தியமாக்கும் என்பது புரியாத விடயமாகவுள்ளது. LLRC பரிந்துரைக்கும் இந்த "சுயாதீன" மற்றும் "முறையான" "விசாரணைகள்" குறித்த வெளிப்படையான வழிகாட்டல்கள் இருந்திருப்பின், அவை இந்த பரிந்துரைகளை மேலும் வலுவுள்ளவையாகவும், அர்த்தமுள்ளவையாகவும் ஆக்கியிருக்கும்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின்போது வன்னியில் இருந்த சிவிலியன்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் அவர்களுக்கான உணவு மற்றும் வைத்திய வசதிகள் வழங்கப்பட்டமைகுறித்த பிரச்சினையை இந்த ஆணைக்குழு கையாண்ட விதம் எமக்கு ஏமாற்றமளிப்பதாகவுள்ளது. இந்த விடயத்தில் அந்த வேளையில் பாதிப்புற்ற சிவிலியன்களுடன் நேரடித் தொடர்பைக் கொண்டிருந்த சர்வதேச, அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டாளர்கள் வழங்கிய தகவல்கள் போதியளவு சரியான மூலங்களிலிருந்து பெறப்படவில்லையென்பது எமக்குக் கவலையளிப்பதாகவுள்ளது. இக்கவலை இப்பிராந்தியத்திலுள்ள சிவிலியன் நிர்வாகத்திலிருந்து கிடைத்த தரவுகளையும் உள்ளடக்குவதாகவுள்ளது. சரணடைய வந்த எல்.ரி.ரி.ஈ. அதிகாரிகளைக் கொன்றது சம்பந்தமான "வெள்ளைக்கொடி விவகாரம்", உயர் பாதுகாப்பு வலயங்களின் சட்டநிலைத்தகவு மற்றும் அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறும்வகையில் ஏறக்குறைய 300,000 சிவிலியன்களை மெனிக் பாம் முகாமிலும் ஏனைய இடங்களிலும் அடைத்துவைத்தமை என்பவையும், சமீபத்தில் வெளியிடப்பட்ட காணிச் சுற்றறிக்கையும் நல்லிணக்கத்தின் மீதும் மற்றும் யுத்தக் குற்றங்கள் சம்பந்தமான குற்றச்சாட்டுக்கள் மீதும் அவை கொண்டுள்ள தாக்கங்கள் காரணமாகப் பூரணமாக விசாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விடயங்கள் சம்பந்தமான நம்பிக்கையீனங்கள் ஒருபுறமிருக்க, தாமதமின்றி LLRC யின் பரிந்துரைகளை நேர்மையோடும், உண்மையில் பன்மைத்துவம் கொண்ட ஐக்கிய இலங்கை என்னும் அபிலாஷைக்குரிய குறியிலக்குக்கான அர்ப்பணிப்புணர்வுடனும் தாமதமின்றி நடைமுறைப்படுத்துமாறு நாம் இலங்கை அரசாங்கத்தை வேண்டிக்கொள்ளுகின்றோம். LLRC யின் அறிக்கை ஒரு நல்லிணக்கச் செயல்முறையின் ஆரம்பமென்றும், அதன் முடிவு அல்லவென்றும் நாம் நம்புகின்றோம். மேலும், இலங்கை அரசாங்கமே இச்செயல்முறையில் முன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று, குறிப்பாக அதிகாரப்பகிர்வு அடிப்படையிலான ஓர் அரசியல் மற்றும் அரசியலமைப்புத் தீர்வை எட்டவேண்டுமென்றும், இது "இனப்பிரச்சினை மற்றும் ஜனநாயக நிறுவனங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் ஏனைய பாரதூரமான பிரச்சினைகளுக்கும்" தீர்வாக அமைய வேண்டுமென்றும் இந்த ஆணைக்குழு மிகத்தெளிவாக எடுத்துரைக்கின்றது. ஏனைய விடயங்களைப் போலவே இது விடயத்திலும் LLRC யின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசாங்கத்தின் உறுதி உதாரண நிலையில் ஒரு பாரிய மாற்றத்தை அவசியப்படுத்துகின்றது என்பதையும் நாம் எடுத்துரைக்கின்றோம்.

இந்த விடயம் ஒரு தேசிய முன்னுரிமை விடயமாக மேற்கொள்ளப்படவேண்டுமென்று நாம் பலமாக வலியுறுத்துவதோடு, 2012இலும் அதற்கு அப்பாலும் காத்திரமான, எடுத்துக் காட்டக்கூடிய முன்னேற்றத்தைக் கொண்ட மீளிணக்கமும், வகைப்பொறுப்பும், மனித உரிமைகள் பாதுகாப்பும் இடம்பெறுமென்று எதிர்பார்க்கின்றோம். இது யுத்தத்துக்குப் பின்னர் என்ற நிலையிலிருந்து முரண்பாட்டு மோதலுக்குப் பின்னரான நிலைமை என்னும் ஒரு நிலைமாற்றத்துக்கும், அவை குறிப்பிடும் நிலையான சமாதானத்துக்கும், ஐக்கியத்துக்கும் தீர்மானகரமானதாகும்.

---

• வலையமைப்பினூடாக புகைப்படங்களை எடுக்கும் போது அதன் உள்ளடக்கத்தை அளிப்பதற்கு இயலுமானவரை முயற்சி செய்துள்ளோம். இருப்பினும் தவறுகள் ஏற்பட்டிருப்பின் அது தொடர்பாக வருந்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN : 978-955-1655-88-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org